# தமிழரசு

திங்கள் இருமுறை ஜூலை 16. 1971. 35 காசு




ஆகஸ்ட் 1உ முதல்

# அரசு விளம்பரங்கள் அனைத்தும்

(அரசு நிறுவனங்கள் - வாரியங்கள், கழகங்கள் விளம்பரங்கள் எல்லாம்)

# தமிழரசு இதழில்தான்

# வெளிவரும்

சிட் - டெண்டர் விளம்பரங்கள்

தமிழரசு தமிழ், ஆங்கில இதழ்களில் மட்டும்தான் இடம் பெறும்




# தமிழரசு

மலர் 2 16-7-1971 இதழ் 2

இந்த இதழில்

கல்விக்கு நாலில் ஒரு பங்கு
செக்கச் சிவந்த தக்காளி
ஏழைவீட்டுத் திருமணத்தைப்போல்
தமிழ் தந்த பரிசு
தலைவன் கட்டுகிறான் பாலம்
நெருப்புச் சிரிப்பு (கவிதை)
கேளுங்கள் கொடுக்கப்படும்
திருவாளர் பொன்மொழியார்
மாணவர் அரங்கம்
ஏன் இந்தக் காதல் (தொடர்கதை)
வெண்பாப் போட்டி

முதல்வர் எழுதும்

இனியவை இருபது




## 20. இனிது ! இனிது !!

அந்த இருபது நாட்கள்—இனிமையும் புதுமையும் பொங்கித் ததும்பிய அந்த இருபது நாட்கள்—பயனும் சுவையும் மிக்கதொரு சூழ்நிலையில் என்னை மிதக்கவிட்ட அந்த இருபது நாட்கள்—உருண்டோடி விட்டன.

அறைக்குள்ளே அமர்ந்து ஆயிரம் நூல்களைப் படிப்பதைக் காட்டிலும் ஒரு சிறிய நாட்டுக்குச்சென்று பார்த்து அங்குள்ள மக்களுடன் பழகுவது எவ்வாறு சிந்தனையை வளப்படுத்திச் சகிப்புத் தன்மையையும் பண்பாட்டையும் வளர்த்துப் பரந்த மனப்பான்மையினைப் பெருக்கிப் பயனளிக்கக் கூடும் என்பதனை என் பயணத்தின்போது நான் கண்டேன்.

காடென்றும் மேடென்றும் கடலென்றும் மலையென்றும் பாராது கடுங்குளிருக்கும் கதிரவனின் வெம்மைக்குமிடையே சித்தம் கலங்காது நீண்ட பயணங்களை மேற்கொண்ட மறவர்களைப் பற்றி வரலாற்றில் கேள்விப்பட்டிருக்கிறோம். புதிய நாடுகள், புதிய மனிதர்களைச் சந்திப்பதில் மனிதனுக்கு இயல்பாகவே ஆர்வம் உண்டு. தாம் வாழும் 'குண்டு சட்டியே குவலயம்' என்னும் குறுகிய நினைப்பு சிலருக்கு இருந்தபோதிலும் பல நாடுகளுக்குச் சென்று பல இடங்களையும் கண்டு அறிவினைப் பெருக்கிட வேண்டும் என்ற ஆர்வம் மனிதரில் பலருக்கு இருப்பது இயல்பே—பள்ளி செல்லும் கொழுந்துகள் முதல் பருவங்கள் முடிந்து பழுத்தவர்கள் வரை !

விஞ்ஞான வளர்ச்சியில் இயற்கையால் விளைந்த தடைகள் எல்லாம் பெரும்பாலும் தகர்க்கப்பட்டுவிட்டன. ''விசா''வும் ''பாஸ்போர்ட்''டும் தான் ஒரு

நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குத் தாராளமாகச் செல்ல இயலாத தடைக் கற்களாக இருக்கின்றன.

இன்றைய உலக சமூகப் பொருளாதார அரசியல் அமைப்பில் அவைகள் தவிர்க்கப்பட முடியாதவைகள் — எனினும் நானிலத்து மக்கள் அனைவரும் சகோதரரே என்ற நல்லுணர்வு பூத்து, வாழத் தொடங்கியுள்ளனர். அதன் அறிகுறிகள் நம் கண்ணில் தென்படாமல் இல்லை. உலகம் ஓர் பூக்காடாகி மனிதர்கள் அங்குத் தும்பிகளாகிப் பறக்கும் நாள் வந்தே தீரும்.

ஐந்து கண்டங்களையும் கண்டு, அதற்கு அப்பாலும் அண்ட வெளியில் மின்னுகின்ற கோள்களையும் சென்று காண வேண்டும் என்னும் ஓர் துடிப்பு—ஆசை—பரவியுள்ள இந்நாளில்— நான் கண்டு வந்தது ஒரு கண்டம் தான்—எனினும், அங்குக் கண்ட காட்சிகள், கேட்ட செய்திகள், பெற்ற படிப்பினைகள் இன்றும் என் இதயத்தில் பசுமையான நினைவுகளாகப்பதிந்திருக்கின்றன.

வீரம் செறிந்த ரோமாபுரியின் வரலாற்றுச் சுவடுகளையும், அதன் அழிவிற்குக் காரணமான நிகழ்ச்சிகளையும், அழிந்ததையும் நினைத்து ஏக்கமுறாமல் இன்று வளமாக அந்நாடு வாழ்வதும்,

பயங்கரப் போரினால் பாதிக்கப்பட்ட மேற்கு ஜெர்மனி குறுகிய காலத்தில் அற்புதமாக வளர்ந்திருக்கின்ற காட்சியும்,

இயற்கை அன்னையின் எழில் கொழிக்கும் சுவிஸ் நாடும்,

வையத்து நாடுகளின் ஆடம்பரமும் நாகரீகமும் கொட்டிக் கிடக்கும் பாரீஸ் நகரமும்,

கடலோடு போராடிப் போராடித் திண்மை பெற்ற ஹாலந்து நாடும்,

நவீன ஜனநாயகத்தின் பிறப்பிடம் என்றழைக்கப்படுகின்ற லண்டன் மாநகரும்

அனைத்தும் என்னைக் கவர்ந்தன.

அந்த நாடுகள் இடையூறுகளுக்கிடையேயும் வேகமாக முன்னேறியுள்ளன; செழுமை கொழிக்கிறது; மக்கள் வளமாக வாழ்கின்றனர். அங்கெல்லாம், ''இரப்பார் இன்மையால் இடுவோருமில்லை.'' பஞ்சாப் மாநிலத்தில் பிச்சைக்காரர்களே இல்லை என்பதைக் கண்டு வந்திருந்தும், மேலை நாடுகளிலும் இரப்போர் அறவே இல்லை என்பதைப் பார்த்த பின்னரும், ''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகியற்றியான்'' என்ற குறள் அறிந்த பிறகும், பிறந்த பொன்னாட்டில், வளம் கொழிக்கும் இந்த மண்ணில், 'சாலையோரத்தில் வேலையற்றது'களாய் வாழ வழியின்றிப் பிணி மூப்பால் அவதியுறும் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வேயில்லையா என்ற ஏக்கம் என் நெஞ்சைக் குலுக்கியது.

கண்டு, கேட்ட அனுபவங்களை, என் மனத்தில் மொண்டுவந்த உணர்ச்சிகளைப் பிறந்த பொன்னாட்டைச், சீரிளமைத்திறம் குன்றாச் செந்தமிழ் மண்ணை வளமாக்கப் பயன்படுத்திட வேண்டும் என்ற ஆர்வந்தான் எனக்கு மிகுந்தது!

மேலை நாடுகள் மகத்தான வளர்ச்சியைப் பெற்றதற்குக் காரணம் அந்நாட்டு மக்களின் கடுமையான உழைப்புத்தான். ஓயாது உழைக்கவும் உழைப்பவர்களைப் போற்றவும் கற்றாலன்றி முன்னேற்றப் பாதையில் யாரும் விரைந்துசெல்லஇயலாது.

# முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

மேலை நாட்டு மக்கள் கடுமையாக உழைப்பதோடு, உழைப்பால் பெற்ற ஊதியத்தின் ஒரு பகுதியை ஓய்வு நாட்களில் புதிய இடங்களைச் சென்றுகண்டு உடலுக்கும் உள்ளத்திற்கும் புத்துணர்ச்சி பெறப் பயன்படுத்தும் மனப்பக்குவத்தினையும் பெற்றிருக்கின்றனர். இதனால் அவர்கள் உள்ளமும் உடலும் உறுதி பெறுகின்றன. சுற்றுலா மூலம் அந்த நாடுகளின் வருமானமும் பெருகுகிறது. பழைய நினைவுச் சின்னமானாலும் நவீனப் பூங்காவானாலும் அங்கெல்லாம் அயல் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கில் பயணிகளாக வருகின்றனர். அவை மக்களைக் கவரத்தக்க வகையில் பேணிப் பாதுகாக்கின்றன அந்தந்த அரசுகள்.

இந்தியாவிலும், அதன் ஒரு பகுதியான இன்பத் தமிழகத்திலும், அத்தகைய இயற்கைச் செல்வங்களும் செயற்கைக் கோலங்களும் இல்லாமலில்லை. குளிர் அருவி பொங்குகின்ற குற்றாலமும், குறிஞ்சித் தேன் பாய்கின்ற கொடைக்கானலும், உள்ளத்தை அள்ளுகின்ற உதகையும், தமிழகத்தின் திறமைக்கும் நாகரீகத்திற்கும் சான்று கூறும் எழிலார்ந்த கோவில்களும், வற்றாத எழில்மிக்க காஞ்சியும், கடல் மல்லையும், திராவிடக் கட்டடக் கலையின் திறமையெல்லாம் மிளிர்கின்ற இராமேசுவரக் கோயிலும், இந்தப் பட்டியலில் சமீபத்தில் சேர்ந்த அண்ணா சதுக்கமும் இங்கிருந்தும், போதிய விளம்பரம் இல்லாமையால், வெளிநாட்டாரின் விழிகளில் அவைகள் விழவில்லை.



16-7—1எ

நமது தமிழகத்தின் எழிலைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் பேரறிஞர் அண்ணா எழுதியிருப்பது என் நினைவிற்கு வருகிறது . . .

'' சேல் குதிக்கும் மலர்ச் சோலை! தேன் குதிக்கும் நான்கு திக்கும் என்று கூறப் பட்டிருப்பது மொழியின் அழகுக்கு மட்டுமல்ல, தமிழ் நிலத்தின் எழிலுக்கும் முற்றிலும் பொருத்தம்தான்.

எரிமலை இல்லை. நீர்வீழ்ச்சி உண்டு! பாலைவனமில்லை, சோலைவனம் எங்கும்!

பச்சை மாமலைகள்
பாங்கான காட்சிகள்
பாடும் அருவி
பயமற்ற மிருகங்கள்
ஓங்கி வளர்ந்த மரங்கள்
தேக்கங்கள், தேனாறுகள்

இவை தமிழகத்தின் எழிலுக்கு எடுத்துக் காட்டுகள் '' என்று.

இப்படி எழிலார்ந்த பூமி— தொல்புகழ் மிக்க வரலாற்றைச் சொந்தமாகக் கொண்டது. இந்த மண்ணில் சுற்றுலா வளர்ச்சியைக் காணல் அரிதன்று! நம் முயற்சிகளை விரைவில் செயல்படுத்தினால் மேலை நாடுகளுக்கு இணையாக இத் துறையில் வளர முடியும்.

வரலாற்றுப் பெருமை மிக்க நம் நாட்டில், சுற்றுலாத் துறை வளர வேண்டிய அளவுக்கு இன்னும் வளரவில்லை. குறிப்பாகத் தென்னகத்தில் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்காக எல்லா முயற்சிகளையும் விரைந்து செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவு இன்று தமிழகத்தில் சுற்றுலாத் துறை அமைச்சரும், சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், சுற்றுலா வளர்ச்சி இயக்குநர் அலுவலகமும் அமைவதற்கு அடிகோலிற்று.

மேலை நாடுகளில் அவ்வரசுகள் இயற்கைக் காட்சிகள், பார்க்கத் தகுந்த இடங்கள் அனைத்தையும் பல வண்ணங்களில் அஞ்சல் அட்டைகளில் அச்சேற்றி விற்கின்றன. அது சுற்றுலாப் பயணிகளை மெத்தவும் கவர்கிறது. அந்த விளம்பரத்தை நாம் அனைத்திந்திய அளவில் கடைப்பிடிக்கவேண்டுமெனில் அஞ்சல் துறை மூலமாக இந்தியா முழுமைக்கும் பரவலாகச் செயல்படுத்தலாம் என்ற எண்ணம் என்னுள் வலுப்பெற்றது.

பயணத்திற்கு மணி மகுடமாக அமைந்த அரிய நிகழ்ச்சி

பாரிஸ் விமான நிலையத்தின் வரவேற்புக் கூடத்தில் முதல்வரும் அவரது குழுவினரும்





ஜெர்மனியில் உள்ள கோலன் நகரில், மின்னியல் முறை [எலக்ட்ரானிக்]யில் பயிர் அறுவடை ஆகும் காட்சியை முதல்வர் காணகிறார்.

'பாரி மாநகரில்' நான் கலந்துகொண்ட மூன்றாம் உலகத் தமிழ் மாநாடாகும். தேமதுரத் தமிழோசையை வெளிநாடொன்றில் பெருமையுடன் கேட்கின்ற பேற்றினை நான் பெற்றேன். முடிசூடி, புகழ் சூடி, முத்தமிழ் மீண்டும் முது வையம் ஆளுகின்ற நேரம் நெருங்குகின்றதோ என்ற ஆசை உணர்வுகள் அகத்தில் பூத்து, அவற்றில் விளைந்த தேன் என் நெஞ்செல்லாம் படர்ந்து இனித்தது. பன்னாட்டவர் கூடி ஆராய்கின்ற பெருமையினை வேறு எம்மொழியேனும் பெற்றுள்ளதோ என்று எண்ணி வியந்திட்டேன். என்னுயிர்ச் செந்தமிழ் என்றும் வாழ்ந்திட என்னால் இயன்றதைச் செய்யச் சூளுரை கொண்டேன்.

ஐரோப்பிய நாடுகளில் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறின்றி, அதிக அதிகாரங்களுடன் மாநிலங்கள் செயலாற்றுகின்ற திறனை, அது போன்ற அரசியல் அமைப்பால், மாநிலங்கள் முன்னேறுகின்ற பாங்கினை, மக்களின் ஒற்றுமை மேலும் வலுவடைந்திருக்கின்ற மாண்பினை நம் நாட்டிலும் காணும் நாள் தொலைவில் இல்லை என்ற எண்ணமும் என் மனத்திரையில் காட்சியாகியது.

வற்றாத ஆறு, வளமான பூமி! பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் தங்கம், நிலக்கரி, எண்ணெய்! இப்படிப் பல வளமும் கொழிக்கும் இந்த நாட்டில் வறுமை! ஏனிந்த நிலைமை ?

மக்கள் பெருக்கம் ஒரு காரணம் என்றாலும், மைய அளவிலும் மாநில அளவிலும் திறம்படத் திட்டங்களைத் தீட்டிக் கடுமையாக எல்லாரும் உழைப்போமேயானால் வறுமையை விரைவில் போக்கிட இயலும் என்ற நம்பிக்கை என் மனத்தில் எழுந்தது.

தொழில்களைத் தனியாரும் மாநில அரசுகளும் துவக்குவதில் காலதாமதம் ஏற்படுத்தும் நடைமுறைச் சிக்கல்களைப் போக்கினால் முன்னேற்றத்தை விரைவில் காண இயலும் என்ற நம்பிக்கையும் வளர்ந்தது. விவசாயமும் தொழிலும் ஒருங்கே வளரவேண்டும். இப்படிப் பல எண்ண அலைகள் என் மேலை நாட்டு அனுபவம் என்ற கரையில் மோதி மோதிக் கரைந்தன.

அந்த இருபது நாட்கள்—
அவை இனியவைதாம் !

எனினும் முத்துமாலையினூடே பொன்னிழை ஓடுவதைப் போல்துன்ப உணர்வு ஒன்றினைப் பெற வேண்டிய சந்தர்ப்பமும் எனக்கு நேர்ந்தது.

என்னுடைய சுற்றுப் பயணத்தைப் பற்றியும், செல்லும் இடங்களில் எல்லாம் தரப்படும் அயல் நாட்டு அமைச்சர்களின் மதிப்பும் கனிவும் மிக்க வார்த்தைகளைப் பற்றியும், என் மேலைநாட்டுப் பயணத்தின்போது இந்தியப் பத்திரிகைகள் உன்னிப்பாகக் கவனித்து நல்லமுறையில் விமர்சித்துள்ளன என்றெல்



ஜெர்மனி நாட்டின் அந்நியச் செலாவணியை அதிகரிக்க உதவும் கார் தயாரிப்புக் கூடத்தில்—கார்களின் அணிவகுப்புக் காட்சி.

லாம் எழுதிவிட்டு, உலகத் தமிழ் மாநாட்டில் நான் கலந்து கொள்ளப் போவதைப் பற்றியும் புகழ்ந்துரைத்து விட்டு, இறுதியில், இவற்றையெல்லாம் பார்த்துத் தம்பியின் புகழ் கண்டு இரசிக்க அண்ணன் இல்லையே என்று கடிதத்தை முடித்திருந்தார் தமிழக நண்பர் ஒருவர். அந்தக் கடைசி வரிகள் என் கண்களில் நீரைப் பொழிய வைத்தன. என் அன்னைக்குப் பிறகு அன்னையாய் விளங்கிய அண்ணனும் இல்லையென்று அவர் சுட்டிக் காட்டினால் என் உணர்ச்சிகளை எப்படிக் கட்டுப் படுத்திட முடியும்!

என்னை எதிர் கொண்டு அழைக்கச் சென்னையிலிருந்து பம்பாய் வந்திருந்த நண்பர்களுடன் சாந்தாகுரூஸ் விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்ட விமானம் பகல் 2-15 மணிக்குத் தமிழகத் தலைநகரின் வானில் தவழ்ந்து கொண்டிருந்தது.

மேலே—

வெள்ளிக் கதிரவனின் ஒள்ளிய கதிர்களில் வெண் பஞ்சுக் கூட்டமென மின்னிக் கொண்டிருந்தன மேகங்கள்!

கீழே—

கன்னங்கரிய வங்கக் கடல், அலை வீசி என் வரவை எதிர் நோக்கி இருந்தது. கடலல்ல அது ! என்னைக் காண வந்த தோழர்களின் உற்சாக வெள்ளம்தான் அது! இடமோ மீனம் பாக்கம் விமான நிலையம்!

“ அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் ” என்னும் குறள் வரிகள் என் சிந்தனையில் மின்னி என் கண்களைக் குளமாக்கிப் பார்வையையும் மறைத்தன !

"என்னை அடிமை கொண்ட அன்பு உள்ளங்களே! உங்கள் அடிதொழுது விடைபெறுகிறேன், விரைவில் திரும்பி வந்து உங்களை மீண்டும் சந்திக்கிறேன்" என்று கூறிச் சென்னை விமான நிலையத்தில் நான் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்ட காட்சியைத் தான் மறக்க முடியுமா?

ஆல்ப்ஸ் மலையின் அழகுச் சிகரங்களில் காணமுடியாத குளுமையினைத் தம் ஆயிரம் ஆயிரம் விழிகளில் தேக்கிக் கொண்டு இங்கு விமான நிலையத்தில் கூடியிருக்கும் அன்புச் சகோதரர்களின் பாச வலையில் கட்டுண்டவனாய் விமானத்திலிருந்து கீழே இறங்கிக் கன்னித் தமிழ் மண்ணில் மீண்டும் கால் வைத்தேன்.

வழியெல்லாம் நான் கண்ட வளைவுகளும் வரவேற்புப் பதாகைகளும் என்னை ஆளாக்கிய அண்ணனின் அன்புக் கரங்களாகவே எனக்குத் தோன்றின.

இல்லம் செல்வதற்கு முன்னால், அண்ணன் துயில் புரியும் வங்கக் கடற்கரைக்குச் சென்றேன்.

நள்ளிரவு நேரமானாலும் இலட்சக்கணக்கானோர் காத்து நிற்கப் பழந்தமிழகத்தின் பட்டி தொட்டிதோறும் பகுத்தறிவுப் பயணம் நடத்திய அண்ணனின் கல்லறை முன்னால்—

பசுவைக் காணவந்த கன்று போல நின்றேன்.

என் இதயம் இருபது நாட்களாகச் சுமந்துவந்த பயணத்தின் நினைவுகளை அவர் செவிகளில் உணர்த்திவிட்டேன்—மௌனம் என்னும் மொழியால்.



நெதர்லாந்து நாட்டில்—இயந்திரங்களின் உதவியினால் பசுக்களிடமிருந்து பால் கறக்கும் காட்சி.

இந்த இருபது நாள் பயணத்தின் இனிமையையெல்லாம் நான் பேசுகின்ற கூட்டங்களில் எடுத்துரைக்க வேண்டும் என்ற துடிப்பு, உள்ளத்தில் எழுந்தாலும், மற்றுமோர் எண்ணம் அதற்கு அணை போட்டது; அதற்குக் காரணம் உண்டு!

இங்கிலாந்து அரசு என்னைத் தனது நாட்டிற்கு அழைத்த பொழுது சுற்றுலாவிற்கான செலவினைத் தானே ஏற்றுக் கொள்ள விழைந்தது. ஆனால், விருந்தினராகச் செல்லும் அமைச்சர் போன்றோரின் பயணச் செலவினை அந்தந்த அரசே மேற்கொள்ள வேண்டும் என்று அண்மைக்காலமாக இந்திய அரசு கடைப்பிடித்து வரும் மரபினை ஒட்டி, அரசாங்கச் செலவிலேயே நான் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள நேரிட்டது. இந்த "நன்றிக் கடனை" ஓரளவு தீர்க்க, என்னுடைய பயண அனுபவங்களை மேடைகளில் கூறாது, அரசாங்க ஏடான "தமிழரசு" வாயிலாக வெளியிட்டு முடித்திருக்கிறேன்.

வணக்கம்.

(முற்றும்)


சிறுசேமிப்பு
இன்றைய சேமிப்பு
நாளைய பாதுகாப்பு!
நாட்டுக்கும் வீட்டுக்கும்
நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே தூற்ற வேண்டும் காசுள்ளபோதே சேர்க்க வேண்டுமல்லவா?
சிறுசேமிப்பு
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க!
இயக்குநர்
சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9

சரமாரிக் கேள்வி ! சமத்காரப் பதில்!

இலண்டன் நிருபர்கள் கேட்டுள்ள வினாக்களுக்கு மிக அருமையாக விடை தந்திருக்கிறார் நமது மாநில முதல்வர் என்பதை அவரது 'இனியவை இருபது' தெளிவாக்கியிருக்கிறது. அடேயப்பா ! சரமாரியான கேள்விகள் ! சமத்காரமான பதில்கள் ! படிக்கப் படிக்கச் சுவை தருகின்றன.

—எம். எஸ். விவேகானந்தன்,
எட்டையாபுரம்.

வழிகாட்டும் தமிழ் நாடு !

அனைத்து இந்திய அளவில் மிகச் சிறந்த கிராமமாகத் தமிழ் நாட்டிலுள்ள 'மணவாளக் குறிச்சி' என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் பரிசு பெற்றுள்ளது. தமிழ்நாட்டிற்கு இதனினும் வேறு புகழ் வேண்டுமா ? இதன் வாயிலாகத் தமிழ் நாடு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது என்பது விளங்குகிறது.

—கே. எஸ். கலியபெருமாள்,
கட்டமுத்துப்பாளையம்.

நிதி அறிக்கைக்கு நன்றி!

நாட்டினர் தாம் போற்றும் நிதி அறிக்கை பொன்னுனை ஏட்டிலே தந்திட்டீர் நன்றி.

—ஏ.கே. கருப்பையா, குளித்தலை.




தக்ககல் தக்கைக்கல்!

தக்கைக்கல் என்று ஒரு வகைக்கல் இருப்பதை நாங்கள் இதுவரை அறிந்ததில்லை. 'தமிழரசு' ஜூலை முதல் தேதி இதழைப் படித்துத்தான் தெரிந்து கொண்டோம். 'தமிழரசு'க்கு நன்றி ; ஏற்றுக்கொள்ளுக !

—ஸ்டெல்லா, சென்னை-33.

பெண்ணின் பெருமை!

பனிமலை மீது பயணம் செய்த பாவை ஹேமாவைப் பற்றிய கட்டுரை சுவையாக இருந்தது. புராண காலத்திலும் சரி இந்த நவீன காலத்திலும் சரி பெண்கள் வல்லவர்கள் என்ற தத்துவத்தை விளக்கிக் காட்டும் ஹேமாவுக்கு எங்கள் பெண் இனத்தின் சார்பாக நன்றியைத் 'தமிழரசின்' வாயிலாகத் தெரிவிக்கிறோம்.

—லதா, லலிதா,
கோயம்புத்தூர்—3.

மேதைகளைத் தருக!

நாளைய தலைமுறை என்ற தலைப்பில் தாமஸ் ஆல்வா எடிசன் பற்றிவெளியாகிஇருந்த கட்டுரை சுவையாக இருந்தது. மேதைகளின் வாழ்க்கை வரலாற்றை அடிக்கடி 'தமிழரசு' படைக்க வேண்டும் என்று வாசகர்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

—சுந்தரராசன், சென்னை-48.

இரண்டாம் வயது வாழ்த்து!

திரண்ட கருத்தை அழகாகச்
செப்பும் இதழாய் ஓராண்டு
உருண்டேஎழிலாய் நடைபோடும்
உயர்ந்த இதழே ! தமிழரசே !
இரண்டாம் ஆண்டில் அடி
யெடுத்து
இனிதாய்வந்துளாய் வாழியவே !
வறண்ட பயிர்க்கோர் பெரு
மழைபோல்
வடிவாய் என்றும் வாழியவே !

—வித்துவான் நெல்லை
ஆ. கணபதி,
—வித்துவான் ஆ. சுப்பு
லட்சுமி கணபதி,
சென்னை—15.

## வெண்பாப் போட்டி-14

ஈற்றடி : நிலையை ஒழிக்க நினை

முடிவு நாள் 2—8—1971

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு.

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா!



# உணவுக் களஞ்சியம்

நல்ல 'உணவுக் களஞ்சியங்களாக'வும், 'உர உற்பத்திச் சாலைகளாகவும், 'உழைப்பின் சின்னங்களாகவும்' விளங்கும் கால்நடைகளின் பெருமைகளைப் பலர் இன்னும் அறியாமல் இருக்கிறோம் என்பது மட்டுமல்ல—அவற்றை நன்கு பேணிக்காப்பதில் போதுமான அளவு அக்கறை காட்டாமலும் இருந்து வருகிறோம் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

பட்டிதொட்டிகளிலும் சிற்றூர்களிலும் வாழ்கின்ற மக்களுக்குக் கால்நடைகளே சிறந்த செல்வங்கள். எனினும், அவற்றிற்கு வந்த நோயைப் போக்கவும், நோய் வராமல் பாதுகாக்கவும் வழிவகையறியாமல், அவற்றால் பெறக்கூடிய முழுப்பயனையும் பெற முடியாமல் கால்நடை வளர்ப்புப் பற்றிய அறிவியலறிவு இல்லாமல்—அதனைப் பெறுதற்கான அக்கறையுமில்லாமல் பெரும்பான்மையானவர்கள் வாழ்கின்ற நிலைமையை நாம் கண்டு வருகிறோம். கால்நடைகளின் வளர்ச்சியிலும், அவற்றின் நல்வாழ்விலும் அக்கறை காட்டுவதன் மூலம்-வீடும் நாடும் நலம் பெறும்! வாழ்வு வளம் பெறும்! இந்த நாட்டில் உணவுப் பற்றாக்குறை நீங்கும்-நல்ல சத்துணவு கிடைக்கும்-சிற்றூர்களும் பேரூர்களும் நல்ல செல்வச் செழுமை பெறும்.

மேலே குறித்துள்ள இந்தப் பேருண்மைகளைச் சாமான்ய அறிவினர்க்கும் உணர்த்தும் பெரும் பணியையும், பொறுப்பையும் ஏற்றுள்ளதுதான் நமது தமிழக அரசின் கால்நடை வளர்ச்சித் துறை. இத்துறையினர் ஆங்காங்கு பல்வேறு கிராமங்களிலும் கிராம கால்நடை வளர்ச்சி முகாம்களை நடத்தி வருகின்றனர்.

இவ்வகையில் அண்மையில் 18—6—71-ல் செங்கற்பட்டு மாவட்டம் படப்பை கால்நடை மருந்தகத்தில் தமிழ் நாடு கால்நடை வளர்ப்புத் துறையினர் கால்நடை வளர்ச்சி முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

## உர உற்பத்திச் சாலை

தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறையமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் முகாமைத் துவக்கி வைத்து, முகாமின் இன்றியமையாத் தன்மையையும், மக்கள் பெறத்தக்க பெரும் பயன்களையும் எளிதாக—தெளிவாக எடுத்துக் கூறினார். பின்னர்,

''இன்று நம்மைச் சுற்றிச் சூழ்ந்துள்ள சிலந்திக்கூடு போன்ற வறுமைக் கூட்டத்தைத் தகர்த்தெறிய நாம் நல்ல தரமான ஆடு, மாடு, கோழி, பன்றி முதலியவற்றை வளர்க்க வேண்டும்'' என்றும், ''வளரும் உயிரினங்களை வளர்த்து, உற்பத்தியைப் பெருக்கினால் பஞ்சம், பசி, பட்டினி யாவும் பறந்து, நாட்டிலே வேலை வாய்ப்புக்கள் பெருகும்'' என்றும், ''இ[ப்]பகுதி வாழும் மக்களிடை[யே] கால்நடை வளர்ப்புப் பற்றி[ய] அறிவையும் ஆர்வத்தையும் கி[ள]றித் தூண்டிவிட இந்த முகாமு[ம்] இங்கு ஏற்படுத்தப்பட்டுள்[ள] கண்காட்சியும் பயன்படுமா[று] செய்யத் தொடர்புடைய அ[லு]வலர்கள் அனைவரும் பெருமுயற்[சி] எடுத்துக்கொள்ள வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டா[ர்]கள்.

முகாமில் ஏற்பாடு செய்ய[ப்]பட்டு இருந்த கிராமக் கா[ல்]நடைக் கண்காட்சியைச் சட்[ட]மன்ற உறுப்பினர் திரு. கோபா[ல்] திறந்துவைத்தார்.

கால்நடை வளர்ப்பதில் ஈ[டு]பட்டுள்ளவர்களும், அதில் ஈ[டு]பட விருப்பமுடையவர்களு[ம்] அறிந்துகொள்ள வேண்டிய பல்வேறு செய்திகளையும், செய[ல்] முறைகளையும், எல்லாரும் எ[ளி]தில் புரிந்து கொள்ளத்தக்[க] வகையில் கண்காட்சி ஏற்பா[டு] செய்யப்பட்டிருந்தது.

கால்நடைகளைப் பற்றக்கூடி[ய] நோய்களையும், அந்நோய் வரா[]மல் தடுக்கும் வழிவகைகளையு[ம்] நோய் வந்தபின் செய்ய வேண்[டி]டிய சிகிச்சை முறைகளையும் கால்நடைகளால் நாம் பெற[த்] தக்க பெரும்பயன்களையும், கா[ல்]

## உழைப்பின் வெற்றி



டை வளர்ச்சித் திட்டப் பயன்களையும் யாவரும் எளிதில் புரிந்து கொள்ளத் தக்கவகையில் கண்காட்சி அமைந்திருந்தது.

கால் நடைகளிடமிருந்து நாம் பெறுவது மிகமிக அதிகம் என்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரம் நமக்கு உறுதிப்படுத்துகிறது. ஆண்டுதோறும் நாம் நமது தமிழ் நாட்டில் கால்நடைகளின் மூலம் பெறுகிற வருமானம் பின்வருமாறு;—

பால் 9,071 இலட்சம் ரூபாய். பால் பொருள்கள் 346.16 இலட்சம் ரூபாய். கோழி இறைச்சி, முட்டை 1,007. இலட்சம் ரூபாய். மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றிறைச்சி 55. இலட்சம் ரூபாய். உரோமம், கம்பளம், மாட்டுத்தோல், ஆட்டுத்தோல் 239. இலட்ச ரூபாய். எரு, கொம்பு, எலும்பு 675.84 இலட்சம் ரூபாய்.

அடுத்து, கால்நடை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கது செயற்கைக் கருவூட்டல். ஆம்! கலப்பின மாடுகள், கோழிகள் முதலியன.

அதிகப் பால் தருகிற திறன் கொண்ட அயல்நாட்டு பிரிசியன், ஜெர்ஸ் போன்ற உயர்தர-உயரினக் காளைகளைக் கொண்டு செயற்கை முறையில் கலப்பின மாடுகளை உற்பத்தி செய்கிற கால்நடை வளர்ச்சித் துறையின் சாதனை பாராட்டத் தக்கதாகும். இதன் மூலம், விவசாயிகள் தனித் தனியே காளை வளர்க்க வேண்டிய அவசியமும், சிரமம் இல்லாமற் போகிறது. தரம் குறையாமல் இனத்தைப் பாதுகாக்க முடிகிறது. பசுக்களுக்கு நோய் பரவாமல் தடுக்க முடிகிறது.

இனி கோழி வளர்ப்புப் பற்றியும் பல நுணுக்கமான இன்றியமையாத செய்திகளை நாம் கண்காட்சியிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. சாதாரணமாக ஒருவர் 100 கோழிகள் வளர்த்தால் அந்தக் கோழிகளுக்குச் செலவாகிற எல்லாச் செலவுகளும் நீங்கலாக, மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் இலாபம் பெறலாம். 'பெட்டைகளைப் பேணி முட்டைகளைச் சேமி' என்று ஒரு 'புது மொழி'யையே உருவாக்கியிருக்கிறார்கள். கோழி வளர்ப்புப் பிரிவில், ஒரு விசித்திரமான கோழி இனத்தை நாங்கள் கண்டு மகிழ்ந்தோம்.



ஒயிட்லெக்கன் என்னும் ஒரு வகை ஆஸ்திரேலிய கோழியினத்தை நாம் அறிவோம். அந்தக் கோழி நல்ல தூய வெண்ணிறமுடையது. இது குறைந்த அளவுத் தீனியைத் தின்று நிறைந்த அளவு முட்டைகளையிடுவது. வெள்ளைக் கோழி கொள்ளை இலாபம் என்பார்கள்.

இதுபோலவே, ஆஸ்திரேலியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு கோழியினம் ஆஸ்டிரலார்ப் என்பது. ஆஸ்டிரலார்ப் கோழிகள் கொல்லைப்புறத்திலும், குப்பையிலும் சிந்திக் கிடக்கும் தீனியைத் தின்று வளர்ந்து ஏராளமான முட்டைகளையிட்டுத் தருவது. இது மைபோன்ற கறுப்பு நிறமுடையது.



மேற்கூறிய வெள்ளைக் கோழியையும் அடுத்துக் கூறிய கறுப்புக் கோழியையும் இணைத்து அதன் மூலம் தோற்றுவிக்கும் புதிய கலப்பினமே ஆஸ்ட்ரோ வெள்ளை யினம் என்பது.

இந்த ஆஸ்ட்ரோ வெள்ளை யினம் கறுப்பு நிறப் புள்ளிகளையுடைய வெள்ளைநிறக் கோழியாக உள்ளது. இது, தான் இட்ட முட்டைகளைத் தானே தனது அலகால் கொத்தி உடைத்து நாசம் செய்துவிடுமாம். இதைத் தவிர்க்க இந்தக் கோழியின் மேலலகு நுனியை உடைத்து விட்டிருக்கிறார்கள்.

இனி, இன்னொரு முக்கியமான செய்தியையும் நாம் தெரிந்து கொள்கிறோம். அதாவது, பயனற்றவை என்று கருதி ஒதுக்கிக் குப்பையில் கொட்டுகிற கோழி இறகுகள் மெத்தையில் அடைக்கவும், கால்நடைத் தீவனத்திற்கான உணவு மாவு தயாரிக்கவும் பயன்படுகின்றன என்பதும், கோழியின் இரத்தம், தலை, கால்கள் முதலியன பூனை, நாய், பன்றி, மீன் ஆகியவற்றிற்கு உணவாகின்றன என்பதும் நம்மில் பலருக்குப் புதிய செய்திதானே!

அடுத்துபசுவுக்குநல்ல சத்தூட்ட உணவாகப் பயன் படுகிற புல் வளர்ப்பது. சாதாரணமாக ஒரு ஏக்கரில் இந்தப் புல்லை 1 லட்சம் ராத்தல் மகசூல் செய்யலாமாம். இதனைப் பயிரிடுவதற்கான செலவு 500 ரூபாய். இந்தப் புல்லைக் கொண்டு மூன்று கறவைப் பசுக்களையும் ஒரு பால் வற்றிய பசுவையும் பராமரிக்கலாம். பசுக்களிலிருந்து நாள்தோறும் கிடைக்கும் பால் 15 லிட்டர். இதனால் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூபாய் 4,380. மூன்று பசுக்களையும் பராமரிக்கும் மொத்தச் செலவு ரூ. 1,520. புல் பண்ணை வைத்து மூன்று பசுக்களையும் பராமரிப்பவர் பெறுகிற நிகர லாபம் ரூ. 2,860. இத்தகைய பல்வேறு செய்திகளை நாம் கண்காட்சியிலிருந்து தெரிந்து கொள்கிறோம். இதுபோல ஆடு வளர்ப்பு,

பன்றி வளர்ப்புப் பற்றியும், பல்வேறு உண்மைகளையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

பொதுவாக, நம்மில் பலருக்குப் பன்றியின் சிறப்புத் தெரிவதில்லை. சீமைப் (யார்க்ஷயர்) பன்றி மிக நல்ல இலாபம் தரும் ஒன்று. குறைந்த செலவில் நிறைந்த இலாபம் பெற எண்ணுகிறவர்கள் பன்றி வளர்ப்பில் அக்கறை செலுத்தலாம். இதனை இழிவென எவரும் கருதவேண்டியதில்லை.

கண்காட்சியைப் பார்ப்பவர்கள் கால்நடை வளர்ச்சித் துறையின் அளப்பரிய சாதனைகளை எண்ணி வியக்காமலிருக்க முடியாது! விவசாயிகள் மட்டுமல்ல-வேறு பலரும் கால்நடை வளர்ப்பதை ஒரு துணைத் தொழிலாகக் கூட மேற்கொள்ளலாம். அது, நாட்டையும் வீட்டையும் பல்லாற்றானும் வளர்க்கப் பயன்படும்.

கொத்தித் திரியும் அந்தக்
கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா.

* * * *

பாலைப் பொழிந்துதரும்
பாப்பா—அந்தப்
பசுமிக நல்லதடி
பாப்பா.

* * * *

..................நெல்
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை
ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

* * * *

என்கிற பாரதியாரின் பாடல் வரிகளும்

நிறையப் பால்தரும்
கறவை—நீ
மறவேல் அதன்
உறவை

என்னும் பாரதிதாசனின் கவிதை வரிகளும்,

குறு நொய்யும் தவிடும் பெட்டைக்
கோழி தின்கின் றவற்றை மாற்றி
வறுமை தீர் வழியில் செல்வம்
வாய்த்திட்ட முட்டை நல்கும்

* * * *

நாடுகள் மதிக்கச் செல்வம்
நாடொறும் பெருகக் காளை
உழுதுநீர் இறைக்கும் வண்டி
ஓய்விலா திழுக்கும்......

என்னும் புதுமைக் கவிஞர்களின் பாடல்களும் கால்நடைக் கண்காட்சியில் இலக்கிய விருந்தாக அமைந்து இன்பம் பயக்கின்றன.

விழாவில் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட நெல் அறுவடைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். பின்னர், புறக்கடை கோழித்திட்டத்தின்கீழ் கோழிகளும், ஒருநாள் கோழிக் குஞ்சுகளும், மாடுகள் கடன் வழங்குத் திட்டத்தின்கீழ் மாடுகளும், மாண்டியா செம்மறியாடுகளும், ஆண் பன்றிகளும் வழங்கினார்கள்.

தமிழரசு
சந்தா
ஓர் ஆண்டு ரூ. 8.00
அரை ஆண்டு ரூ. 4.00
தனிப்பிரதி 35 காசுகள்
விவரங்களுக்கு
நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2

தமிழரசு
ஆகஸ்ட் 1ல்
இதழுடன்
அளிக்கும்
இலவச இணைப்பு
நமது விளக்கம்






**எஸ். வி. சிட்டிபாபு** (பள்ளிக் கல்வி இயக்குநர்)

தென்றலுடன் பிறந்த தமிழ் மணக்கும் தமிழகம் படிப்படியாக வளர்கிறது; தொடர்ந்து வளர்கிறது. வளர்ச்சிக்கு அடிப்படை, கல்வி. இம்மை பயப்பதும், மம்மர் அறுப்பதும் கல்வி அன்றோ? அதை நாம் உணர்வோம்—நமது அரசும் அறியும். கல்வியில் சிறந்த தமிழ் நாட்டில் மேலும் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் பல பொன்னொளி வீசும் வகையில் கல்வித் துறை வரலாற்றில் காணக் கிடக்கின்றன.

எல்லாருக்கும் கல்வி. அதுவும் பல்கலைக் கழக புகுமுக வகுப்பு வரை யாவருக்கும் இப்பொழுது இலவசக் கல்வி; துவக்கப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், போன்ற கல்விக்கூடங்கள் அனைத்திலும் கணிசமான வளர்ச்சியைக் காண்கிறோம்.

''தெருவெல்லாம் இரண்டொரு பள்ளி'' என்றார் பாரதியார். 300 மக்கள் தொகை கொண்ட எல்லா ஊர்களிலும் இப்பொழுது தமிழ் நாட்டில் பள்ளிகள் உள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 724 துவக்க, உயர் துவக்கப் பள்ளிகளும், 263 உயர் நிலைப் பள்ளிகளும் திறக்கப் பட்டுள்ளன. 1967-ஆம் ஆண்டில் இருந்ததை விட துவக்க, உயர் துவக்கப்பள்ளிகளில் மட்டும் சுமார் எட்டு இலட்சம் மாணவர்கள் அதிகமாகப் பயிலுகின்றனர். 6—11 வயதுப் பிள்ளைகளில் 94.1 சதவிகிதமும், 11—14 வயதுக் குழுவினரில் 55.1 சதவிகிதமும், 11—17 வயதுக்குழுவினரில் 35.4 சதவிகிதமும் இப்பொழுது கல்விக் கூடங்களில் பயின்று வருகின்றனர்.

1966-ஆம் ஆண்டு இருந்ததை விட மற்றொரு பங்கு அதிகமான மாணவர்கள் கல்லூரிகளில் படிக்க வசதி ஏற்பட்டுள்ளது. 1966-ஆம் ஆண்டில் 80,000 மாணவர்கள்தான் இருந்தனர். இன்றோ 1,66,000 மாணவர்கள் கல்லூரியில் பயிலுகின்றனர். நாடு சுதந்திரமடைந்த இரு தலைமுறைகளுக்குப் பின் அதாவது 1967-ல் நமது மாநிலத்தில் 105 கல்லூரிகள்தான் இருந்தன. ஆனால் கடந்த ஆண்டுகளில் மட்டும் 56 புதுக் கல்லூரிகள் துவக்கப்பட்டு இன்று நமது மாநிலத்தில் 161 கல்லூரிகள் இருக்கின்றன.

தொடர்ந்து கல்லூரியில் படிப்பதற்கு வசதியற்றுப் படிப்பை நிறுத்திவிட்டுப் பணியில் புகுந்தோருக்கும் கல்லூரிக் கல்வி பெற விரும்பும் மற்றோர்க்கும் மாலைக் கல்லூரிகள் (Evening Colleges) மூலம் கல்வி பெறும் வாய்ப்பினையும் அரசு பெருக்கியுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 20 மாலை நேரக் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. 1966-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் இருந்த மாலை நேரக்கல்லூரிகள் ஐந்துதான். இப்பொழுது 25 உள்ளன.

முந்திய தலைமுறையில் துவக்கப்பட்ட பள்ளி மதிய உணவுத் திட்டமும் மிக விரைவில் பரவியுள்ளது. 1 முதல் 8 வகுப்பு வரை உள்ள மாணவர்களில் 18 இலட்சம் மாணவர்கள் இப்பொழுது மதிய உணவு பெறுகின்றனர். இவர்கள் துவக்க, உயர் துவக்கப்பள்ளி மாணவர் தொகையில் மூன்றில் ஒரு பங்காவர். கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்காக 748 இலட்சம் ரூபாய் தமிழக அரசு செலவு செய்துள்ளது. பள்ளிகளில் மதிய உணவு வழங்குவதில் ஆசிரியர்களுக்கு இருக்கின்ற சில தொந்தரவுகளைக் குறைப்பதற்காகவும் சுகாதாரம் மிகுந்த சூழ்நிலையில் மதிய உணவினைச் சமைப்பதற்காகவும், மூன்று மைய சமையற்கூடங்கள் கேர் நிறுவனத்தாரின் உதவி கொண்டு அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் 30 மைய சமையற்கூடங்களுக்கான கட்டட வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. திட்டத்தின்படி நாளடைவில் ஒவ்வொரு

ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்தது ஒரு மைய சமையற் கூடம் இருக்கும். மைய சமையற்கூடங்களில் தயாரிக்கப்படுகின்ற உணவுப் பொருள்கள் தகுந்த பாத்திரங்களில் பக்குவமாக, இத்திட்டத்திற்கென கேர் நிறுவத்தினரால் வாங்கப்பட்டுள்ள ஊர்திகளின் மூலம் கிராமங்களிலுள்ள பள்ளிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. மதிய உணவுத் திட்டத்திற்கான பண்டங்களைப் பக்குவமாகச் சேமித்துவைப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று என வட்டார மதிய உணவுப் பொருள் கிடங்குகள் சுமார் 30 இலட்சம் ரூபாயில் கட்டத் திட்டமிட்டு வேலை நடந்து வருகிறது.

பள்ளிகளில் படிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு உணவு அளிப்பதோடு மட்டுமல்லாது, 1 முதல் 3 வகுப்பு வரையில் படிக்கின்ற ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகங்களும், முதல் வகுப்பில் படிக்கின்ற பிள்ளைகளுக்கு இலவசச் சிலேட்டுகளும் 1967-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தினால் கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் 46 இலட்சம் பிள்ளைகள் பயனடைந்துள்ளனர்.

அரசு செய்கின்ற ஆக்க வேலைகளைக் கண்டு களிக்கின்ற பெற்றோர், பல்வேறு கிராமங்களில் ஒன்றுகூடி கல்வித்துறையினரின் ஒத்துழைப்புடன் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், 115 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தி, 345 இலட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள பள்ளிப் பொருட்களைப் பல்வேறு பள்ளிகளுக்கு வாரி வழங்கி



உள்ளனர். அத்துடன் 31 இலட்சம் ரூபாய்மதிப்புடைய சீருடைகளையும் பள்ளிக்குழந்தைகளுக்கு வழங்கியுள்ளனர்.

பள்ளி மற்றும் பள்ளிகளின் கட்டட வசதிகளைப் பெருக்குவதற்கும், உயர்நிலைப்பள்ளிகளில் உள்ள ஆய்வுக்கூட வசதிகளை விரிவுபடுத்துவதற்காகவும், கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகத்தில் ரூ. 712 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. கட்டட வசதிகளைப் பெருக்குவதோடு மட்டும் இல்லாது, பள்ளிகளுக்குத் தேவைப்படுகின்ற தளவாடச் சாமான்கள், நூலகப் புத்தகங்கள், கற்பித்தலுக்குத் தேவையான துணைக்கருவிகள் ஆகியவை வாங்குவதற்காக 75 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ஆய்வுக்கூடங்கள் இல்லாத பள்ளியின் குறைகளைப் போக்குவதற்காகஒருமுன்னோடித் திட்டம் அமைத்து அத்திட்டத்தின்படி இப்பொழுது இரண்டு இயங்கு ஆய்வுக்கூடங்கள் (Mobile Laboratories) தஞ்சாவூர் மாவட்டத்தில் பணியாற்றி வருகின்றன.

## ஆசிரியர் நலன்

கல்விக்கூடங்கள் எண்ணிக்கையைப் பெருக்கிக், கல்விக்கூடங்களுக்குத்தேவைப்படும் வசதிகளைக் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவுசெய்துவிரிவுபடுத்தி, படிக்கின்றமாணவர்களின்தொகையை இலட்சக்கணக்கில் பெருக்கி, எல்லாருக்கும் இலவசக் கல்வி, கல்லூரி புகுமுக வகுப்பு வரை அளித்து, கல்வி வரலாற்றில் புதியதொரு முன்னேற்றத்தைப் புகுத்திய தமிழக அரசு, ஆசிரியர்களின் குறைகளையும் படிப்படியாகத் தீர்க்கப், பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயலாற்றியுள்ளது. ஆசிரியர் தேங்கினால் பள்ளிகள் தேங்கும். பள்ளிகள் தேங்கினால் ஊர் தேங்கும். ஊர் தேங்கினால் நாடு தேங்கும் என்பது மேலைநாட்டுப் பழமொழிகளில் ஒன்றாகும். ஆசிரியப் பொதுமக்களின் வசதிகளைப் படிப்படியாகப் பெருக்குவதுடன் சமுதாயத்தில் அவர்கள் மதிக்கத்தக்கதொரு இடத்தைப் பெறுவதற்காகச் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் பலவாகும்.

பல்வேறு நிர்வாகத்திற்கடியில் பணிபுரியும் ஆசிரியர்களிடையே காணப்படுகிற வித்தியாசங்



களையும், குறைபாடுகளையும் நீக்கும் முகத்தான் எல்லாப் பள்ளிகளிலும் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், நகர ஈட்டுப் படி, விடுப்பு வசதிகள், வீட்டு வாடகைப் படி, பண்டிகை முன்பணம் பெறுகின்ற வசதி, அரசினர் மருத்துவ மனைகளில் இலவச மருத்துவ வசதி, திருமணச் செலவிற்கான கடன் பெறும் வாய்ப்பு, மலைப்படித் தொகை, குளிர்காலப் படித் தொகைபோன்ற பல்வேறு நலன்கள் வழங்கப்பட்டு உள்ளன. படிப்பிற்குத் தகுந்த பணியிடம் பெறாத செக்கண்டரி கிரேடு ஆசிரியர் 19,500 பேருக்கு செக்கண்டரி கிரேடு சம்பள விகிதத்தில் சம்பளம் பெறும் வாய்ப்பினை இவ்வரசு அளித்துள்ளது. ஆசிரியர்கள் தங்கள் கல்வித்தகுதியினை உயர்த்திக் கொள்கின்ற நிலையில், அவர்கள் பணிபுரியும் இடங்களில் சம்பள அளவையில், இருபடி சம்பள உயர்வு கொடுத்துள்ளது. தொடக்க, உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டு வந்த அரசாங்க விருதுகளை உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்க ஏற்பாடு செய்துள்ளது. நம் அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும், ஆசிரியர் இல்லங்கள் அமைப்பதற்காக ஆசிரியர்கள் தாமாகவே ஏற்படுத்திக்கொண்ட திட்டத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், வட ஆர்க்காடு மாவட்ட ஆசிரியர்களின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட ஆசிரியர் இல்லத்திற்கு அரசு ரூ. 50,000 மானியம் அளித்துள்ளது: அரசின் நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் பள்ளித்துணை ஆய்வர் மற்றும் பி.டி.ஆசிரியர் ஆகியோர் தொழில் துறையில் தமது தகுதியினைப் பெருக்கிக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கும்பொருட்டுஆண்டு தோறும்அரசாங்கச்செலவிலேயே பத்துப்பேர் (எம். எட்.) படிக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பயிற்சி பெற்றபின் வேலைவாய்ப்பினைப் பெறாது நின்ற பி.டி. ஆசிரியர்கள், செக்கண்டரி கிரேடு, எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள் 6,500 பேருக்கு தொழில் பயில் ஆசிரியப் பணியிடங்கள் அமைத்துக் கொடுத்துள்ளது நம் அரசு. புதிய சம்பள ஆய்வுக்குழு அறிக்கையின்மூலம் பல்வேறு நிலையில் உள்ள ஆசிரியர்களுக்கு, தேர்வு நிலைப் பணியிடங்கள் (செலக்ஷன் கிரேடு)வழங்கியுள்ளது. இவையெல்லாம் தமிழ்நாடு கல்வித்துறை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

### ஊனமுற்றோர் நலனுக்காக

துவக்கக் கல்வி, உயர் துவக்கக் கல்வி, உயர்நிலைக்கல்வி, கல்லூரிக் கல்வி, ஆசிரியர்களுக்கான வசதிகள் ஆகியவைகளில் கவனத்தைச் செலுத்திய அரசு, கண் இழந்தோர், காது கேளாதோர், உடல் உறுப்புக்குறைபாடுற்றோர், பிள்ளைப் பருவத்தில் தகுந்த பராமரிப்பை இழந்தோர் ஆகியவர்களுக்கும் கல்வி வசதிகளைப் பெருக்கப் பல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. கண் இழந்தோருக்குக் கல்வியுடன் வாழ்க்கை நடத்தத் தேவைப்படும் பொறியியல் பயிற்சியும் அளிக்கும் திட்டம் ஒன்றினை 1967-ஆம் ஆண்டில் கிண்டியில் தொடங்கி நடத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ், பார்வையற்றோர் 91 பேர் பயிற்சிபெற்றுப்பயனடைந்துள்ளனர். மேலும் தமிழ்நாடு, ஆந்திரம், மைசூர், கேரளம் ஆகிய தென்மாநிலங்களில் உள்ள கண் இழந்தோர் கல்விக்கு வேண்டிய பிரெய்லி (Braille) புத்தகங்களை வெளியிடப் பூவிருந்தவல்லியில் உள்ள கண் இழந்தோர் பள்ளியில் ஓர் அச்சகம் 1968-ல் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.

குழந்தைப் பருவத்தில் பெற்றோரின் பராமரிப்பை இழந்த குழந்தைகளைக் காக்கின்ற இல்லங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்ற மான்யம்1969-ஆம்ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. உடலுறுப்புக் குறைந்த குழந்தைகளுக்காக மத்திய அரசு கொடுக்கின்ற பண உதவித் திட்டம் போதாது எனக் கண்ட இம்மாநில அரசு 1969-ஆம் ஆண்டு முதல் இம் மாநிலத்தில் அத்தகைய குழந்தைகளுக்குப் பல உதவிகள் அளிக்கத் தனியான ஒரு திட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்துள்ளது.

உரிமையிழந்து இலங்கையில் இருந்தும், பர்மாவிலிருந்தும், தமிழ்நாட்டில் வந்து குடியேறிய மக்களின் குழந்தைகள் பள்ளியில் படிப்பதற்கு வசதி செய்து தரும் வகையில் அவர்கள் எந்த விதத் தனிச்சம்பளமும் கட்ட வேண்டாம் என்ற சலுகையை அரசு அளித்துள்ளது.

எழுத்தறிவு பெறாத முதியோர்களுக்கு அவர்களின் தொழிலை ஒட்டி எழுத்தறிவு கொடுப்பதற்காகப் பல செயல்முறை எழுத்தறிவு நிலையங்கள், தஞ்சாவூர், கோயமுத்தூர், வட ஆர்க்காடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் படிப்படியாக 1969-ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு வந்துள்ளன. மேலும் மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் மேற்பார்வையில் நடத்தப்படும் பொதுநூலகங்கள், கிளை நூலகங்கள், நூல் வழங்கும் நிலையங்கள், இயங்கும்நூலகங்கள் ஆகியவை படிப்படியாகப் பெருகி வருகின்றன.

ஒரு நாட்டின் சிறப்பும், பெருமையும், ஆக்கமும், வலிவும் அதன் மக்கள் பெறும் கல்விச் செல்வத்தையே ஒட்டியுள்ளது எனும் உண்மையை முழுக்க முழுக்க உணர்ந்துள்ள நம் அரசு இன்று நிதி வருவாயில் நான்கில் ஒரு பங்கினைக் கல்விக்காக மனமுவந்து செலவு செய்கின்ற காரணத்தினால்தான் இத்தனை அளவிற்குக்கல்வித்துறைவளர்ந்து வந்துள்ளது. இதற்காக நம் அரசிற்கு நமது ஆழ்ந்தநன்றியைத் தெரிவித்துக் கொள்வோமாக! இறுதியாக ஒன்று நமது நன்றிக் கடனைச் சொல்லளவில் நிறுத்திக் கொள்ளாமல் அளிக்கப்பட்டுள்ள பெருவாரியான கல்வி நலன்களைச் சீரிய வகையில் பயன்படுத்தித் தமிழ்நாட்டின் கீர்த்தியினை மேலோங்கச் செய்வோமாக!




கதர்
கிராமத்
தொழில்கள்
கதர், கதர்ப்பட்டு, சோப்பு, தேன்
செக்கெண்ணெய்,
தோல்பொருள்கள்,
பனைவெல்லம், சர்க்கரை,
மண்பாண்டம், வார்ப்படங்கள்,
பனைப்பொருள்கள்,
பித்தளை, வெண்கலப்
பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள்
தயாராகின்றன!
கதர்
கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது உணவு
உற்பத்திக்கு
உழைக்கும்
கிராம மக்களுக்கு
உதவுவதாகும்

## முகப்பிலே . . . .

தித்திக்கும் தமிழ் தவழும் திருநெல்வேலி மாவட்டத்தின் எல்லையில் அமைந்தது குளிர் தூங்கும் குற்றாலம்; கண்ணையும் கருத்தையும் கவரும் விண்ண ளாவிய குன்றங்கள்; பச்சைப் பசும் போர்வையைப் போர்த்துப் புன்னகை பூத்துப் பொலியும் பூஞ்சோலைகள்; வானமங்கை தண்ணருளை வாரிப் பொழிவது போல் பாய்ந்து வரும் வெள் ளருவி; மலைமாது குன்றெனும் தன் மார்பை வெள்ளிய அருவி யெனும் மெல்லிய துகிலால் மறைத்து நிமிர்ந்து நிற்கும் திருக்கோலம்; பொங்கி வரும் நுரை மலர்களை அவள் தன் அலைக்கரங்களால் விண்ணிலே வாரி இறைத்து மகிழும் திரு விளையாடல்; வண்ணக் கவிஞ னின் முத்தமிழ்மாது பூவாடை புனைந்து படிப்படியாய் மலையி னின்று இழிந்துவந்து மண்ணக மங்கையை அன்புடன் முத்த மிட்டு இன்பவெள்ளம் பெருக் கெடுத்துப் பொலியும் பொங்கு மாங்கடலின் தோற்றம்; குமுறிக் குதித்துக் கும்மாளமிட்டுக் கொக் கரித்து ஆடிப்பாடி, அலைக்கரம் வீசி ஒய்யார நடையிட்டு உள்ள மெல்லாம் அள்ளும் குற்றால அருவி மங்கையின் இன்பத் தோற்றம் என்றும் மனத்தை விட்டு மாறாத காட்சி அல்லவா ?

“ போதும் பொன்னும் உந்தி அருவி புடைசூழக் கூதல்மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம் ” சுற்றுலாத் துறைக்கு மிகவும் பயன்படுகிறது. வெளிநாட்டாரை யும் கவர்ந்திழுக்கும் இந்தக் குற்றாலம் அகில உலகப் புகழ் பெற்றுவிட்டது.




ஒட்டக வறுவல், சாப்பிடுவதற்கு மிகவும் சுவையாக இருக்குமாம். உலகத்திலேயே மிகப் பெரிய தனி உணவு, ஒட்டக வறுவலேயாகும். ஒட்டக வறுவல் தானே என்று நினைத்துவிடாதீர்கள் !

ஒட்டகத்திற்குள்ளே செம்மறி ஆடு இருக்கும் !
செம்மறியாட்டுக்குள்ளே கோழி இருக்கும் !
கோழிக்குள்ளே மீன் இருக்கும் !
மீனுக்குள்ளே கோழி முட்டை இருக்கும் !

இப்பொழுது நினைத்துப் பாருங்கள் அந்த ஒட்டக வறுவலை ! சுவையாக இருக்குமா, இல்லையா வென்று சொல்லுங்கள் ! எப்படிச் செய்கிறார்கள் என்று தெரிந்துகொண்டால், அது எங்கே கிடைக்கும் என்று சிலர் கேட்டாலும் கேட்கலாம் !

வேகவைத்த முட்டையை மசாலாவுடன் சேர்த்து மீனின் வயிற்றுக்குள் திணிக்கிறார்கள். அந்த மீனை வேகவைத்த கோழியினுள் மசாலாவுடன் சேர்த்து வைக்கிறார்கள். அதன் பின் அந்தக்கோழியை வறுக்கப்பட்ட செம்மறியாட்டினுள் திணிக்கிறார்கள். பின்பு அந்தச் செம்மறியாட்டை ஒட்டகத்தினுள் திணித்து ஒட்டகத்தை வறுவல் செய்கிறார்கள்.

இம்மாதிரி வறுவல், கடைகளில் கிடைக்காது. ஆனால் திருமண விருந்துக்குச் சென்றால் மட்டுமே கிடைக்கும் ! எவர் வீட்டு விருந்தில் என்றுதானே கேட்கிறீர்கள்? பெடோவின்(Bedovin) என்ற நாடோடி அரபு மக்களது திருமண விருந்தில் மட்டுமே கிடைக்கும்.


என் தங்கச்சி காதலி
அ. மறை மலையான்
கோபன்...

# 1. பூச்சூட்டலாமா?

இளநீல நிறங்கொண்ட 'பியட்' கார் ஒன்று கடற்கரையை அடுத்த நெடுஞ்சாலையிலே கடுவேகமாகப் பறந்து கொண்டிருந்தது.

வாக்களிக்கத் தேவையான வயதும் வாளிப்பான உடற்கட்டும் அமைந்த தேன்மொழிதான் அதனை அவ்வாறு ஓட்டிச் சென்றாள்.

காலை நேரத்துக் குளிர்காற்று, சற்று அழுத்தமாகவே அவளுடைய தளிருடலைத் தழுவித் திளைத்தது; மேலாடையையும் சலசலக்கச் செய்தது.

கிழக்கே, கதிரவனின் ஒளிப் பூச்சினால் மெருகேறிப் பளபள வென்று நெளிந்தன கடலலைகள்; காரை ஓட்டியவண்ணமே தங்கள் மீது ஓரப் பார்வை வீசுகின்ற அவளது விழிக் குவளைகளுக்கு அந்த மலர்ச் சுருணைகளும் எழில் விருந்தினைப் பரிமாறின.

அழகும் அமைதியும் இணைந்து முறுவலித்து இதமாகக் கொஞ்சுகின்ற இந்த இனிய காலை வேளையில்—பேருந்துகளைத் தவிர வேறு வண்டி-வாகனங்களின் நெருக்கடிகள் அவ்வளவாக இல்லாத அந்த நெடிய சாலையில்—காரை ஓட்டுவதென்றால் தேன்மொழிக்கு எப்போதுமே தெவிட்டாத இன்பக் கொள்ளைதான்!

அதுவும் இன்றைக்கோ....? அவளது மனப்பரப்பு முழுவதும் மகிழ்ச்சித் தேனின் சிலிர்ப்புகள்—சிதறல்கள்!

'டேபிள் டென்னிஸ்' (மேசைப் பந்தாட்டம்) ஒற்றையர் ஆட்டப் பந்தயத்தில் மாநிலத்திலேயே முதல் வீராங்கனையாக வெற்றிக் கொடி நாட்டிய அவளுக்கு உவகைப் புனல் பொங்கிப் பெருக்கெடுப்பது இயற்கை தானே! அதோடு, முந்தின நாள் மாலை, தான் எப்படி யெல்லாம் அந்த 'முட்டைப் பந்தை' ஓங்கித் தட்டி ஆடினாளோ அந்த அங்க அசைவுகளை அப்படியே இன்று காலை வந்த ஆங்கில இதழ்களில் படமாகப் பார்த்த பொழுது....

* * * *

கார் விவேகானந்தர் இல்லத்தைக் கடந்து சில அடிகள் கூடச் சென்றிருக்காது; சிறுவன் ஒருவன் குறுக்கே வந்து பாய்ந்து விட்டான்.

கண் மூடிக் கண் திறப்பதற்குள்.... தேன்மொழி எப்படித் தான் தன் காருக்குக் 'கடிவாளம்' இட்டாளோ? பையனுக்கும் உயிர் 'வெல்லம்' போலும்! தப்பித்துக் கொண்டு விட்டான். ஆனால், ஓடிய வேகத்தில், அருகிலிருந்த நடைபாதை மேடையில் குப்புற விழுந்து விட்டான் நடுநடுங்கிப்போய்.

பதறிப் போன தேன்மொழி, காரை விட்டுக் கீழே இறங்கி அவன் அருகே ஓடினாள். எழுவதற்கு முயன்று கொண்டிருந்த அவனைத் தூக்கி நிமிர்த்தினாள்.

''ஏண்டா, சனியனே! இப்படித்தான் காரிலே வந்து விழுகிறதா? இந்நேரம் எமலோகத்துக்கே போயிருப்பாயே!''

—என்று படபடப்புடன் பகரும்பொழுதே பையனின் முழங்கால்கள்இரண்டிலும் சிராய்ப்புகள் ஏற்பட்டுக் குருதி கசிவதை அவள் கவனித்து விட்டாள்.

''அய்யய்யோ! இரத்தங் கூட வந்துவிட்டதே!''

—என்ற வாறே தன் இடுப்பிலே செருகியிருந்த கைக்குட்டையை எடுத்து அந்தச் சிராய்ப்புகளைத் துடைத்தாள். குருதித் துளிகள் அவளது உள்ளங்கையிலும் சிறிது ஒட்டிக் கொண்டன.

''சரி வா; டாக்டரிடம் போய் மருந்து போட்டுக் கொண்டு வரலாம்''

'' அதெல்லாம் வேண்டாங்க; எங்க அம்மா கொஞ்சம் மஞ்சப் பத்துப் போட்டாலே இந்தச் சின்னக் காயமெல்லாம் ஆறிப் போயிடாதா?''

—புன்னகையோடு சொன்ன அந்தப் பையன் அப்பால் நகரத் தொடங்கினான். ''அற்பமானவற்றுக்கெல்லாம் இப்படி ஆர்ப்பாட்டம் செய்யலாமா?''—என்று இளக்காரமாய்க் கேட்பது போல் ஒலித்தன அவனது வார்த்தைகள்.

''ரொம்ப அனுபவப்பட்டவன் மாதிரிப் பேசுறியே? சரி இந்தா, இந்தப் பணத்தையாவது வாங்கிக் கொண்டு போ''

காருக்குள்ளே இருக்கும் கைப்பையைத் திறந்து பணத்தை எடுத்துக் கொடுக்கத் தேன்மொழி திரும்பினாள்.

அதற்குள் அந்தச் சிறுவன்,

''எதுக்குங்க பணம்?''—என்று கேள்விக் கணையைத் தொடுத்து அவளைத் திணற அடித்தான்.

''சும்மா செலவுக்கு வைத்துக் கொள்ளத்தான்''

'' நல்லா இருக்கே! நானா வந்து விழுந்ததுக்கு நீங்க எதுக்குங்க பணம் கொடுக்கிறது? அப்படியெல்லாம் பிறத்தியார் பொருளுக்கு ஆசைப் படுகிறது 'பெரிய தப்பு'ன்னு, சாக மூணு நாள் முன்னே எங்கப்பா எனக்குச் சொல்லிட்டுப்போயிருக்காரு. அவர் வார்த்தையை மீறலாங்களா?....அப்புறம்....இனிமே இந்த மாதிரி கடலைப் பாத்துக்கிட்டே காரை ஓட்டாதீங்க, அக்கா!''

—இப்படித் துணிந்து சொல்லி விட்ட அவனுக்கு எங்கே அவளுடைய கையிலே சிக்கினால் நையப் புடைப்பாளோ என்கிற அச்சம் வந்துவிட்டது போலும்! ஒரே ஓட்டமாக ஓடியே போய்விட்டான் அவன்!

தேன்மொழியோ, அப்படியே திகைத்துப் போய் விட்டாள்; அவள்சென்ற திக்கையே வெறித்துப்போய்ப் பார்த்து நின்றாள்; யாரோ தன் தொண்டைக் குழியிலே துணியை வைத்துச் செம்மிய மாதிரி, நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது அவளுக்கு; கண்களும் பனித்தன!

'அரும்புப் பருவத்திலேயே இப்படியொரு ஆசை கொள்ளாத மன முதிர்ச்சியா?

* * * *

''என்ன தேன்மொழி, இங்கே தன்னந் தனியாக நின்று கொண்டிருக்கிறீர்கள்? காருக்கு ஏதாவது பழுது ஏற்பட்டு விட்டதா?''—மாதவனின் மிடுக்கானகுரல் எங்கோ சிறகடித்துத் திரிந்து கொண்டிருந்த அவளது சிந்தனைப் பறவையைக் கூட்டுக்குள் கொணர்ந்து தன்னினைவு பெறச் செய்தது.

கும்பிடப்போன தன் 'குரு' இவ்வளவு விரைவில் தனக்குக் குறுக்கே வந்து நிற்பான் என்று எதிர்பார்க்காத தேன்மொழி முன்பைவிடத் திகைப்பு மேவிய களிப்பினால் திணறிப் போனாள்.

'' ஊம்.... ஒன்றுமில்லை ! ஒரு பையனுக்கு விபத்து ஏற்பட இருந்தது. ஆனால் தப்பித்துக் கொண்டு ஓடிப்போய் விட்டான். அவனைப் பற்றிய எண்ணத்தில் ஆழ்ந்துதான் இப்படி நின்று விட்டேன்.''

—என்று விளக்கமளித்த அவள் தன் நிலாப் பிஞ்சு நெற்றியிலே விழுந்து புரண்ட கேசக்கற்றைகளை இடக்கையால் ஒதுக்கிவிட்டவாறே, தன் முகத்தைத் திருப்பி அவனை நேருக்கு நேர் நோக்கினாள்.

'' ஆமாம் ; நீங்கள் எங்கே இந்த நேரத்தில் இங்கே வந்தீர்கள் ?''

'' இன்று ஞாயிற்றுக்கிழமை அல்லவா ? வழக்கம் போலக் கடலிலே குளித்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்.''

—மாதவனின் கூற்றினை மெய்ப்பிப்பது போலவே, அவன் அணிந்திருந்த அரைக்கால் சட்டை, விளையாட்டு வீரர்களுக்கே உரிய பின்னல் பனியன், பச்சை வண்ணத் தேங்காய்ப் பூத் துண்டு— எல்லாமே ஈரத்தில் தோய்ந்து காட்சியளித்தன ; தலை முடியும் வாரி விடப்படாத அலங்கோலத்துடன் காற்று வீச்சிலே ஊஞ்சலாடியது ; நெடுநேரம் கடலின் மடியிலேயே புதைந்து கிடந்ததாலோ என்னவோ அவனது கரிய விழிகளும் சிவப்பேறி இருந்தன.

அவனுடைய பரந்த முகத்தையும் அகன்ற மார்பையும், திண்மையான தோள்களையும் உருண்டு திரண்ட கை-கால்களையும் நெடுநெடுவென்ற கம்பீரத்தோற்றத்தையும் தன் விழிவீச்சினால் அளவெடுத்துக் கிறங்கிய தேன்மொழி, மேலும் அவனுடைய கண்களை நேருக்கு நேர் சந்திக்கும் தென்பினை இழந்தவளாகச் சட்டென்று தன் முகப் பூவைக் கவிழ்த்துக் கொண்டாள் தரையை நோக்கி ; குப்பென்று சிவந்தன அவளது மாதுளங் கன்னங்கள்.

''சரி ; இப்போது எங்கேதான் போய்க் கொண்டிருக்கிறீர்கள் ?''

—என்று அமைதியைக் கலைத்தான் மாதவன்.

'' உங்களைக் கண்டு நன்றி சொல்வதற்குத்தான்.''

''வேடிக்கையாக இருக்கிறதே! எனக்கு எதற்கு நன்றி?''

'' நேற்று நான் 'டேபிள் டென்னிஸ்' சில் வெற்றி பெற்றதே நீங்கள் கொடுத்த பயிற்சியினால்தானே !''

''ஓ, அதற்கா ....? ஆனால் அதற்கெல்லாம் நன்றி சொல்ல என்ன இருக்கிறது ? உங்களுடைய சொந்தத் திறமையும், விளையாட்டிலே உங்களுக்குள்ள அழுத்தமான பிடிப்பும், விதி முறைகளைப் பிறழாமல் கடைப்பிடிக்கிற உங்கள் கண்டிப்பும், உணர்ச்சிக்கு இரையாகிப் பந்தைக் கண்டபடி அடிக்க முற்பட்டுவிடாத உங்கள் நிதானமுந்தான் உங்கள் வெற்றிக்குக் காரணங்களே யொழிய என்னுடைய பயிற்சியிலே என்ன இருக்கிறது ? நானுந்தான் எத்தனையோ பேருக்குப் பயிற்சியளித்திருக்கிறேன் ; எல்லாருமா இப்படிப் பந்தயங்களிலே வெற்றி பெற்றுப் பரிசுகளைத் தட்டிச் சென்றிருக்கிறார்கள் ?''

'' நீங்கள் வேண்டுமானால் தன்னடக்கத்திற்காக இந்த மாதிரித் தாழ்வாகப் பேசிக் கொள்ளலாம். ஆனால் நீங்கள் அளிக்கும் பயிற்சியிலேயுள்ள நேர்த்தி, நிறைவு பக்குவம் எனக்கல்லவா புரியும்?''

'' ம..ம.. நான் என்னதான் மறுத்தாலும் நீங்கள் விடவா போகிறீர்கள் ? போகட்டும் ; இங்கேயே தான் நன்றி சொல்லி விட்டீர்கள் ; இனிமேல் நீங்கள் இப்படியே திரும்ப வேண்டியது தானே ! இல்லை இன்னும் யாரையாவது பார்க்கப் போகிறீர்களா ? ''

'' என்னுடைய தோழி ஒருத்திக்குப் பிறந்த நாள் விழா ; அவளைப் பார்த்து வாழ்த்துக்கூற வேண்டும். .... அதோடு நடுவழியிலேயே உங்களுக்கு நன்றி சொல்வது முறையாகுமா ? அதனாலே உங்கள் வீடு வரைக்கும் வந்து விட்டுத்தான் திரும்பப் போகிறேன் ; காரில் வந்து ஏறிக் கொள்ளுங்கள்.''

—என்ற தேன்மொழி மாதவனின் மறுமொழி எதற்கும் காத்திராமல் காரினுள் போய் அமர்ந்து, முன்னிருக்கைக்குரிய கதவை அவனுக்காகத் திறந்து விட்டாள்.

ஆனால் அவனோ பின்னிருக்கையிலேயே போய் உட்கார்ந்து கொண்டான்.

அவனுடைய அந்தச் செய்கை தேன் மொழிக்குச் சற்று மனத்தாங்கலையே தந்தது. '..... துளிக்கூடப் புதுமையாக— 'மாடர்னாக'— இல்லாமல் ஏன் இப்படி ஒதுங்கி ஒதுங்கிப் பயந்து பயந்து சாகிறார் ?'—என்று உள்ளூற எண்ணிக் கொண்ட அவள், '' முன்னால் உட்கார்ந்தால், 'டேபிள் டென்னி'சைப் பற்றி வசதியாகப் பேசிக் கொண்டு போகலாமே என்று பார்த்தேன் ....''

—என்று மெல்ல முணுமுணுத்தாள்.

'' முன்னால் வந்து உட்காரலாந்தான் .... ஆனால் என்ன இருந்தாலும் நீங்கள் என் முதலாளியின் பெண் அல்லவா ?

## கீல்வாதந் தீர்க்கும் கே. வைட்டமின்

இன்று கடைகளிலே ஊட்டச் சத்தூட்டும் வைட்டமின் மாத்திரைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவற்றை வாங்கிச் சாப்பிடுகிறவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகின்றது.

இப்போது வைட்டமின் 'கே' என்னும் புதியதொரு மாத்திரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய மாத்திரை, கைகால் நரம்புகள் முறுக்கிக் கொண்டு அசைக்க முடியாமல் செய்துவிடுகிற கீல் வாத நோய்க்கு அருமையான மருந்தாகப் பயன்படுகிறது என பிரிட்டானிய மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்.

தற்போது கீல் வாதத்திற்கு வேறு சில மருந்துகளும் உள்ளன. எனினும், இந்த வைட்டமின் கே. மற்ற மருந்துகளைப் போல் கடுமையான பிற விளைவுகளை ஏற்படுத்தாதாம்.

உங்கள் பக்கத்தில் நான் வந்து அமர்வது ஒழுங்கான மரியாதை ஆகுமா ?''

—என்று அடக்கமாக மொழிந் தான் மாதவன்.

'' இதோ பாருங்கள் ; இன் னொரு முறை இப்படிப் பிரித்துப் பேசினீர்களோ எனக்குப் பொல் லாத கோபம் வந்துவிடும் ; அப் புறம் நான் நன்ருக அழுது விடு வேன் !''

—தேன்மொழியின் இந்தமிரட் டலைக் கேட்டுச் சிரிப்புத்தான் வந்தது மாதவனுக்கு.

''கோபம் வந்தால் திட்டித் தீர்ப்பது தானே ; அதை விட்டு விட்டு அழுதுதொலைப்பானேன் ? வேடிக்கையாகத்தான் இருக் கிறது நீங்கள் கூறுவது !''

''பின்னே என்ன ? எப்போது பார்த்தாலும் ஏன் இந்த 'முத லாளி—தொழிலாளி'ப் பேச்சு ! கரடு முரடான மலையிலும் களைப் பை அடக்கும் சுனை இல்லையா ? அருவி இல்லையா ? அப்படியே பார்த்தாலும் இந்த 'டேபிள் டென்னிஸ்' ஆட்டத்தைப் பொறுத்த மட்டிலுமாவது நீங்கள் என் 'குரு' தானே ! நாம் இருவரும் அருகருகே நின்று விளை யாடியதில்லையா ?.... என் இருதய பீடத்தில் எவ்வளவு உயர்வான நிலையில் உங்களை வைத்திருக்கிறேன் என்பது உங் களுக்கு எள்ளளவாவது தெரிந் தால்தானே!....எங்கே தெரியப் போகிறது....?''

—இப்படிச் சொல்லி வரும் பொழுதே தேன்மொழிக்குத் தொண்டை கம்மி விட்டது. வார்த்தைகள் அதற்குமேல் வெளி வர இயலாமல் உள்ளடங்கி நின்றுவிட்டன.

• • • • •

விமானத்திலிருந்து கீழே வேடிக்கை பார்ப்பவர்களுக்கு, நீண்ட சதுரமான மைக்கூடு போல் காட்சி தரக் கூடிய அந்தச் சின்னஞ் சிறு கார் இப்போது திருவல்லிக்கேணி—பைக்ராப்ட்சு சாலையில் திரும்பிற்று.

'' இந்தப் பக்கம் எதற்கு ?'' —தயங்கியவாறே வினவினுன் மாதவன்.

'' மாலைகள் வாங்குவதற்குத் தான்.''

## தமிழ்நாடு அரசின் சாதனைக்குப் பாராட்டு

கல்வித்துறையில் தமிழ் நாடு அரசின் சாதனை பாராட்டத்தக்கது ; 1960 ஆம் ஆண்டில்தமிழ்நாட்டில் கல்விக்காக ரூபாய் 15 கோடியே ஒதுக்கப்பட்டது. சென்ற ஆண்டு அந்தத் தொகை ரூபாய் 67 கோடி யாக உயர்ந்தது; அதாவது நான்கு மடங்கு அதிக மாகியது ; படித்தவர்களின் எண்ணிக்கையும் சென்ற 10 ஆண்டுகளில் 31·4 சத விகிதத்திலிருந்து 39·39 சதவிகிதமாக அதி கரித்துள்ளது.

—டாக்டர் மால்கம் ஆதிசேஷையா.

'' ஓகோ ! தோழிக்கா ?''

'' ஏன், உங்களுக்கும்தான் !''

''நன்றியை வார்த்தைகள் மூலம்—செயல்களின் மூலம்— வெளிப்படுத்ினுலே போதாதா? அதுவும் எனக்குப் போய் இந்த மாலை—மரியாதை எல்லாம் எதற்கு ?''

'' என்னுடைய நெஞ்சின் நிறைவுக்காகத்தான் அந்தச் சிறு மாலையையாவது உங்களுக் குக் காணிக்கையாகச் செலுத்த லாம் என்று நினைக்கிறேனேயல் லாமல், அதன் மூலம் ஏதோ ஒரு பெரியசிறப்புச்செய்துவிட்டோம் என்று இறுமாப்புக்கொள்வதற் காக இல்லை! அதுவும் வேண்டாம் என்ருல் சரி ; இப்படியே திரும்பி விடுகிறேன்.''

'' அய்யய்யோ ! அப்படியெல் லாம் மன வருத்தப் படுவதாக இருந்தால் நீங்கள் எத்தனை மாலை களை வேண்டுமானுலும் எனக்கு வாங்கிக் கொடுங்கள் ; எனக்கு ஒன்றும் மறுப்பு இல்லை.''

—என்று அவளைத்தேற்றுகின்ற முறையில் பகர்ந்தான் மாதவன்.

பூக்கடைகளின் பக்கமாக வந்ததும் காரை நிறுத்தினுள் தேன்மொழி. சற்றுமுன் தன் னிடம் இருந்த படபடப்புக்கும் குதர்க்கத்திற்கும் விடை கொடுத் தவள் போல், தன் முகத்திலே தண்மை தவழ்ந்திட பின்னல் திரும்பி மாதவனை நோக்கினுள்.

''....எனக்கு இப்போது ஒரு சின்ன உதவி செய்வீர்களா ?''

—அவளது குயிலின் மென் குரல் வழக்கத்தை மீறிக் கொஞ் சலாக இழைந்தது.

'' என்ன உதவி ?''

'' ..உங்களிடம் இப்படிச் செய்யச் சொல்வதே முறையில்லை தான் ; இருந்தாலும் எனக்கும் வேறு வழி இல்லை.''

'' நீங்கள் என்ன செய்யச் சொன்னுலும் அதை மதிப்புக் குறைவாக எடுத்துக் கொள்ள மாட்டேன் ; ஆகவே தாராள மாகச் சொல்லுங்கள்.''

'' ஒன்றும் இல்லை ; என் உள் ளங் கைகளைப் பார்த்தீர்களா ? ....காரில் வந்து விழுந்தானே அந்தப் பையனின் சிறுய்ப்புகளைத் துடைத்து விட்டதில் இரத்தத் துளிகள் ஒட்டிக் கொண்டு விட்டன. இவற்ருேடு அந்த மாலை களை எப்படிக் கையால் தூக்கி வருவது ?''

''இதற்குத் தானு இப்படித் தயங்குகிறீர்கள் ? நானே அந்த மாலைகளைக் கொண்டு வந்து காரில் வைக்கிறேன்.''

—என்று காரை விட்டுக் கீழே இறங்கினுன்.

தேன்மொழியும் அவனைப் பின் தொடர்ந்து சென்ருள். மாலைகள் இரண்டுக்கு விலை பேசியதோடு அவள் நிற்கவில்லை ; தனக்கென்று இரண்டு முழம் மல்லிகைச் சரமும் கட்டச்சொன்னுள்.

கார் மீண்டும் அங்கிருந்து கிளம்பிற்று.

சிறிது தூரம் சென்றதும்,

'' இந்த மல்லிகைச் சரத்தை இப்போதே தலையில் சூடிக் கொள்ள வேண்டுமென்று ஒரே ஆசையாக இருக்கிறது''

—என்று ஆர்வத்துடன் கூறி னுள் தேன்மொழி.

''ஏன் வைத்துக் கொள்வது தானே ?''

—என்றான் மாதவனும்.

''....அது எப்படி ? உள்ளங்கை இரத்தத் துளியோடு அதை எப்படித் தொட்டுப் பிரித்துச் சூடிக் கொள்வதாம் ?.. ஆனால்?''

'' என்ன 'ஆனால்'?''

'' ஆபத்துக்குப் பாவம் இல்லையென்று நீங்கள்தான் கொஞ்சம் ....?''

'' நன்றாக இருக்கிறது நீங்கள் சொல்வது ! நான் எப்படி உங்கள் தலைக்குப் பூச்சூட்டி விடுவது ?''

'' ஏன், சூட்டினால்தான் என்னவாம் ?''

—வேட்கையின் வெப்பத்தையெல்லாம் சுமந்த வண்ணம் கொஞ்சலாக மிதந்து வந்த தேன்மொழியின் இந்தச் சொற்களைக் கேட்டதும், மாதவனிடமிருந்து ஒரு வறட்டுத்தனமான நகைப் பொலியே வெளிப்பட்டது !



''.. .. இந்தக் கேள்வியை நீங்கள் புரிந்துதான் கேட்டீர்களோ ? புரியாமல் தான் கேட்டீர்களோ ? விளையாட்டாகத் தான் கேட்டீர்களோ ? வினையாகத்தான் கேட்டீர்களோ ? .. .. நானாவது இனிமேலும் இன்னொரு பெண்ணுக்குப் பூச்சூட்டுவதாவது ?''

'' நீங்கள் சொல்வதைப் பார்த்தால் முன்பே யாரோ ஒரு பெண்ணுக்குப் பூச்சூட்டி இருப்பீர்கள் போல் தெரிகிறதே ?''

—உள்ளூறத் தன் இதயத் துடிப்புகளைப் பிசைந்தெடுக்கும் ஓர் அச்சத்துடனேதான் கேட்டாள் தேன்மொழி.

'' உண்மைதான் ! .. .. முன்பே ஒரு பெண்ணுக்கு நான் பூச்சூட்டிக் கொண்டுதான் இருந்தேன்.''

—மாதவனின் கரகரப்பான குரல் அந்தப் பேதையின் நெஞ்சிலே இடியாகவே விழுந்தது ; உலகமே திடீரென்று இருண்டு போய் விட்டது அவளுக்கு ; தன்னை—யாரோ அந்த பியட் காரோடு சுழற்றி எடுத்து எங்கோ அதலபாதாளத்தில் தூக்கி வீசிய மாதிரி நடுநடுங்கிப் போனாள் அவள் !

(தொடரும்)



# வழங்கியோர் பட்டியல்



| பெயர். | தொகை. ரூ. | கா. |
|---|---|---|
| திரு டி. கே. பகவதி — — | 10 | 00 |
| ,, டி. எஸ். மணி ... ... | 10 | 00 |
| ,, வி. டி. ராமனாதன் ... ... | 101 | 00 |
| ,, ரங்கனாதன், எம்.சி. .. .. | 25 | 00 |
| ,, கே. ஏ. கிருஷ்ணசாமி, சென்னை .. | 10 | 00 |
| ,, நெல்லை நெடுமாறன், தூத்துக்குடி. | 501 | 00 |
| ,, டி. கேசவலு, எம்.எல்.ஏ., வேலூர். | 10 | 00 |
| ,, குளிக்கரை பிச்சையப்பா, திருவாவடுதுறை. | 20 | 00 |
| ,, பெத்தண்ணன், தஞ்சாவூர் .. | 51 | 00 |
| ,, எஸ். பரிசுத்தம் சகோதரர்கள், தஞ்சாவூர். | 25 | 00 |
| ,, டி. எஸ். கல்யாணசுந்தரம், திருத்துறைப்பூண்டி. | 10 | 00 |
| ,, கே. வேலவன், செயலாளர், தென் ஆர்க்காடு தி.மு.க. | 20 | 00 |
| ,, எஸ். அகமத் ஷெர்புதீன், விருதுநகர், ராமனாதபுரம். | 3 | 00 |
| ,, என். பரசுராமன், அருள் குடில், தென் ஆர்க்காடு மாவட்டம். | 1 | 00 |
| ,, இ. பரசுராம முதலியார், தலைவர், ஆரணி லாரி உரிமையாளர் சங்கம். | 101 | 00 |
| ,, எஸ். சிவப்பிரகாசம், திருச்சி .. | 10 | 00 |
| ,, டி. எஸ். தியாகராசன், ஆசிரியர், மாயூரம், தஞ்சாவூர் மாவட்டம். | 11 | 00 |
| ,, எம். பரமசிவம், எம்.எல்.ஏ., சேலம் மாவட்டம். | 10 | 00 |
| ,, டி. மணியநாதன், ஆண்டிமடம் .. | 10 | 00 |
| ,, ராயபுரம் கோபால் .. .. | 101 | 00 |
| ,, கே. சுப்பராயலு, திருவனந்தபுரம். | 11 | 00 |
| ,, டி. அண்ணாதுரை, அரசு உயர்நிலைப் பள்ளி, மட்டப்பாறை, மதுரை. | 10 | 00 |

| பெயர். | தொகை. ரூ. | கா. |
|---|---|---|
| திரு பி. முத்துசாமி, வேடசந்தூர், மதுரை. | 25 | 00 |
| ,, எஸ். பொன்னுசாமி, திருநெல்வேலி. | 10 | 00 |
| ,, எம். சம்பத், அறந்தை வட்டம், தஞ்சாவூர். | 10 | 00 |
| ,, புருஷோத்தமன், பி. முத்தூர், பரங்கிப்பேட்டை. | 10 | 00 |
| ,, பி. ராஜகோபால், வெங்கிட்டம் பேட்டை. | 10 | 00 |
| ,, கிருஷ்ணசுவாமி, சம்மடிக்குப்பம் .. | 15 | 00 |
| ,, எஸ். கே. சிவனையா, தலைவர், அருதயனூர் ஊராட்சி மன்றம். | 10 | 00 |
| ,, ஏ.எம்.டி.நாச்சியப்பன், எம்.எல்.ஏ., ஆத்தூர், மதுரை மாவட்டம். | 10 | 00 |
| ,, இ. எஸ். முத்துசுவாமி, தி. மு. க. தலைவர், திருச்செங்கோடு வட்டம். | 10 | 51 |
| ,, பி. சந்திரன், தலைவர், ஊராட்சி ஒன்றியம், சேலம் மாவட்டம் (அரசிராமணி). | 10 | 00 |
| ,, பி. வெங்கடகிருஷ்ணன், மாயூரம் வட்டம். | 10 | 00 |
| ,, கே. கோவிந்தராஜு, ஆசிரியர், பஞ்சாயத்துச் செய்தி. | 10 | 00 |
| ,, சி. வேலமுத்து (பொற்கொல்லர்), சர்ச் வீதி, கோயமுத்தூர். | 4 | 80 |
| மாண்புமிகு ராமசாமி, உள் இலாகா அமைச்சர், பாண்டிச்சேரி. | 10 | 00 |
| திரு கே. எஸ். கோதண்டராமையா, எம்.எல்.ஏ. | 10 | 00 |
| ,, என். பி. அரன், ராசிபுரம், சேலம் மாவட்டம். | 10 | 00 |
| ,, டாக்டர் என். எஸ். நரசிம்மன், சென்னை-17. | 10 | 00 |

| பெயர். | தொகை. | |
|---|---|---|
| | ரூ. | கா. |
| செல்வி கிரிமோலின் விக்டோரியா, நாகர்கோயில். | 1 | 00 |
| செல்வி தமிழ்ச்செல்வி, எம். ஏ., நாகர்கோயில். | 50 | 00 |
| திரு சர்க்கரை சௌகதலி, சையத் சுலைமான் (மற்றும் பலர்), ஔரங்காபாத். | 5 | 00 |
| மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி ... | 1,000 | 00 |
| திரு சண்முகசுந்தரராஜன் .. ... | 1,000 | 00 |
| ,, வி. கே. ராஜா பிள்ளை, எம்.எல்.ஏ. | 101 | 00 |
| ,, ராஜேஷ் கன்னா (காசோலை) .. | 11,000 | 00 |
| ,, ராஜேஷ் கன்னா (தொகை) .. | 10 | 00 |
| ,, ஈரோடு விஸ்வநாதன் ... ... | 101 | 00 |
| சவுத் இண்டியா ஷிப்பிங் கார்ப்பொரேஷன், சென்னை (காசோலை). | 5,000 | 00 |
| இந்தியா சிமென்ட்ஸ் (காசோலை) ... | 2,501 | 00 |
| திருமதி பத்மினி சிவசுப்பிரமணியன், ஷெனாய் நகர் சங்கம் (காசோலை). | 101 | 00 |
| திரு டாக்டர் டி. வி. அய்யாசாமி (காசோலை). | 100 | 00 |
| ஓரியண்டல் டாக்கீஸ் (காசோலை) ... | 1,001 | 00 |
| திரு ரிசப்சந்த் கன்க்ரியா (காசோலை) ... | 101 | 00 |
| ,, ஏ. எஸ். பார்த்தசாரதி, சேலம் (காசோலை). | 250 | 00 |
| ,, சிவகுருநாதன், மதுரை ... ... | 10 | 00 |
| ,, ஏ. எஸ். பார்த்தசாரதி ... .. | 92 | 00 |
| ஆணையர், கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், ஈரோடு (காசோலை). | 4,168 | 00 |
| திரு சுரேஷ்குமார், தாம்பரம் .. | 5 | 10 |
| ,, பி. வீரராகவன், தலைவர், வேங்கை வாசல் ஊராட்சி ஒன்றியம். | 11 | 00 |
| ,, தெய்வசிகாமணி, செயலாளர், தி.மு.க. | 12 | 91 |
| ,, பி. பொன்னுசாமி, எம்.ஜி.ஆர். பொதுப்பணி மன்றம், சேலையூர். | 10 | 00 |
| ,, பி. எஸ். செல்வராஜ், விஜயபுரம் (அஞ்சல்), திருவாரூர். | 15 | 00 |
| ,, கே. விஸ்வநாதன், கள்ளக்குறிச்சி வட்டம், தென் ஆர்க்காடு. | 2 | 00 |
| ,, கே. ஆர். தோட கௌண்டன், தர்மபுரி. | 11 | 55 |
| ,, டி. அன்பழகன், ஹை அல்டிட்யூட், வார்பார்பள்ளி. | 10 | 00 |
| ,, ஷாகுல் ஹமீது, பொள்ளாச்சி வட்டம், கோயமுத்தூர். | 10 | 50 |
| ,, எஸ். ஏ. அசோகன் ... ... | 1,000 | 00 |
| ,, கன்யகா பரமேஸ்வரி தேவஸ்தானம். | 1,116 | 00 |

| பெயர். | தொகை. | |
|---|---|---|
| | ரூ. | கா. |
| திரு கே. பாலகிருஷ்ணன், நகரசபை ஆதாரப்பள்ளி, பண்ணுருட்டி (அஞ்சல் காசோலை). | 0 | 50 |
| டாபிலெட்ஸ் பிரைவேட் லிமிடெட். | 1,001 | 00 |
| திரு டி. எஸ். கிளிகோதண்டம், சமூக நலச் சங்கம். | 101 | 00 |
| ஒலிம்பிக் மனமகிழ் மன்றம் ... ... | 101 | 00 |
| 'நாடகக் கலை' ஆசிரியர் .. .. | 10 | 00 |
| திரு டி. எஸ். குருநாதன் .. ... | 25 | 00 |
| செங்கை மாவட்ட சுகாதார ஆய்வாளர் சங்கம். | 201 | 00 |
| வருவாய்த்துறை அலுவலர் சங்கம், மன்னார்குடி. | 50 | 00 |
| தஞ்சாவூரில் நடத்தப்பட்ட கூட்டங்கள் மூலம் வரவு. | 45 | 00 |
| திரு எம். எம். ஆதம் .. .. ... | 5 | 00 |
| கே. லக்ஷ்மி நகரம் கூட்டுறவு அங்காடி. | 101 | 00 |
| திரு எஸ். பி. சென்னகிருஷ்ண நாடார், சிங்காரப் பேட்டை. | 48 | 48 |
| ,, பார்த்தசாரதி, சக்தி விலாஸ், பொறையார். | 2,010 | 00 |
| ,, எம். பி. கௌண்டர் .. .. | 10 | 00 |
| ,, எம். டி. தியாகராஜ பிள்ளை, கொரடாச்சேரி. | 10 | 00 |
| ,, திரவியம், சித்தமல்லி, திருநெல்வேலி. | 5 | 00 |
| ,, குட்டித் துரை, நெல்லை மாவட்டம். | 2 | 00 |
| ,, திருமலைசுவாமி கௌண்டர், மதுரை | 11 | 01 |
| எம். ஜி. ஆர். மன்றம், பழனிவட்டம். | 5 | 00 |
| திரு எஸ். முத்துசுப்பிரமணியம், மேட்டூர் அணை. | 3 | 00 |
| ,, ஜி. ராதாகிருஷ்ணன், மாயூரம் ... | 10 | 00 |
| ,, கஸ்தூரி லால்கோலி, புதுடெல்லி .. | 10 | 00 |
| ,, எஸ். என். பஸ்லுல்லா, சென்னை ... | 20 | 00 |
| ,, இ. சோலைமுத்து .. .. ... | 10 | 00 |
| ,, பாலகிருஷ்ணன், செயலாளர், தி.மு.க. விருதாசலம். | 10 | 00 |
| ,, எஸ். கோதண்டராமன், கும்பகோணம். | 100 | 00 |
| ,, ஆர். ஜெகனாதன், ஏர்க்காடு .. | 25 | 00 |
| ,, கலீல், ஆம்பூர் .. .. .. | 10 | 00 |
| ,, திருமலை முத்துசுவாமி .. .. | 10 | 00 |
| ,, கே. வி. எம். மொஹய்தீன், கீழக்கரை. | 11 | 00 |
| ,, ஹெர்பெர்ட்லோகெர், ஆம்பூர் ... | 100 | 00 |

(தொடரும்)

# தில்லைவன் கட்டுகிறான் பாலம்



டி.கே.டி துரைராசன்

"செந்தில் இல்லியாம்மா ?" பழக்கமான அந்தக் குரலைக் கேட்டு, காடா விளக்கை ஏற்றிக் கொண்டிருந்த அன்னம்மா திரும்பிப் பார்த்தாள். அந்தச் சின்னஞ்சிறு வீட்டின் வாயிற்புறத்தே அவளுக்கு மிகவும் பரிச்சயமான அந்தத் தோற்றம் தென்பட்டது.

தமிழ் ஆசிரியர் நின்றிருக்கிறார்.

"வாத்தியாரய்யாவா? வாங்க சாமி......" என்று பதற்றத்துடன்— அதே சமயத்தில் பாச உணர்வு பொங்கும் மரியாதையுடன் அழைத்தவாறே எழுந்தாள் அன்னம்மா.

ஆசிரியர் அதே இடத்தில் நின்றிருந்தார்.

"உள்ளே வாங்க சாமி" என்று பாயை எடுத்து விரித்துவிட்ட அன்னம்மா, ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றுகொண்டாள். பிரமாதமான வரவேற்போ— உபசரிப்போ இல்லையென்றாலும், அன்னம்மாவின் குரலில் இழைந்திருந்த அந்த பக்திபூர்வமான உணர்வு, ஆசிரியர் மேல் அவள் கொண்டிருக்கும் அளவற்ற கௌரவத்தைக் கோடிட்டுக் காட்டியது.

ஆசிரியர் உள்ளே வந்து அமர்ந்தார். பிறகு "சௌக்கியமா இருக்கீங்களா அம்மா ?" என்று கேட்டார்.

அன்னம்மாவின் முகத்தில் கோடி நன்றி நிரம்பியது. கண்களில், அந்த நன்றி உணர்வின் சின்னமாகக் கண்ணீர் துளிர்த்தது.

"நீங்க செய்த உதவியாலே நாங்க வயிராரச் சாப்பிட்டுட்டு, நிம்மதியா இருக்கோம் சாமி" என்று அடக்கத்தோடு பதில் கூறிய அன்னம்மா, ஆசிரியர், செந்திலைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறார் என்பதைத் திடீரென்று நினைத்துக்கொண்டவளாய் "செந்தில் இன்னும் பள்ளிக் கூடத்திலேயிருந்து வரலியே சாமி! மணி ஏழு இருக்கும் இல்லீங்களா?" என்று கேட்டாள்.

ஆசிரியர் தம் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஏழுதான். செந்தில் இப்போது வீட்டில் இருக்கமாட்டான் என்று தெரிந்துதான் அவர் வந்தார்.

"என்னமோ சாமி ...... இப்ப வரவர அவன் ஸ்கூல்லேயிருந்து லேட்டா வர்றான். ஏழு ஏழரை ஆயிடுது...." என்று சொல்லிக்கொண்டு வந்த அந்த அன்னை, "சாமி எதனாச்சும் சாப்பிடுறீங்களா ?" என்றும் கேட்டாள்.

"ஒண்ணும் வேணம்மா. இப்பத்தான் காபி சாப்பிட்டுட்டு வந்தேன்...." என்று கூறிய ஆசிரியர், தாம் சொல்ல வந்த சேதியை எப்படிச் சொல்லத் தொடங்குவது என்று விளங்காமல் சிறிது நேரம் அந்தச் சிறு வீட்டை அங்குமிங்குமாகப் பார்த்தபடியே இருந்து விட்டுப் பிறகு மெதுவாகச் சொன்னார்.

"செந்திலைப் பற்றி உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணும்...."

அவர் சொன்ன விதம்...... அன்னம்மாவின் இதயத்தில் சந்தடியில்லாமல் ஒரு பயம் வந்து இறங்கியது.

"என்ன சாமி?...." என்று சற்றுப் பரபரப்போடு கேட்டவள் "செந்தில் நல்லாப் படிக்கிறான்லே சாமி ?" என்று வினவினாள்.

"....ம்....ம்.. நல்லாத்தான் படிக்கிறான். வகுப்பிலே முதல்மார்க் வாங்குறான். படிப்பைப் பற்றியெல்லாம் ஒண்ணும் குறை சொல்ல முடியாது. ஆனா...." என்று கூறியபடியே, வலது கை ஆள் காட்டி விரலால் தரையைக் கீறத் தொடங்கினார் அவர்.

"ஆனா என்ன சாமி ?" என்று கேட்டவாறு ஓடி முன்னால் வந்து நின்றாள் அன்னம்மா.

"நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க.... என்ன காரணத்துக்காகவோ இந்த ரெண்டு மூணு நாளா பள்ளிக்கூடத்திலேயிருந்து மத்தியானம் அரை நாள் லீவு வாங்கிக்கிட்டு வெளியிலே போய்விட்டான்.." என்று ஆசிரியர் சொல்லி முடிப்பதற்குள்...

"எதுக்காக லீவு போட்டான் ?" என்று அவசரப்பட்டுக் குறுக்கே கேட்டாள் அன்னம்மா.

"எனக்கும் அது விளங்காமல்தான் இருந்தது. ஆனா இன்னக்கி சாயந்திரம் பள்ளிக்கூடம் முடிஞ்சு, நான் என் சொந்த வேலையா அண்ணாசாலை பக்கம் போனபொழுது அங்கே ஒரு சினிமா தியேட்டரிலே டிக்கட் வாங்கு

றதுக்காக செந்தில் கியூவிலே நின்னுருந்தான்....''

அவ்வளவுதான். அன்னம்மா விக்கித்துப் போனாள்.

'' செந்திலா நின்னுருந்தான்?'' என்று கேட்டாள்.

'' நீங்க இப்போ சந்தேகப் பட்டுக் கேட்ட மாதிரி, நானும் முதல்லே நம்பாமல், இது செந்தில்தானான்னு பார்த்தேன். அவன் செந்தில்தான்........ அதிலே சந்தேகம் இல்லே..''

சிறிது நேரம் அங்கு கனமான அமைதி நிலவியது. காரணம் அந்தச் சேதி அந்த இருவருக்குமே அதிர்ச்சியான ஒன்றுதான். அதிலும் அன்னம்மாவுக்குத்தான் எவ்வளவு பெரிய அதிர்ச்சி ! பள்ளியில் படிக்கும் தன் மகன், நல்ல முறையில் பண்போடு வளர்ந்து ஆளாவான் என்று நினைத்திருந்த அவள் நினைப்பு எங்கே ? இப்போது செந்தில் நடக்கிற அந்த நடப்பு எங்கே ?

'' அதாம்மா உங்க கிட்டே சொல்லிட்டுப்போகலாம்னு வந்தேன்...... ஏதோ ஒரு ஆசையிலே சினிமாவுக்குப் போயிருப்பான்னு நினைக்கிறேன். நீங்க லேசு பாசா அவனைக் கண்டிச்சி வையுங்க.. ... நானும் நல்ல புத்தி சொல்றேன்'' என்று ஆதரவாக ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்துவிட்டு ஆசிரியர் போய் விட்டார்.

ஆனால் அன்னம்மாவின் நிலை ?

மரத்தூணோரத்தில் தானுமொரு தூணாக நின்றுவிட்டாள் அவள். இலையைக் கிள்ளியதும் காம்பில் பால் துளிர்ப்பது போல், அவள் கண்களில் கண்ணீர்த் துளிகள் . . !

' கப கப ' வென்று பழைய நினைவுகள் மனத்தில் தோன்றி மறைந்தன.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு, கொடிய காச நோய்க்குக் கணவனைப் பலி கொடுத்துவிட்டு ஏழுஎட்டு வயதான செந்திலோடு அவள் பட்டணத்துக்கு வந்ததும், வேலை இல்லாமல், பிழைப்பதற்கு வழியுமில்லாமல் சில சமயங்களில் அவர்கள் பிச்சை எடுத்ததும் பின்னர் ஓர் நாளில் இதே தமிழாசிரியர் உதவியுடன் ஒரு பெரிய செல்வந்தர் வீட்டில் அன்னம்மா வேலைக்காரியாக அமர்ந்ததும், அதை அடுத்து செந்திலைப் பள்ளியில் சேர்த்ததும் அவனைப் பார்த்துப் பார்த்துத் தன் கடந்த காலத் துயரங்களையெல்லாம் மறந்துவிட்டு , ஒளிமயமான எதிர்காலத்தைப் பற்றி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவள் கனவு கண்டு கொண்டிருந்ததும் இன்று அந்தக் கனவுகள் எல்லாம் தூள் தூளாகச் சிதறிவிழுவதும் ..

அன்னம்மாவின் நெஞ்சில் ஒரு துயரக் கடலே பொங்கிவிட்டது.

' இன்று சினிமாவுக்குப் போகிறான் ! நாளைக்கு சிகரெட், பீடி குடிப்பான். அதற்கு அடுத்த நாள் . .?

'' வரட்டும் . வரட்டும் ..'' என்று குமுறியபடி, வீட்டை விட்டு வெளியில் வந்து நின்று கொண்டாள். அப்படி எவ்வளவு நேரம் நின்றாளோ ?

'' என்னம்மா ! வெளியிலே நின்னுக்கிட்டிருக்கே '' என்ற செந்திலின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

செந்தில் நின்றிருந்தான் — முகத்தில் புன்னகையோடும், கை நிறையப் பள்ளிப் புத்தகத் தோடும்.

செந்தில் மீண்டும் கேட்டான்; '' ஏம்மா வெளியிலே நின்னுக்கிட்டிருக்கே?''

அவள் பதில் சொல்லவில்லை. மகனை வெறித்துப் பார்த்தாள். இரவு நேரம்தான்; அங்கே போதிய வெளிச்சமும் இல்லைதான். ஆனாலும் அன்னை, தன்னைக் கோபமாகப் பார்ப்பதைச் செந்தில் புரிந்துகொண்டு விட்டான். மனத்தில் பயம் இடறியது.

'' எனக்குப் பசிக்குதும்மா .'' என்று அரைத் தொனியில் முணுமுணுத்தபடியே வீட்டுக்குள் நுழைந்த செந்திலைப் பின் தொடர்ந்து அன்னம்மாவும் புயல்போல் பிரவேசித்தாள்.

'' எங்கேடா போயிட்டு வர்றே ? '' அன்னம்மாவின் சீற்றம் தொடங்கியது. புத்தகங்களைப் பெட்டியில் வைப்பதற்காகக் குனிந்த செந்தில், நிமிர்ந்து விட்டான். நிமிர்ந்தவன் திரும்பிப் பார்த்தான். அப்பப்பா அந்தத் தாயின் முகத்தில் எத்தனை கோபக்கனல் ! அவன் ஒரு நாளும் பார்த்ததில்லையே..?

''என்னடா பேசாமெ இருக்கே? எங்கே போயிட்டு வர்றே ?''

என்ன பதிலைச் சொல்வது ? அம்மாவுக்குத் தெரிந்து விட்டதா? எப்படித் தெரிந்தது?

'' அம்மா , . வந்து. .''

பளீரென்று ஓர் அறை அவன் கன்னத்தில் விழுந்தது. விரல்களின் தழும்பு பதிந்தது !

'' அம்மா !''

மறுபடியும் ஓர் அறை. '' சினிமாவுக்கா போறே ? லீவு போட்டுட்டா போறே . போ .. போய் சினிமா தியேட்டர்லேயே விழுந்து தூங்கு '' என்று சீறியபடியே, செந்திலின் தலை மயிரைப் பிடித்து இழுத்து விட்டாள் அன்னம்மா !

தள்ளாடிப் போய்— அந்தத் தாக்குதலைச் சமாளிக்கமுடியாமல் சுவரின் மேல் போய் முட்டினான் செந்தில். முட்டியவன் '' நான் சொல்றதைக் கேளம்மா'' என்று கூறியபடியே சரிந்து விழுந்தான்.



அன்னம்மா இப்போது கையில் ஒரு சிறு விறகை எடுத்துக் கொண்டாள்.

"எத்தினி நாளா இப்படிக் கெட்டுச் சீரழியிறே . .? சினிமா வுக்குப் போனியே . . சிகரெட், பீடி குடிச்சியா . . குடிச்சியா . .?" என்று ஆங்காரமாகக் கத்திய வாறு செந்திலின், மேல்உதட்டை அந்த விறகுக் கட்டையால் இடித்தாள்.

"ஐயோ !" என்று கத்தி விட்டான் செந்தில்.

"கத்தாதே . . கொன்னுடு வேன்... டிக்கட் வாங்குறதுக்கு கியூவிலே நின்னப்ப மட்டும் சந்தோஷமா இருந்துதா ? இந்தக் கால் தானே கியூவிலே நின்னது ? இந்தக் கால்தானே . .!"

இரண்டு முழங்கால்களின் மீதும் மாறி மாறி விறகுக் கட்டை



விளையாடியது. அக்கம் பக்கத் திலிருந்தவர்கள் எல்லாம் என்னவோ-ஏதோ என்று ஓடி வந்துவிட்டார்கள்.

"குழந்தையை அடிக்காதே... குழந்தையை அடிக்காதே !"

"ஏண்டி பாவி .... குழந்தை யைப் போட்டுக் கொல்றே..?

இப்படிப் பலரும், பல வித மாகத் தடுத்தும், அன்னம்மாவின் ஆத்திரம் வெகு நேரத்துக்குக் குறையவில்லை. அந்த ஆத்திரத் திலிருந்து செந்திலும் மீளவில்லை. வாழ்க்கையில் படவேண்டிய அடி யெல்லாம் அவன் இப்போது பட்டாயிற்று.

: : : : :

இரவு நழுவிக்கொண்டிருந்தது.

மூலையில் சுருண்டு விழுந்து படுத்துவிட்டான் செந்தில். சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்த அன்னம்மாவின் கன்னங்களில் கண்ணீர்க் கோடுகள் ....!

பக்கத்து வீடுகளில் எந்த அரவமும் இல்லை. மணி, பத்துக்கு மேல் ஆகியிருக்கலாம்.

பார்வையை மட்டும் திருப்பி மகனைப் பார்த்தாள் தாய். அவன் தளர்ந்து போய் விழுந்து கிடந்த காட்சி . . . ! நெருப்பே நீராகக் கனிந்ததுபோல் அன்னம் மாவின் நெஞ்சம் இளகியது.

"டேய் ராஜா .." என்று குரல் கொடுத்தாள்; பதில் இல்லை.

"செந்தில் ... டேய் கண்ணு, எந்திரிச்சி சாப்பிடுடா ..."

அதற்கும் பதில் இல்லை,

மெதுவாக எழுந்து செந்திலின் அருகே வந்தாள். அமர்ந்தாள். அவன் முகத்தை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டாள். நெஞ்சில் துயரம் முட்டியது. அழுதாள். மௌனமாக அழு தாள்.

செந்தில் இப்போது புரண்டு படுக்க முயன்றான். அந்த இயக் கத்தில் அவன் தூக்கம் கலைந்து விட்டது. கண்களைத் திறந்து பார்த்தால் — அன்னையின் முகம் — கண்ணீர் ததும்பிய முகம் . .

"அம்மா . . அம்மா . ." என்று செந்தில் விம்மத் தொடங்கிவிட்டான்.

"ஏண்டா ராஜா.. இப்படிக் கெட்டுப் போயிட்டே . . ? பள்ளிக்கூடத்துக்கு லீவு போட் டுட்டு, யாருகிட்டேயும் சொல்லா மெ சினிமாவுக்குப் போறதுக்கு யாருடா உனக்குச் சொல்லிக் கொடுத்தா . . . . ?" என்று அடிபட்ட மகனை ஆரத் தழுவிக் கொண்டு புலம்பினாள் அன்னம்மா.

"சினிமா பார்க்கிறதுக்காக நான் டிக்கட்டு வாங்கலேம்மா.. மற்றவங்களுக்கு விக்கிறதுக் காக வாங்கினேன் . . அதுக் காகத்தான் லீவு போட்டேன்.." என்றான் செந்தில் விம்மியபடி.

அன்னம்மாவுக்கு விளங்கவில்லை. இவன் என்ன உளறுகிறான் ? அடிபட்ட பயத்தில் புலம்பு கிறானா ? அல்லது தவற்றை மறைப்பதற்காகப் பொய் சொல்கிறானா . . ?

"என்னடா செந்தில்சொல்றே? விக்கிறதுக்காக டிக்கட் வாங்கி னியா ?" என்று மகனை நிமிர்த்தி வைத்துக் கேட்டாள்.

"ஆமாம்மா . . அந்தப் புதுப் படத்துக்கு டிக்கட் எடுத்துவித்தா

ரெண்டு மூணு ரூபா அதிகமா விற்கலாம். நேத்திக்கும் முந்தா நாளும் இன்னிக்கும் லீவு போட்டுட்டுப் போயி டிக்கட்டு எடுத்து வித்தேம்மா! மொத்தம் எட்டு ரூபா அதிகம் கிடைச்சுது" என்று நிஜார் பைக்குள் கையை விட்டுக் கசங்கிய ரூபாய் நோட்டு களை எடுத்து நீட்டினுன் செந்தில்.

அன்னம்மாவுக்குப் பெரிய புதி ராகப் போய்விட்டது. பணம் சம்பாதிப்பதற்காக இவன் எதற்கு இந்த வழியில் இறங்கினுன் ?

'' செந்தில் . . இந்த யோசனை உனக்கு ஏண்டா வந்தது? யாருக்கு இந்தப் பணம் ?''

'' அம்மா உனக்கு ஞாபகம் இருக்கா . . அஞ்சாறு வருஷத் துக்கு முந்தி இந்த மெட்ராஸ் தெருவிலே நானும் நீயும் கை நீட்டிப் பிச்சை எடுத்திருக்கோம். அப்ப நாம எப்படியெல்லாம் வேதனைப்பட்டு அழுதிருக்கோம்'' என்று சொல்லிவிட்டு, அந்தத் துயரமான பழங்காலத்தை, நேருக்கு நேர் பார்ப்பதுபோல் எங்கோ வெறித்துப் பார்த்தான் செந்தில்.

"அதையெல்லாம்இப்ப ஏண்டா நினைக்கிறே ?''

'' அம்மா . . . . தமிழ்நாட்டிலே பிச்சைக்காரங்களே இல்லாமெ செய்யனும்ன்னு நிதி திரட்டு ருங்களாம் அம்மா . . அதுக்கு..''

'' அதுக்கு ?''

'' அதுக்குத்தாம்மா . . இந்த எட்டு ரூபா . . . . ''

அவ்வளவுதான் . . . . அன்னம்மா வின் உடல் சிலிர்த்து விட்டது. மகனின் இளம் உள்ளத்தில் இப்படி யொரு உயர்ந்த எண்ணமா ? அப்படியே ஆரத் தழுவிக் கொண்டாள் செந்திலை.

அவர்கள் தலைக்குமேலே சுவரில் ஒரு காலண்டர் படம்.

கடற்கரை; இராமாயணக் காவியத் தலைவன் இராமன் நின்றிருக்கிறுன். கடலுக்குப் பாலம் கட்டும் வேலை. அணில் ஒன்று மணல் சுமந்து கொண்டு வருகிறது.

அது ஒரு புராணக் கதை; கற்பனை.

ஆனுல். இப்போது பல ஆயிரக் கணக்கான பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வறுமை நோயில் வாடும் அவர்களைப் புது வாழ்வு என்னும் அக்கரைக்குக் கொண்டு சேர்க்க, தமிழகத்தின் தலைவன் பாலம் கட்டத் தொடங்கியிருப்பது,

நாம் அனைவரும் நேரில் காண் கின்ற அதிசயம்!

---




பொருநையாற்றிலே மழை பெய்து வெள்ளம் பெருகி வருகிறது; ஆற்று வெள்ளம் கண்ட பள்ளருக்கும் பள்ளி யர்க்கும் களிப்பால் உள் ளம் துள்ளுகிறது. கரை கடந்து வருகின்ற நீர் கடலின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு கதிரவன் தோன் றும் உதயகிரிவரை ஊடு ருவிப் பாய்கிறது. இப்பால் பொருநையாறு தோன்றுகின்ற பொதிகை மலைவரை மோது கிறது; இவ்வாறு இரு பாலும் உதைத்துப் பொங்கித் திணறிப் பாயும் பொருநை யாற்று நீரை அதன் அழகைப் பார்க்க,

பொருநையாறு பெருகிவர புதுமை பாரும் பள்ளீரே

எனப் பள்ளியரை அழைக்கின் றனர். இவ்வாறு கரை கடந்து, கவின் நிறைந்து பாயும் ஆறு பல்வகை மீன்களையும் அள்ளிவருகின் றது. அழகர் கருணை போல் பெருகி வரும் ஆற் றிலே, தண்ணீரை எதிர்த்து வரும் மீன்கள் பல; தவழ்ந்து வரும் மீனினங் கள் பல; துள்ளிக் குதிக்கும் மீன்களும், வெள்ளத்தோடு விரைந்து செல்லும் மீன்க ளும் பலப்பல; எத்தனை எத்தனை வகையான மீனி னங்கள்; சிறியவை, பெரி யவை, நீண்டன; நெகிழ் வன; பாய்வன; பதுங்கு வன; மிதப்பன; குதிப்பன; மின்னுவன; மேலே தாவு வன; முக்கூடற் பள்ளா சிரியர் இவற்றை, பரவை, குரவை, வாளை, கோளை, தேளி, மயிந்தி, உழுவை, அயிந்தி, கூனி, மணலி, ஆரால். ஒரா, அயிரை, கெண்டை, கெளிறு, வரால், துதிக்கை, மூக்கன், பண்ணை சாளை, எண்ணெய், பசலி, திருக்கை, கசலி, கெளுத்தி, பண்ணுங்கு, பாசி, மகரம், சள்ளை, மத்தி, உல்லம்' பொத்தி, மடந்தை, கடந்தை' செம்பொன் நொறுங்கி, மலங்கு, பஞ்சலைக்' கெண்டை, கருங்கண்ணி எனவகை வகை யாகக் காட்டுகிறுர்.



ஆப்பிரிக்காவில் உகாண்டா என்று ஒரு நாடு உள்ளது. அந்த நாட்டில் 'கரமோஜு' என்ற மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த ஆதிவாசிகள் துணியே உடுத்துவதில்லையாம். அந்த ஆதிவாசி மக்களின் தலைவன், அவர்களை ஆடை உடுத்தி நாகரிகமாக வாழுங்கள் என்று சொன்னாராம்.



அதைக் கேட்ட ஆதிவாசிகள் ''உங்கள் நவீன கருத்துக்கள் நாசமாய்ப் போகட்டும்; இப்படிப்பட்ட புதுமைகளால்தான் ஊரே குட்டிச் சுவராய்ப் போகிறது; காலரா நோய் பரவி 12 பேரைப் பலி கொண்டதற்கு உங்கள் நவீன கருத்துக்கள் தான் காரணம்'' என்று சொல்லி, ஆடை அணிந்திருந்த அந்தத் தலைவனை ஆடையில்லாமல் வாழும் அந்த மக்கள் அடித்து நொறுக்கியதுடன், '' இனிமேல் தலைவராக இருக்க வேண்டாம் '' என்றும் கூறி விட்டார்கள்.

'ஆடைக் குறைப்பு செய்யக்கூடாது' என்று ஒரு பக்கம் பலத்த முழக்கம் கேட்கிறது. ''ஆடையே அணியமாட்டோம்! அது எங்கள் பிறப்புரிமை'' என்ற முழக்கம் மறுபக்கம் கேட்கிறது. என்ன உலகமடா இது?

* * *

இத்தாலி நாட்டில் கடலுக்கு அடியில்—நீர் மட்டத்திற்கு 50 மீட்டர் கீழே புகைவண்டிப் பாதை ஒன்றும், பேருந்துகள், கார்கள் செல்ல 2 பாதைகளும் அமைக்கும் புரட்சித் திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை பிரிட்டன் நாட்டு விஞ்ஞானிகள் ஏற்றுள்ளனர்.

இத்தாலியின் ஒரு பகுதி சிசிலி; ஆனால் கடலால் துண்டிக்கப்பட்டு—தனியாக இருக்கிறது; இடையில் 3 கிலோ மீட்டருக்குக் கடல் சூழ்ந்துள்ளது. இத்தாலியை சிசிலியுடன் இணைக்கவே இத் திட்டம் வகுக்கப் பட்டது.

சிசிலியிலிருந்து சுரங்கப் பாதை போல் — துவங்கி அந்த 3 பாதைகளும் கடலின் அடி வழியாக இத்தாலியில் உள்ள ஒரு நகருக்குச் செல்லுகிறது. புகைவண்டிப் பாதை ஒன்றும் (போக-வர), பேருந்துகள், கார்கள் ஆகியவற்றிற்கான பாதைகள் இரண்டும் (போக-வரத் தனித்தனியாக) ஆக 3 பாதைகள் போடப்படுகின்றன.

இடைப்பட்ட கடல் பகுதியில் ஒரு சில இடங்களில் கடல் சுமார் 1,000 அடி ஆழம் இருந்தாலும், நீர் மட்டத்திலிருந்து 50 மீட்டர் கீழே அப்பாதைகள் அமைக்கப்படுகின்றன.



உருக்கு மற்றும் கான்கிரீட்டால் செய்யப்பட்ட குழாய்களை அந்த ஆழத்தில் நிறுத்தி அதற்குள் பாதை அமைக்கிறார்கள். இத் திட்டத்திற்கு 40 கோடி பவுன்கள் (ரூபாய் 720 கோடி) செலவு ஆகும்.

இந்தப் புரட்சித் திட்டத்தை அறிவித்ததற்காகவே, பிரிட்டன் நாட்டு நிறுவனத்திற்கு இத்தாலி நாட்டு அரசாங்கம் 10,000 பவுன்களைப் பரிசு தருவதாக அறிவித்துள்ளது.

சென்ற 4 ஆண்டுகளாக சூயஸ் கால்வாய் மூடப்பட்டுக்கிடப்பதன் காரணமாக உலக நாடுகளுக்குச் சுமார் 340கோடி டாலர்கள் அதிகப்படியாகச் செலவாகியிருக்குமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

இந்த ஆண்டும் இது திறக்கப்படவில்லை என்ருல் இந்த நட்டம் 500 கோடி டாலர்களாக உயர்ந்துவிடும்.

இந்தியாவில் சுமார் 22·50 இலட்சம் பேர் தொழுநோயால் (குட்ட நோய்) பாதிக்கப் பட்டுள்ளார்கள். இவர்களில் 10 இலட்சத்துக்கும் குறைவானவர்களுக்கே மருத்துவ வசதி கிடைக்கிறது. இந்தியாவில் 219 தொழு நோய் மருத்துவ மனைகள் உள்ளன; அவைகளில் 28,000படுக்கை வசதிகள்தான் உள்ளன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழுநோயாளிகளின் மருத்துவ வசதிக்காக ரூபாய் 5·12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கு மட்டும் ரூபாய் 60 இலட்சம் செலவிடப்படும்.

அண்மையில் ஆஸ்திரேலியாவில் ஒரு பெண் ஒரே பிரசவத்தில் 9 குழந்தைகளைப் பெற்றெடுத்தாரல்லவா ? அவருடைய கணவர் அந்த அதிசயப் பிரசவம் பற்றிய கதையை வெளியிடும் முழு உரிமையையும் ' சிட்னி ' நகரச் செய்தித்தாள் ஒன்றினுக்கு விற்றுவிட்டாராம். அவ்வாறு கதை வெளியிடும் உரிமையை வழங்கியதற்காக அவருக்கு 5 இலட்சம் ஆஸ்திரேலிய டாலரை அந்தச் செய்தித்தாள் வழங்கியுள்ளது.

வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனையின் இயக்குநராக இருக்கும் இங்கிலாந்து நாட்டு டாக்டர் ''வெப்'' என்பவருக்கு ''ஓ.பி.இ.'' என்ற கவுரவப்பட்டத்தை, தனது பிறந்தநாள் விழாவன்று இங்கிலாந்து நாட்டின் ராணி எலிசபெத் அவர்கள் வழங்கியுள்ளார்.

வடஆர்க்காடு மாவட்டம் திருவண்ணுமலையை அடுத்த செங்கம் பகுதியில் 11,000 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பெரிய விதைப்பண்ணை விரைவில் அமையவிருக்கிறது.

அந்தப் பண்ணையில் உயர் ரகப் பயறுவகைகள், நிலக்கடலை, சோளம், கம்பு, காய்கறிகள் ஆகியவைகளுக்கான விதைகள் உற்பத்தி செய்யப்படும். நெல், கரும்பு ஆகியவைகளுக்கும் அந்தப் பண்ணையில் ஒரு சிறு பகுதி ஒதுக்கப்படும்.

அந்த விதைப்பண்ணையில் 110 கிணறுகள் தோண்டப்படும். ஒவ்வொரு கிணறும் 70 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிப்பதாக இருக்கும்.

அந்தப் பண்ணையை அமைக்க ரூபாய் 4 கோடி செலவிடப்படும். அங்கு 3,000 முதல் 4,000 பேர்களுக்கு வேலை கிடைக்கும்.

தமிழ் நாடு அரசாங்க ஊழியர்கள் வேலையில் இருக்கும்பொழுது திடீரென்று இறந்துபோனுல், அவர்களது குழந்தைகளுக்குப் போதிய கல்விச் சலுகைகள் அளிப்பதற்குத் தமிழ் நாடு அரசு முடிவு செய்திருக்கிறது. இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது இந்த முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதன்படி, பதவியில் இருக்கையில் இறந்து போகும் அரசு ஊழியர்களின் பிள்ளைகள் பட்டப் படிப்பை முடிக்கும் வரையிலோ—திருமணம் செய்து கொள்ளும் வரையிலோ அவர்களது கல்விக்கான எல்லாக் கட்டணங்களும் ரத்து செய்யப்படும்.

அத்தகையவர்கள் விடுதிகளில் தங்கிப்படித்தால்—அவர்களின் குறிப்பிட்ட படிப்பு முடிந்து மேற்கொண்டு படிப்பைத் தொடரச் சொந்தஊருக்குச் செல்லும் வரையில் அவர்களின் விடுதிக் கட்டணங்களையும் அரசாங்கமே செலுத்தும்.

அவர்களின் சொந்த ஊர்களில் மேற்கொண்டு படிப்பைத் தொடருவதற்கு வசதியில்லாமல் இருக்குமானுல், தற்பொழுது படித்து வரும் இடங்களிலேயே படிப்பைத் தொடர விடுதிக் கட்டணத்தை அரசு செலுத்தும்.

# அண்ணா கனவு நிறைவேறியது !



இந்தியாவுக்கு ஆகாய விமானம் வேண்டுமென்று கேட்கலாம், அதிலே நியாயமிருக்கிறது. கப்பல்கள் வேண்டுமென்று கேட்கலாம், அந்தத் துறையிலே இன்னும் நாம் தேர்ச்சி பெறவில்லை என்பதால்! ஆனால் சோறு போடு என்று அன்னியரிடம் கேட்பது?

—பேரறிஞர் அண்ணா

"உற்பத்தியைப் பெருக்குமாறு நாம் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து ஆக்கமளித்த உழவர் பெருமக்கள் அனைவரும் நன்றிக்குரியவர்கள். விவசாயிகளின் முயற்சி, விவசாயத் தொழிலாளர்களின் உழைப்பு, அரசு அளித்த உதவி இவைகளின் காரணமாக உணவுப் பொருட்களுக்கு வெளியாரை எதிர்நோக்கியிருந்த நிலை முற்றிலும் மாறி 1970-71-ல் உணவுப் பொருள் வழங்கும் நிலையில் பிறர்க்கு உதவிடும் பெருமையினைப் பெற்றுள்ளோம். 1967–68-ல் நமது உணவு உற்பத்தி 57·72 லட்சம் டன்னாக இருந்ததற்கு மாறாக, 1970–71-ல் 70·30 லட்சம் டன் அளவுக்கு அதிகரித்துள்ளது."



—முதல்வர் கலைஞர்
(1971–72-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில்.)




# நெருப்புச் சிரிப்பு





மின்னலே !
பின்னலே !
சரமழை
நிறக்கரு
இடிவெடி
துடிதுடிப்
திங்கள்
எங்கள்முன்
திருச்செங்
திருச்செங்
மயக்கம்
தயக்கம்
தங்க
தங்க
தங்க
பொன்னகை
உன்னகை
கனேக்கும்
நனேக்கும்
உறவுமாப்
பருவப்
கட்டி
திட்டமிட்
விளங்கிய
களங்க
விண்வெளிப்
மண்வெளி
ஓடு
பாடும்
உடுப்பும்
இடுப்புக்
[illegible]
வண்ணக்
மின்னற்
பேர்தனிற்
ஊர்வலக்
காற்றிலே
ஏற்றிய
அரைத்துக்
உரித்த
சிரித்த
விரித்துக்
அலேநீர்க்
நிலேயா
வெளிச்சம்
பளிச்சிடும்
திங்களின்
இங்குன்
மின்மினிச்
விண்ணகத்
நெளிவதை
ஒளிவதைக்
ஒளியும்
ஒளியுடல்
குதிரை
மதுரையை
பாண்டியர்
வேண்டிப்
அற்பமஉன்
கர்ப்ப
மேனி
வானில்
அடக்கமாய்
நடுக்கம்
மழைக்குளிர்
அழைக்கிறேன்
ஓலேக்
சேலே
தங்கச்
தங்கக்

விண்மகள்
சுடரிழைப்
கொளுத்திய
முகில்களின்
வெடிக்குமுன்
புடன்நட
செங்கதிர்
வரும்திக்
கோடோ
கோடுநீ !
கொள்ளா
கொள்ளாத்
ரேகைநீ
மங்கையர்
நகைகளேத்
கண்டால்
நகைக்கென
இடிக்குரல்
அணேயா
பிள்ளேயின்
பெண்போல்
யணேக்கவும்
டெவன்உனத்
அறிவின்
நிலாவினேக்
பயணம்
மாந்தர்
காலிநீ !
கவிஞர்
எடுப்புமாய்
இணேயாய்
[illegible]
கொடிவள
கொடிஎன
கொடிஎனும்
கொடியாய்
ஆடிநீ
கொடிப்புகழ்
கரைத்த
பலாச்சுளே
தாழம்
காட்ட
குமிழிபோல்
வாழ்க்கையின்
போடும்
நீஎன்
விடுமுறை
வருகை
சரமே !
தில்நீ
அலேயிடம்
காலடி
திருடர்
இளேத்தநீ
கற்றுக்
ஆண்ட
வாளிடம்
பெற்று
ஆயுள்
முகில்தரும்
யிருந்தும்
நிலேத்திட
உன்னிடம்
எதற்கு ? நீ
நடுக்கமா ?
இறங்கிவா !
குடிசையின்
நிலாக்களின்
சங்கிலி
கம்பியே !

பின்னிய
பிணேயலே !
சாட்டைமத்
நெருப்புச்
எழும் சுடர்
மிடும்புது
தங்கள்
கொழுந்துக்
ஊர்ப்பெயர் ;
தேனிசை
வான்வெளிப்
தங்க
தங்கா
தங்கள்
தங்கிட
புன்னகை
உதிக்காப்
கருமுகில்
நல்ல
வரவுகண்
பதுங்குகின்
எட்டிப்
தேடித்
விஞ்ஞான
கலங்கிட
உன்வழிப்
மாற்றிட
உனேஎவன்
பலபேர்
உலவும்
இயம்புவர் !
[illegible]
வையத்
மேம்படப்
பெருமைநீ
உலாவரு
கம்ப
ஏற்றிடு
சந்தன
ஒளிர்நிறம்
பூமடல்
விளங்கிடும்
அழகுவான்
நிலேத்த
வெகுபலர்
பயத்துடன்
திங்களுக்
என்றூே
மெலிந்தபூச்
வெளிச்ச
நீகற்
ஓசையைக்
உணர்த்திவிட்
ஓடும்
கொடுத்ததா ?
மதுரச்
பளபளப்
விளங்குகின்
அற்புதம்
கர்ப்பூ
மேல்நீ
வழியிலே ;
அழகே
நடுங்கிட
மகிழ்ச்சியின்
அழைப்பிற்
ஏழைப்
சிந்தை
யாடிடத்
தரைக்குவா

வெளிச்சப்
கொட்டும்
தாப்புநீ !
சிரிப்புநீ !
வெளிச்சமே !
நடிகைநீ !
உறவால்
குழந்தைநீ !
வான்ஊர்
மகுடியில்
பாம்பே !
ரேகையே !
ரேகையே
மேனியில்
வைப்பர் ;
புரிவர் !
புன்னகை !
மழைஉனே
நெருப்புநீ !
டொளியும்
ருயே !
பிடிக்கவும்
திரிகிருன் ?
வித்தகர்
வைக்கிருர் !
பயணமாய்
மாட்டார் !
பிடிப்பான் ?
உன்னே
பெண்களின்
பாவலர்
தினர்உனே
புகழ்வர் !
பெறினும்
வாயா ?
உச்சியில்
வாயா ?
நிறத்தை
தன்னே
நிறத்தினே
விளக்குநீ !
வில்போல்
உவமைநீ !
உயர்கிருர் ;
ஒளிகிருய் ?
கொருமுறை !
ஒருமுறை !
சரமே !
விருந்தினள் !
ருயா ?
கேட்டே
டாரா ?
ஓட்டம்
முன்னர்
செந்தமிழ்ப்
பைநீ
ருயா ?
உன்எழில் !
ரச்சுடர்
யிருந்தும்
மறைகிருய்
இருக்கையில்
லாமா ?
நடனமா ?
கிரங்கிவா !
பெண்களாம்
மகிழ்ந்திடத்
விரைவிலே!




புலவர் பொன்னிவளவன்

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திரம் வட்டம் மணிமுத்தாறுக் கருகிலிருக்கும் எனது புன்செய் நிலத்தை அபிவிருத்தி செய்து கிணறு வெட்டி, பம்பு செட் வைத்து நீர்ப்பாசன வசதி செய்துகொள்ளவும் தமிழக அரசு "அபிவிருத்திக் கடன்" உதவி அளித்து வருகின்றது எனக் கேள்வியுற்றேன். அதையொட்டி தமிழக அரசைச் சார்ந்த துறையின் பெயர், தொடர்பு கொள்ளவேண்டிய அலுவலரின் பெயர், முகவரியையும் எனக்குத் தெரிவிக்கவும். மேலும் மண் பரிசோதனை செய்யும் அரசாங்க பரிசோதனை நிலைய முகவரியையும் தெரியப்படுத்தக் கோருகிறேன்.

எச். சங்கரன்,
மாதுங்கா, பம்பாய்-19.

புன்செய் நிலத்தை அபி விருத்தி செய்து கொள்ளவும், கிணறு வெட்டி பம்புசெட் வைத்து நீர்ப்பாசன வசதி செய்து கொள்ளவும் தேவைப் படும் கடன் தொகையைத் தற் பொழுது தமிழ்நாடு அரசு, கூட்டுறவுத்துறை மூலமாகவே கொடுத்து உதவுகிறது. கூட்டு றவுத்துறையின் முக்கிய அங்க மாக விளங்கும் நிலவள வங்கி கள் (Land Development Banks) இதற்கான கடன்களை வழங்கு கிறது. உங்கள் ஊருக்கு அருகில் உள்ள நிலவளவங்கி யிலேயே நீங்கள் கடன் பெற லாம். உங்கள் ஊராட்சி ஒன் றியத்தில் பணியாற்றும் கூட்டு றவு வளர்ச்சி அலுவலர் [Extension Officer (co-operation)] அவர்களுடன் இதுபற்றித் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுடைய ஊர் தெரிந்தால் தானே எந்த ஊராட்சி ஒன் றியத்தைச் சேர்ந்தது என்று கண்டுபிடித்து முகவரியைத் தெரி விக்க இயலும்?

திருநெல்வேலி மாவட்ட உழவர்கள் மண் பரிசோதனை செய்ய வேண்டுமானால், உங்கள் வேளாண்மை வளர்ச்சி அலு வலர் அல்லது ஊர்நல ஊழியர் (கிராம சேவகர்) உதவியுடன் மண் மாதிரிகளை எடுத்து, உங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலமாகப் பின் கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

"உதவி மண் இரசாயன
வல்லுநர்,
மண்பரிசோதனை நிலையம்,
கோவில்பட்டி (அஞ்சல்),
திருநெல்வேலி மாவட்டம்.

தமிழரசு இதழில் (சனவரி 1,1971) "உழவர் பெருமக்களுக்கு காணிக்கை" என்ற தலைப்பில் 'பொகைன்வில்லா ஜின்னே' என்ற செடி பற்றிக் குறிப் பிடப்பட்டிருந்தது. செடி அல்லது விதை எங்குக் கிடைக்கும் என்பதை யும், அதை எப்படிப் பெறுவது என் பதையும் தெரிவிக்க வேண்டுகிறேன். 'சேம்பிள் போஸ்டில்' பெறுதல் முடியுமா என்பதை அறிய விரும்பு கின்றேன்.

கா. நாகராசன்,
புதுப்பட்டி.


## நல்வாழ்த்துக்கள்

**யுனைடெட் இந்தியா ரோலர் 'ஃப்ளவர்' மில்ஸ்**
**பிரைவேட் லிமிடெட்**
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, ரூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath

'பொகைன்வில்லா ஜின்னே' வேர்விட்ட தண்டுப்பதியங்களா கவே கிடைக்கும். இச் செடிக்கு விதை கிடையாது. வேர்விட்ட தண்டுப்பதியங் கள் (Rooted Cuttings) வேண்டுமானால் பின்கண்ட முக வரிக்குத் தொடர்பு கொள்ளுங் கள் :

'' மலர்வகை நிபுணர் ''
(Floriculturist)

வேளாண்மைக் கல்லூரி
ஆராய்ச்சி நிலையம்,
கோயம்புத்தூர்-3.

முன்பணம் கட்டியே பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். மேற்கண்ட முகவரிக்கு எழுதிக் கேட்டுக் கொள்ளுதல் நல்லது.

**நான் தமிழரசை ஒழுங்காகப் படிப் பவன். முக்கியமாக, 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியை ஒழுங்காகப் படிப்பவன். நான் ஒரு கேள்வி கேட்கிறேன்! நான் ஒரு தாவர இயல் பட்டதாரி (B.Sc. Botany). விவசாயம் செய்ய அதிக விருப்ப முள்ளவன். ஆனால் நிலம் கிடை யாது. ஆகவே என் எண்ணத்தைச் செயலாற்ற வசதி இல்லை. ஆதலால் அரசாங்கப் பண்ணைகள் உதவுமா? அரசு உதவி செய்யுமா?**

*ராபின்சன் லேவி, காட்டுவிளை.*

உங்களுக்கு ஆசை இருக்கி றதே ஒழிய, உங்களிடம் ஆர்வ மும், முயற்சியும் இல்லை என்றே எண்ணுகிறேன். தாவர இயல் பட்டதாரியான தாங்கள் நில மில்லாமலேயே வேளாண்மை செய்ய முடியும். பெட்டிகளி லும், தொட்டிகளிலும், தகர டப்பாக்களிலும் கூடக் காய்கறிச் செடிகளைப் பயிரிடலாம். மொட்டை மாடிகளிலே நெல் சாகுபடியும் செய்து வருகிறார் கள் சிலர். முயற்சியும் ஆர்வமும் இருக்குமானால் நிலம் இல்லையே என்று கவலைப்படாமல் மேற் கூறிய முறையில், முதலில் காய்கறிச் சாகுபடி செய்ய முயலுங்கள். அதன்பின் நெல் முதலிய மற்றவைகளைப் பயிரிடு வதுபற்றிச் சிந்திக்கலாம்.

நிலமற்ற ஏழைகளுக்குத் தமிழ் நாடு அரசு நிலப்பட்டா கொடுத்து வருவது உங்களுக்குத் தெரியாதா? உங்கள் கோரிக் கையைக் குறிப்பிட்டு நிலப் பட்டா கொடுக்குமாறு உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு அனுப்பினீர்களா? அல்லது இதுபற்றி நேரில் சந் தித்தாவது மனு கொடுத்தீர் களா? இல்லையென்றால் இனி யாவது முயற்சி செய்யுங்கள். நிலப்பட்டா கிடைக்கவில்லை யென்றாலும், குத்தகைக்கும் வாரத்திற்கும் பயிரிடலாமே! அவ்வகையிலாவது தாங்கள் முயன்றிருந்தால், உங்கள் ஆசை நிறைவேறியிருக்குமல்லவா?

**இராமநாதபுரம் மாவட்டம் புது வயல் அருகாமையில் உள்ள என் நிலத்தில் இதுவரை சம்பா, சித்தடி யான் போன்ற நெல் வகைகள் தான் பயிரிட்டு வந்தேன். ஐ. ஆர். 8 நெல் அதிக மகசூல் தரும் என்று கூறப் படுவதால் இனிமேல் அதையே பயிரிட லாம் என எண்ணுகிறேன். ஐ.ஆர். 8 பயிரிட்டு அதிக விளைச்சல் காண என்ன உரம் இடவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், என்பதை விளக்கிக் கூறுங்கள்.**

*மெ.லெ. பழனியப்பன், சென்னை-17.*

உயர்விளைச்சல் தரும் ஐ.ஆர்.-8 ரக நெல்லை கார், சொர்ணவாரி பட்டத்திலும் (மே முதல் செப்டம்பர்வரை) நவரைப் பட்டத்திலும் (ஜனவரி முதல் மே வரை), கீழ்பவானி மற்றும் அமராவதி புதிய ஆயக் கட்டுப்பகுதிகளில் மட்டும் ஆகஸ்டு முதல் டிசம்பர் வரையான காலத்தில் சாகுபடி செய்யுமாறு வேளாண்மைத் துறை பரிந்துரைக்கிறது. சம்பாப் பட்டத்திற்கு ஐ.ஆர்.-8 பயிரிடுவது விரும்பத்தக்கது அல்ல. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மப்பும் மந்தார மாகவும் உள்ள நிலைமை 'பேக் டீரியல் இலைக்கருகல்' நோயைத் தோற்றுவிக்குமாதலின் சம்பாப் பட்டத்தில் ஐ.ஆர்.-8 ரகத்தைப் பயிரிடுவது விரும்பத்தக்கது அல்ல. எனவே சம்பாவுக்குப் பதிலாக ஐ.ஆர்.-8 பயிரிடுவதைத் தவிர்க்குமாறு வற்புறுத்து கின்றோம். மேலே குறிப்பிடப் பட்ட பட்டங்களில், தாங்கள் ஐ.ஆர்.-8 பயிரிட முடியுமெனில் செய்யலாம்.

ஐ.ஆர்.-8 நெல் சாகுபடி பற்றிய முழு விளக்கம் 1—7—71 இதழில் வெளியிடப் பட்டுள்ளது. அதைப்படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

**வேளாண்மை பற்றிய**
**வினாக்களே கேட்கப்பட**
**வேண்டும்!**

'' ஏய்! மஞ்சுளா! செக்கச் சிவந்த தக்காளிப் பழம்போல தளதளவென்று இருக்கிறாயே! எப்படியடி இப்படியானாய்? கல்லூரியில் புகுமுக வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பொழுது ஒல்லியாக, அதாவது என்னைப்போல், எலும்பும் தோலுமாக இருந்தாயே! இப் பொழுது எப்படியடி இந்த அளவுக்குத் தளதளவென்று ஆகி யுள்ளாய்?'' என்று எதிரில் வந்து கொண்டிருந்த மஞ்சுளா வை, மருத்துவக் கல்லூரி மாண வியான மாலா வியப்புடன் கேட்டாள்.

'' மாலா! நலமாக உள் ளாயா? உன் அப்பா, அம்மா, அண்ணன் மாமா எல்லாரும் நலமா? இப்போ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று அன்புடன் கேட்டாள் மஞ்சுளா.

'' எல்லாரும் நலமாகத் தான் உள்ளோம். உன் அப்பா, தம்பி எல்லாரும் நலமா? நான் மருத்துவக் கல்லூரியில் கடைசி ஆண்டு படித்துக் கொண் டிருக்கின்றேன். நீ என்னடி செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டாள் மாலா.

'' அப்பாவுக்கு உடல் நல மில்லாமல் வீட்டிலேயே இருக் கின்றார். தம்பி, பி.ஏ. படித்துத் தேர்வு பெற்று உள்ளான்; வேலை தேடி அலைந்து கொண் டிருக்கின்றான். நான் பி.எஸ்சி படித்து முடித்துவிட்டு, தற் பொழுது வேளாண்மைத் துறை யில் இளநிலை எழுத்தராகப் பணியாற்றி வருகின்றேன். எங் கள் தெருவில் உள்ள குழந்தை களுக்கு இரவில் டியூஷன் சொல் லிக்கொடுத்து மாதம் ரூபாய் 100 அல்லது 150 சம்பாதித்துக் கொண்டிருக்கேன். சம்பளத் தையும், டியூஷன் மூலம் கிடைக் கும் வருமானத்தையும் வைத்துத் தான் குடும்பத்தை நடத்தி வரு கின்றேன். தம்பியையும் படிக்க வைத்து விட்டேன். அவனுக்கும் ஒரு வேலை கிடைத்துவிட்டால், எங்கள் கஷ்டம் தீரும் என்று நம்புகிறேன்'' எனக் கூறிப் பெரு மூச்சு விட்டாள் மஞ்சுளா.



''ஐயோ பாவம்! உன் கஷ்டம் இன்னுமா தீரவில்லை? உன் கஷ்டத்திற்கெல்லாம் சீக்கிரம் விடிவுகாலம் பிறக்குமடி! கவலைப்படாதே! உன்னைப் பார்த்ததும், நானும் உன்னைப்போல் தளதளவென்று ஆகணும் என்ற ஆசை பிறந்து விட்டது. எனக்கும் அந்த ரகசியத்தைச் சொல்லு மஞ்சுளா! ஏதாவது உடற் பயிற்சி செய்து வருகிறாயா? அல்லது 'டானிக்' சாப்பிட்டு வருகிறாயா? தயவு செய்து அந்த ரகசியத்தைச் சொல்லு மஞ்சுளா!'' என்று கெஞ்சினாள் மாலா.

''மாலா! இதில் ஒன்றும் ரகசியமே இல்லை. நாங்கள் தான் ஏழை என்பது உனக்குத் தெரியுமே! சாப்பாட்டிற்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நான் எப்படியடி 'டானிக்' வாங்கிச் சாப்பிட முடியும்? வீட்டு வேலைகளைக் கவனிக்கவும், அலுவலக வேலையைப் பார்க்கவுமே எனக்கு நேரம் போதவில்லை. இப்படியிருக்கையில் நான் உடற் பயிற்சி செய்து உடம்பை வலுவாகவும் வனப்பாகவும் வைத்துக் கொள்ள முடியுமா? செக்கச் சிவந்த தக்காளிப் பழம் போல் தளதளவென்று இருக்கின்றேன் என்று நீ சொல்லியது ஒரு வகையில் உண்மை. நான் இவ்வாறு ஆகியதற்கு, செக்கச் சிவந்த தக்காளியே மூலகாரணமாகும். எங்கள் வீட்டில் தொடர்ந்து தக்காளி பயிரிட்டு வருகின்றேன். நாள்தோறும் காலையிலும் மாலையிலும் தவறாமல் ஒரு தக்காளிப் பழம் சாப்பிட்டு வருகின்றேன். தக்காளிப்பழம் சாப்பிட்டு வருவதனாலேயே நான் இவ்வாறு ஆகியுள்ளேன். மாலா! மன்னித்துக் கொள்! மணி ஆகிவிட்டது! முன்னாடியே சென்றால்தான் பஸ்ஸில் இடம் கிடைக்கும். இல்லையெனில் அலுவலகத்திற்குக் காலங்கடந்துதான் செல்ல நேரிடும். நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை தானே, எங்கள் வீட்டுக்கு வாயேன். ஆற அமரப் பேசிக் கொள்ளலாம்'' என்றாள் மஞ்சுளா.

''சரி மஞ்சுளா! நாளை காலை 10மணிக்கெல்லாம் வந்துவிடுகின்றேன். நீ அலுவலகத்திற்குப் போ!'' என்று கூறி விடை கொடுத்தாள் மாலா.

''கண்டிப்பாக வரவேண்டும்; மறந்து விடாதே! அப்போ நான் புறப்படுகிறேன்'' என்று கூறி விடை பெற்றுக் கொண்டு விரைந்து நடந்தாள் மஞ்சுளா.

மஞ்சுளா நடந்து செல்லும் அழகைக் கண்டு அசையாமல் நின்று பார்த்துக் கொண்டே இருந்தாள் மாலா. மாலாவும், மஞ்சுளாவும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டுவிட்டு அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த மாலாவின் மாமா டாக்டர் இளஞ்சேரன் சற்றுத் தூரத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு மாலாவின் அருகே வந்தான். அவன், அருகில் வந்ததைக் கூடக் கவனிக்காமல் மஞ்சுளாவையே பார்த்துக் கொண்டிருந்தாள் மாலா. அது கண்ட இளஞ்சேரன் ''என்ன மாலா, அந்தப் பெண்ணைப் பார்த்து இப்படி அசந்து நின்றுவிட்டாய்! யார் அது?'' என்று கேட்டான்.

''மாமா! நல்ல நேரத்தில் வந்து சேர்ந்தீர்கள்! அந்தப் பெண்ணைப் பார்த்தீர்களா? அவளுடைய பெயர் மஞ்சுளா. மிகவும் அழகாய் இருக்கிறாள் இல்லையா மாமா?'' என்றாள் மாலா.

''எனக்கு எந்தப் பெண் அழகாய் இருக்கிறாள் என்று பார்க்கும் வேலையா? நீ யாருடனோ வழியில் பேசிக்கொண்டு நிற்பதைக் கண்டதும் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வந்தேன். அதற்குள் அந்தப் பெண் போய்விட்டாள். நான் பார்க்கவில்லையே! யார் அந்தப் பெண்?'' என்றான் இளஞ்சேரன்.

''அதையெல்லாம் அப்புறமா விவரமாகச் சொல்கிறேன். முதலில் சீக்கிரம் போய் அந்தப்பெண் அழகாய் இருக்கிறாளா, இல்லையா, என்பதைப் பார்த்துவிட்டு வந்து சொல்லுங்கள்!'' என்று கட்டளையிட்டாள் மாலா.

எதிர்கால மனைவியாக வரப் போகிற மாலாவின் கட்டளையை மீற முடியாமல், இளஞ்சேரன் ஓட்டமும் நடையுமாக மஞ்சுளாவைப் பின் தொடர்ந்தான். மஞ்சுளா மாம்பலம் பேருந்து நிலையத்தில் 11-சி நிற்குமிடத்தில் நின்றாள். அவளருகில் சென்று சற்று நேரம் நின்று கவனித்தான் இளஞ்சேரன். மஞ்சுளா மிகவும் அழகாகவும் அடக்க ஒடுக்கமாகவும் இருப்பதைக் கண்டுகொண்டு மாலா நின்ற இடத்திற்குத் திரும்பி வந்தான்.

''மஞ்சுளா மிகவும் அழகாக இருக்கிறாள். அடக்கமாகவும் இருப்பாள் என்று கருதுகிறேன். தக்காளிப் பழம்போல தளதளவென்று இருக்கிறாள். எதற்காக அவளைப் பார்த்துவிட்டு வரச் சொன்னாய் மாலா?'' என்று கேட்டான் இளஞ்சேரன்.

''அவளைப்போல் நானும் ஆக வேண்டும். அவள் தொடர்ந்து தக்காளிப்பழம் சாப்பிட்டுத்தான் இப்படி ஆகியுள்ளாளாம். அதற்கு முன்பு என்னைப்போல்தான் எலும்பும் தோலுமாக இருப்பாள். விவரம் கூறுவதற்காக, நாளைக்கு அவள் வீட்டுக்கு என்னை வரச் சொல்லி இருக்கிறாள். நானும் அவளைப் போல் ஆக வேண்டும் மாமா! முடியுமா?'' என்று கவலையுடன் கேட்டாள் மாலா.

''அட கண்ணராவியே! இப்படி ஒரு ஆசையா உனக்கு! இதற்காகவா என்னை அலைய வைத்தாய்? நான், வேறு ஏதேனும் காரணமாக இருக்குமென்று அல்லவா நினைத்தேன்!'' என்றான் இளஞ்சேரன்.

''நீங்கள் எப்படி நினைத்தீர்கள்?''

''அண்ணனுக்குத் திருமணம் நடந்தால்தானே நமக்குத் திருமணம் நடக்கும் என்று எண்ணி அந்தப் பெண்ணை உன் அண்ணனுக்குத் திருமணம் செய்து வைத்துவிடலாம் என்று நினைத்துத்தான் என்னைப் பார்த்து வரச் சொன்னியாக்கும் என்றல்லவா நினைத்திருந்தேன்!''

''நானும் அப்படித்தான் நினைத்தேன். என்னால் அதை வெளியே சொல்ல முடியவில்லை. நீங்கள் ஆண்பிள்ளையாதலின் சொல்லிவிட்டீர்கள். நம் யோசனையை அண்ணன் ஏற்றுக் கொள்ள வேண்டுமே!''

''மாலா! அந்த வேலையை என்னிடம் விட்டுவிடு! நான் பார்த்துக் கொள்கின்றேன். நீ வீட்டுக்குப்போ; நான் மாலையில் வந்து பேசிக் கொள்கின்றேன்'' என்று கூறிவிட்டு, மோட்டார் சைக்கிள் ஏறி வேகமாகப் போய்விட்டான் இளஞ்சேரன்.

அன்று மாலை 6 மணிக்கு வீடு திரும்பிய இளஞ்சேரன் முதல் வேலையாக எழிலரசு தங்கியிருந்த மாடியில் உள்ள அறைக்குச் சென்றான். அமைதியாகப் படுத்திருந்த எழிலரசின் நெற்றியில் கையை வைத்துப் பார்த்து விட்டு ''என்ன மாப்பிள்ளே! தலைவலி என்று மாலை 3 மணிக்கே வீட்டிற்கு வந்து விட்டாயாமே!'' என்று கேட்டான்.

''ஆமாம்! மாமா! தலைவலி அதிகமாக இருந்தது. அதனால் வந்துவிட்டேன்'' என்றான் எழிலரசு.

''ஏதாவது மாத்திரை சாப்பிட்டாயா?'' என்று கேட்டான் இளஞ்சேரன்.

''இல்லை, மாமா! கொஞ்சம் தூங்கி எழுந்ததும் சரியாகிவிட்டது'' என்று பதிலளித்தான் எழிலரசு. அவர்களுடைய பேச்சு தொடர்ந்தது.

''உனக்கு ஏன் தலைவலி அடிக்கடி வருகிறது என்பது எனக்குத் தெரியும். உனக்குத் தலைவலியே வராமல் இருக்க ஒரு வழி சொல்கிறேன். கேட்கிறாயா?''

''என்னவென்று சொல்லுங்க மாமா!''

''செக்கச்சிவந்த தக்காளிப்பழம் போலத்தளதளவென்றுஒருபெண் இருக்கு. நேரில் பார்த்து விட்டாயானால், அந்தப் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று நீ பிடிவாதம் பிடிப்பாய். நீ ஒப்புக்கொண்டால் நாளையே நாம் போய் அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு வரலாம். என்ன சொல்கிறாய்?''

''எத்தனையோ பெண் பார்த்தாச்சு! எனக்குப் பிடித்தால் என் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. என் அம்மாவுக்குப் பிடித்தால், என் அப்பாவுக்குப் பிடிக்கவில்லை. இப்படியே தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது: மூன்று பேருக்குமே பிடித்தமாதிரி ஒரு பெண்ணும் கிடைக்காது! எனக்கும் திருமணம் ஆகாது!'' என்று அலுத்துக்கொண்டான் எழிலரசு.

''அடேயப்பா! எழிலரசு, நீ எப்படித்தான் எம்.பி.பி.எஸ். படித்து டாக்டராக ஆனாயோ! நீ இந்தக் காலத்தில் பிறக்கவேண்டியவனில்லையடா! நூறு ஆண்டுக் காலத்திற்கு முன்பு பிறந்திருக்க வேண்டியவன் நீ! அவனவன் பெண் பிடித்திருந்தால், அப்பா அம்மாவுக்குத் தெரியாமல் திருமணம் செய்துகொண்டு திடீரென்றுஅப்பா அம்மாவிடம்வந்து ''மன்னித்து விடுங்கள்'' அல்லது 'ஆசீர்வாதம் செய்யுங்கள்' என்று கேட்கிறான். திருமணம் செய்து கொள்ளப் போகிறவன் நீ! உனக்குப் பெண் பிடித்திருந்தால் போதாதா? உன் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பிடித்திருக்கவேண்டுமென்றால் முடியுமாடா? இந்தப் பெண் தான் பிடித்திருக்கு என்று உள்ளத்தைத் திறந்து சொல்லேண்டா!''

''நான் என்ன மாமா செய்வது? அப்பா அம்மாவை எதிர்த்துப் பேச எனக்குத் துணிவில்லையே!''

''அப்பா அம்மாவை எதிர்த்துப் பேசு என்று சொல்லவில்லையே நான்! உன் உள்ளத்தில் உள்ளதை மறைக்காமல் அப்பா அம்மாவிடம் கூறிவிடு என்று தானே சொல்லுகிறேன்! இதைச் சொல்லக்கூட உனக்குத் துணிவு இல்லையென்றால், நீ எப்படித்தான் பெரிய டாக்டராக ஆகப்போகிறாயோ! உங்க அப்பா—என் மாமா ஒரு கஞ்சன்! உங்க அம்மா—என் அக்கா ஒரு பத்தாம் பசலி! அவர்கள் இருவருக்கும் பிடித்த மாதிரியா பெண் கிடைக்கும் என்பது ஐயத்திற்குரியதே. உங்க அப்பா அம்மா பேச்சைக் கேட்டால் நீ வினாயகர் மாதிரி பிரம்மச்சாரியாகத்தான் வாழவேண்டியிருக்கும்! இது நிச்சயம்! நீயே சிந்தித்து முடிவு செய்து கொள்!''

''கேட்டியா மங்கம்மா! உன் தம்பி என்னைக் கஞ்சன் என்றும், உன்னைப் பத்தாம் பசலி என்றும் சொல்வதை! இந்தப் பயல் நம்ம பையனைக் கெடுத்து விடுவான் போலிருக்கே!'' என்று கோபமாகக் கூறிக் கொண்டே வந்தார் சிங்காரவேலர்.



''அவன்தான் எப்பவும் துடுக்காச்சே! கிடக்கிறான் விடுங்க'' என்று கூறிக்கொண்டே பின்னால் வந்த மங்கம்மாள் தன் மகன் எழிலரசின் அருகில் சென்று ''ஏம்பா! உனக்கு எந்தப்பெண் பிடித்திருக்கென்று சொல்லியிருக்கலாமே!'' என்றாள்.

கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்ட திருடனைப்போல் எழிலரசு பதில் சொல்ல முடியாமல் விழித்தான். அதைக்கண்ட இளஞ்சேரன் ''அதெல்லாம் போகட்டும் விடுங்க அக்கா! இனிமேல் நடக்க வேண்டியதைப் பாருங்க! செக்கச் சிவந்த தக்காளி மாதிரி ஒரு பெண் இருக்கு ; நம்ம மாலாவுக்கு 'பிரண்டு'. அதைப்போய் பார்த்துவிட்டு வர எங்களை அனுமதியுங்கள்'' என்றான்.

''அந்தப் பெண்ணுக்கு என்ன சொத்து இருக்கு? மாப்பிள்ளைக்கு என்ன கொடுப்பார்கள்?'' என்றார் சிங்காரவேலர்.

''பெண்ணைப்பற்றிக் கேட்கும் பொழுது, 'எதுவரை படித்திருக்கு, அடக்க ஒடுக்கமாக இருக்குமா, பையனுக்குத் தகுந்தாற்போல் பொருத்தமாக இருக்குமா, என்றுதான் எல்லாரும் கேட்பார்கள். ஆனால் நீங்கள் எடுத்த எடுப்பிலேயே 'பெண்ணுக்கு என்ன சொத்து இருக்கு?' என்றுதான் ஆரம்பிக்கின்றீர்கள். இதனால்தான் உங்களைக்கஞ்சன் என்று சொன்னேன். நான் சொன்னது சரியா இல்லையா என்பதை நீங்களே சொல்லுங்கள்'' என்றான் இளஞ்சேரன்.

''டேய்! என்னையே திட்டிவிட்டு என்னிடமே திட்டியது சரியா இல்லையா என்று கேட்கிறாயா?'' என்று கோபமாகக் கேட்டார் அவர்.

''மன்னித்துக் கொள்ளுங்கள் ! நாளை அந்தப் பெண்ணின் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க மாலா போகிறாள். அந்தச் சாக்கில், நாங்களும் அவளுடன் போகலாம் என்று இருக்கிறோம். அதற்கு அனுமதி தேவை'' என்றான்.

''பெண் பார்க்கப் பெரியவங்க தான்டா போகணும்! நீங்க இரண்டுபேரும் டாக்டராகி விட்டதனாலேயே பெரியவங்களாகிவிட முடியாதுடா! நாளைக்கு முகூர்த்த நாள் தான். எல்லாருமே போய் அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு வரலாம்! காலை 10மணிக்குத் தயாராக இருங்கள்!'' என்று கூறிவிட்டு சிங்காரவேலர் போய்விட்டார். அவரைத் தொடர்ந்து மங்கம்மாவும் போய் விட்டாள். எழிலரசு பெருமூச்சு விட்டான்.

''மாப்பிள்ளே! கவலைப்படாதே! நாளைக்கு அந்தப் பெண்ணைப் பார்த்ததும் அப்பா அம்மா ஒப்புக் கொள்வார்கள் பாரேன்!'' என்று கூறிவிட்டு ''மாலா! மாலா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே மாடிப்படிகளில் மெதுவாகக்கீழே இறங்கினான். ''இதோ வருகிறேன் மாமா'' என்று கூறிக் கொண்டே மாலா மாடிப்படிகளில் வேகமாக ஏறி வந்தாள். அவள் அருகில் வந்ததும் மெதுவாக ''நாளை காலை 10 மணிக்கு அந்தப் பெண் வீட்டிற்கு எல்லாருமே போகிறோம்! பெண்பார்க்க வருகிறோம் என்று சொல்லாமல், வேறு காரணம் சொல்லி எல்லாரும் வருகிறோம் என்பதைத் தெரிவித்து விடணும்'' என்றான். அவளும் ''சரி'' என்று சொல்லி விட்டாள்.

இளஞ்சேரனும் மாலாவும் சேர்ந்தே திட்டமிடுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட எழிலரசு ஏதும் புரியாமல் திகைத்துக்கொண்டிருந்தான். மாலாவைக் கேட்பதற்கோ வெட்கம். மறுநாள் எப்பொழுது வருமோ என்று ஏங்கினான்.

மறுநாள் எல்லாரும் மஞ்சுளா வீட்டிற்குக் காரில் போனார்கள். அவர்களைக் கண்டதும் மஞ்சுளா அன்போடு வரவேற்றாள். மஞ்சுளாவின் அப்பா—ஓய்வு பெற்ற ஆசிரியர்-சிங்காரவேலரை நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்தது பற்றி மகிழ்ந்தார்; ஒருவரைப் பற்றி ஒருவர் நலம் விசாரித்துக் கொண்டிருந்தனர். எழிலரசு மஞ்சுளாவையே கவனித்துக் கொண்டிருந்தான். அதுகண்ட மஞ்சுளா வீட்டின் உள்ளே செல்ல முயன்றாள். மாலா தக்காளிப் பழம் பற்றிய பேச்சைத் துவக்கினாள். அவளது ஆர்வத்தைக் கண்ட மஞ்சுளா, ''மாலா முதலில் தக்காளிப் பழத்தோட்டத்தைப் பார்வையிடலாம் வா!'' என்று அழைத்தாள். ''நாங்களும் வரலாமல்லவா?'' என்று கேட்டார் சிங்காரவேலர். ''ஓ! தாராளமாக வாருங்கள்!'' என்று கூறிவிட்டு, வீட்டின் பக்கத்தில் உள்ள தோட்டத்திற்கு எல்லாரையும் அழைத்துச் சென்று, காட்டினாள். அந்தத் தோட்டம் ஒரு சோலைவனம் போல் இருந்ததைக் கண்டதும், ''மஞ்சுளா! இவ்வளவும் உன் வேலை தானா?'' என்று கேட்டாள் மாலா.

''ஆமாம், மாலா! நாங்கள் காய்கறி வாங்குவதற்காக ஒரு பைசா கூடச் செலவு செய்வதே இல்லை. வீட்டுத் தோட்டத்திலேயே எல்லாம் கிடைக்கிறது. இந்தச்சிறிய தோட்டத்தில் ஆண்டு முழுவதும் காய்கறி பயிரிட்டு வீட்டுத் தேவை போக மீதியை விற்று மூன்றே ஆண்டில் கிட்டத்தட்ட ரூபாய் 2,000 சேர்த்து வைத்துள்ளேன்'' என்று கூறினாள் மஞ்சுளா.

''மூன்றே ஆண்டில் 2,000 ரூபாய் மீதப்படுத்தி வைத்திருக்கிறாயா? பரவாயில்லையே!'' என்று பாராட்டினார் சிங்காரவேலர்.

''மஞ்சுளா! தக்காளியில் எத்தனைவகை பயிரிட்டுள்ளாய்? ஒவ்வொரு பாத்தியிலும் ஒவ்வொரு மாதிரி இருக்கிறதே!'' என்றாள் மாலா.

''தக்காளியில் பல வகைகள் உண்டு. உருண்டை வடிவம், சட்டி வடிவம், பம்பர வடிவம் இப்படிப் பல வடிவங்களில் தக்காளிப் பழம் இருக்கும். உருவத்தில் வேற்றுமை இருப்பது போலவே தக்காளியின் நிறத்திலும் வேற்றுமை உண்டு. சிவப்பு, மஞ்சள், மஞ்சள் கலந்த சிவப்பு ஆகிய நிறத்திலும் தக்காளிப் பழ வகைகள் உள்ளன. இந்தத் தோட்டத்தில் 'பாண்டுரோசா', 'மார்குளோப்', 'பெஸ்ட் ஆப் ஆல்'




இந்தியாவில் ஆண்டு தோறும் சுமார் 15 லட்சம் பேர் விமானம் மூலம் பயணம் செய்கிறார்கள்.

நாள்தோறும் 60 லட்சம் பேர் புகை வண்டியில் பயணம் செய்கின்றனர்.

# மிக வலிமையான டயர்

## பயர்ஸ்டோன்

படைத்திடும்
தனிப்பட்ட 23°
கோணமுள்ள
டிராக்ஷன்
பார்களை
உடைய
டிராக்டர்
டயர்கள்.

ஆழமாக இறுகப் பற்றி அதிக இழுதிறனை அளிக்கும்படி ரப்பர் பரப்பை முற்றிலும் பயன்படுத்தும் திறனுள்ள வளைவும் கூம்பு முனையும் அமைந்தவை.
பயர்ஸ்டோன் டயர்கள், கடுமையான நீடித்தகால உழைப்புக்கான வலிமை படைத்திருக்கக் காரணம் மும்மடங்கு வலுவுள்ள கட்டுமானம் — டயருடன் டிரெட்டை ஒட்டிப் பிணைக்கவும், பக்கவாடுகளைப் பலப்படுத்தவும், கார்டுகளை இன்சுலேட் செய்வதற்குமான முறை அது.






40 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவுக்கு சேவை

## பயர்ஸ்டோன்

இந்தியாவெங்கும் வாங்கக் கிடைக்கிறது – இன்றே காணுங்கள் உங்கள் பயர்ஸ்டோன் விற்பனையாளரை.

FOCUS-W 28 (R).TM

'ஆகஸ்கார்ட்', ஆர். இ. டி. சி.1, கோயம்புத்தூர் 1, ஆகிய 6வகைகள் உள்ளன'' என்று கூறினுள் மஞ்சுளா.

''ஏம்மா மஞ்சுளா! நீ தக்காளிப்பழம் சாப்பிட்டுத் தான் அழகாய் ஆகிவிட்டதாக மாலா சொன்னுள்! அது உண்மையா? தக்காளியில் என்ன சத்து இருக்கு?'' என்று கேட்டாள் மங்கம்மாள்.

''நான் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து தினமும் தக்காளி சாப்பிட்டு வருகின்றேன். தக்காளி சாப்பிட ஆரம்பித்த பின்பு தான், எலும்பும் தோலுமாக இருந்த நான் இப்படி ஆகியுள்ளேன். தக்காளியில் வைட்டமின் ஏ, பி, சி ஆகிய சத்துக்களும், புரதச்சத்து, கொழுப்புச் சத்து, இரும்புச் சத்து, சுண்ணும்புச் சத்து, பாஸ்பரஸ் சத்து ஆகியவைகளும் உள்ளன. இச் சத்துக்கள் உடலுக்கு வலிவையும் வனப்பையும் தருகின்றன. அதனுல்தான் மாலாவையும் தொடர்ந்து தக்காளிப்பழம் சாப்பிடுமாறு கூறினேன்'' என்று பதிலளித்தாள் மஞ்சுளா.

அப்பொழுது மாலா ஒரு தக்காளிப் பழத்தைப் பறித்து வந்து '' இதென்ன கோழிமுட்டை மாதிரி இருக்கிறதே! இதுவும் தக்காளி தானு?'' என்று கேட்டாள் !

"இதுவும் தக்காளி தான்மாலா. இதற்கு ஆர். இ. டி. சி. 1 (R.E.T.C-1) என்று பெயர். இது கிருஷ்ணகிரி அணைக்கு அருகில் உள்ள கிராமிய விஸ்தரிப்புப் பயிற்சி நிலையத்தில் கண்டு பிடிக்கப்பட்ட புதிய ரகமாகும். இதைச் செடியோடு பார்க்காதவர்கள் தக்காளி அல்லவென்றே கூறுவார்கள். உருண்டு, நீண்டு முனை கூர்மையாக உள்ள இத் தக்காளிப்பழம் நன்ருக முதிர்ந்த நிலையில் 3 முதல் 4 அங்குல நீளமும், $2\frac{1}{2}$ அங்குலச் சுற்றளவும்உடையதாக இருக்கும். பொதுவாகத் தக்காளிப்பழம் புளிப்பும் இனிப்பும் கலந்ததாக இருக்கும். ஆனல் இப் புதிய தக்காளியில் புளிப்பு மிகவும் குறைந்து, இனிப்பு அதிகமாக இருக்கும்; சதைப்பற்று மிகுந்து விதைகள் குறைவாக இருக்கும். செடிகள் நீண்டு உயரமாக வளரும். இந்த ரகப் பழங்கள் பல நாட்கள் வரை கெடாமலும் இருக்கும். தின்று பாரேன், மிகவும் சுவையாக இருக்கும்'' என்று மஞ்சுளா கூறினள். மாலா அந்தப் பழத்தைத் தின்றுகொண்டே, ''அதுஎன்ன தக்காளி? செக்கச் செவேலென்று நல்ல சிவப்பு நிறமாக இருக்கிறதே'' என்று கூறிக்கொண்டே அருகிலிருந்த ஒருவகைத் தக்காளியை நோக்கிக் காட்டினுள்.

''இதுவும்ஒரு புதுரகத் தக்காளி தான் மாலா! இதற்குக் 'கோயம்புத்தூர்-1' என்று பெயர். இதையே 'கோ-1' தக்காளி என்றும் சுருக்கமாகச் சொல்வார்கள்.



கோ-1 தக்காளி

இப் புதுரகத் தக்காளி அதிக உயரம் வளருவதில்லை. செடிகள் சுமாராகப் படர்ந்து குட்டையாகவே இருப்பதால், 'கோ-1' தக்காளிச் செடிகளை மூங்கில் குச்சிகளுடன் இணைத்துக் கட்ட வேண்டிய அவசியமில்லை. பழங்கள் உருண்டையாக இருப்பதுடன் மிருதுவாக இருக்கும். பழுத்த பழங்கள் செடியிலிருந்து விழுந்து விடாது. இதனுல் பழங்களில் ஏற்படும் சேதம் குறைவு. இந்த ரகத் தக்காளியின் காய்கள் கரும் பச்சையாகவும், பழங்கள் மற்ற ரகத் தக்காளிப் பழங்களை விட நல்ல சிவப்பாக—மிளகாய்ப் பழச் சிவப்பில்—இருக்கிறது பார்த்தாயா? இவ்வகைத் தக்காளி கொத்து கொத்தாய் காய்க்கின்றன. ஒரு கொத்தில் 8 காய்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பழமும் சுமார் 125 கிராம் எடை இருக்கிறது. எட்டுப் பழங்கள் சேர்ந்தால் ஒரு கிலோ ஆகிவிடுகின்றன. ஒவ்வொரு செடியும் 55 பழங்கள் வரை கொடுக்கின்றது. குறைந்தது ஒரு செடியில் இருந்து 3 முதல் 4 கிலோ பழங்கள் வரை கிடைக்கக் கூடும். இவ் வகைத் தக்காளிப் பழத்தில் அமிலச் சத்துக் குறைவாக இருப்பதால் பழங்கள் புளிப்பதில்லை. சதைப் பற்று மிகுந்து உள்ளது; ஆனல்

மற்றவைகளை விடக் குறைவான விதைகளே உள்ளன. ஏறத்தாழ 6 பழங்களிலிருந்தே ஒரு கிராம் விதை கிடைக்கும். பழத்தைத் துளைக்கும் புழுக்களாலும், இலைப் புள்ளி நோயாலும் இந்த ரகத் தக்காளி அதிகம் பாதிக்கப்படாது. மற்ற ரகங்களை விட இந்த ரகம் 35 சத அளவுக்கு அதிக மகசூல் அளிக்கும். ஒரு ஏக்கரில் 'கோ-1' தக்காளி பயிரிட்டால், 15,000 கிலோ கிராம் முதல் 20,000 கிலோ கிராம்வரை மகசூல் கிடைக்கும். இத்தகைய சிறந்த குணங்களைக் கொண்டிருப்பதால், 'கோ-1' தக்காளிப்பழம் சமையலுக்கும், பழரசம், ஜாம், கெட்சப் போன்ற பக்குவப்படுத்தப்பட்ட பதார்த்தங்கள் செய்யவும் ஏற்றது'' என்று மஞ்சுளா விளக்கினாள்.

மஞ்சுளாவிடம் பேச விரும்பிய எழிலரசு கேள்வி கேட்பதுபோல் ''கோ-1 தக்காளியின் வயது என்ன? எவ்வளவு நாளையில் காய்க்கும்?'' என்று கேட்டான்.

''கோ-1 தக்காளியின் வயது 135 நாட்கள் தானுங்க. விதைத்த 51-ம் நாளில் முதல் பூ தோன்றி விடும். விதைத்த 92-ம் நாளில் முதல் அறுவடை செய்யலாம். முதல் அறுவடையிலிருந்து 43 நாட்களில் முழு அறுவடையும் முடிந்து விடும். அறுவடைக் காலம் குறுகியதாக இருப்பதால், பூச்சி, புழுக்களாலும், நோய்களினாலும் ஏற்படும் சேதம் குறைகிறது. கோ-1 தக்காளி குறுகிய வயதுடையதாய் இருப்பதால் நீர்ப் பாசனம் செய்வதற்கும், பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்வதற்கும் ஆகும் செலவு குறைகிறது'' என்று பணிவுடன் விளக்கினாள் மஞ்சுளா.

''சரி எல்லாருமே கேள்வி கேட்கிறார்கள். நானும் ஒரு கேள்வி கேட்கிறேன் தங்கச்சி! கோ-1 தக்காளியை நடுவதற்கு ஏற்ற பட்டம் எது?'' என்று கேட்டுக் கொண்டே எழிலரசனை குறும்பாக நோக்கினான் இளஞ்சேரன். எழிலரசு வெட்கத்துடன் தலைகுனிந்துகொண்டான்.

''கோ-1 தக்காளியை ஆண்டு முழுவதும் பயிரிடலாம் அண்ணே! ஆனால் அதிக மழை பெய்யும் பருவ காலத்தில் பழங்கள் அறுவடைக்கு வராமல் கவனித்து அதற்கேற்ப நடவு செய்ய வேண்டும். ஆடிப் பட்டத்திலும், தைப் பட்டத்திலும் பயிரிட்டால் மிகுந்த மகசூல் கிடைக்கும் அண்ணே!' என்று உரிமையுடன் விளித்துச் கூறினாள் மஞ்சுளா.

''கோ-1 தக்காளியை ஒரு ஏக்கரில் பயிர் செய்ய விரும்புகின்றேன். சாகுபடி முறை எப்படியம்மா?'' என்று கேட்டார் சிங்கார வேலர்.



ஆர். இ. டி. சி. 1 தக்காளி

''கால்வலிக்குதே, உட்கார்ந்து பேசுவோமே'' என்றாள் மங்கம்மாள்.

''வீட்டிற்குச் சென்று உட்கார்ந்துபேசலாமே'' என்றாள் மஞ்சுளா. ''சரி'' என்று அனைவரும் சொல்லவே அவர்களை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தாள் மஞ்சுளா. எல்லாரும் ஆளுக்கு ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டனர். மஞ்சுளா நின்று கொண்டே பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

''ஒரு ஏக்கர் தக்காளி நடவு செய்ய 120 கிராம் விதைகளை ஒரு சென்ட் நிலத்தில் (54 அடி × 8 அடி) மேடைப் பாத்திகளை அமைத்து நாற்று விடவேண்டும்'' என்று மஞ்சுளா கூறிக்கொண்டிருக்கும் போது, ''நீயும் உட்கார்ந்து சொல்லம்மா'' என்றார் சிங்காரவேலர்.

''பரவாயில்லைங்க'' என்று கூறிவிட்டு மஞ்சுளா மேலே தொடர்ந்தாள்.

''தக்காளி நட வேண்டிய நிலத்தை இரும்புக் கலப்பையால் நன்கு உழவேண்டும். கடைசி உழவின் போது ஏக்கருக்கு 20 வண்டி மக்கின தொழு எருவும், 100 கிலோகிராம் அமோனியம் சல்பேட்டும், 90 கிலோகிராம் சூப்பர் பாஸ்பேட்டும், 45 கிலோகிராம் பொட்டாசியம் சல்பேட்டும் இட்டு மண்ணுடன் கலக்குமாறு உழுதுவிட வேண்டும். அதன் பின் 75 சென்டிமீட்டர் அதாவது $2\frac{1}{2}$ அடி தூரத்திற்கு ஒரு பார் வீதம் அமைக்க வேண்டும்.

''நாற்று விட்டு மூன்று வாரங்கள் ஆகிய பிறகு, நாற்றுக்களைப் பறித்து பார்களின் பக்கவாட்டில் செடிக்குச் செடி 60 சென்டிமீட்டர் (2 அடி) இடைவெளி விட்டு நடவு செய்யவும். அதாவது பாருக்குப் பார் 75 சென்டிமீட்டர் இடைவெளியும், பாரில் செடிக்குச் செடி 60 சென்டிமீட்டர் இடைவெளியும் இருக்கும்படி நடவு செய்ய வேண்டும்.

''நடவு செய்த ஒரு மாதத்திற்குப் பிறகு 50 கிலோகிராம் அமோனியம் சல்பேட் உரத்தை பார்களின் பக்கவாட்டில் செடிகளின் மீது படாதவாறு இட்டு, செடிகளுக்கு மண் அணைத்து நீர் பாய்ச்சவேண்டும். அவ்வப்போது தோன்றும் களைகளை அகற்றிவிட வேண்டும். தேவையான அளவுக்கு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

''தக்காளியைப் பூச்சி புழுக்கள் தாக்காதிருக்க நடவு செய்த 15

நாட்களுக்கு ஒரு முறை 250 மில்லி லிட்டர் என்டரின் மருந்தை 360 லிட்டர் (80 காலன்) தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இந்த மருந்துடன் ½ கிலோ டைத்தேன் மருந்தையும் கலந்து தெளித்தால் இலைப் புள்ளி நோயையும் வாடல் நோயையும் கட்டுப்படுத்தலாம்'' என்று கூறிப் பேச்சை நிறுத்தினாள் மஞ்சுளா.

''ஒரு ஏக்கர் தக்காளியிலிருந்து எவ்வளவு பணம் கிடைக்கும்? அதையும் சொல்லிவிடு மஞ்சுளா'' என்றார் சிங்காரவேலர்.

''தங்கச்சி! மாமாவைப்பற்றி உனக்குத் தெரியாது! எப்பவும் எதைச் செய்தாலும் என்ன வருமானம் கிடைக்கும் என்பதிலே தான் மாமா மிகவும் குறியாக இருப்பார்! அதனால் இந்தக் கேள்விக்குச் சற்று விளக்கமாகப் பதில் சொல்லு தங்கச்சி! இந்த கேள்வி மிகமிக முக்கியம்!'' என்று கிண்டலாகச் சொன்னான் இளஞ்சேரன்.

''டேய்! சும்மாஇருக்கமாட்டே என்று கண்டித்தார் சிங்காரவேலர்.

''மாமா பணத்தில் குறியாக இருப்பதில் தவறில்லை அண்ணே! 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு!' என்று அந்தக் காலத்திலேயே சொல்லி உள்ளார்கள். பணத்தின் அருமை கஷ்டப்பட்டு சம்பாதிப்பவர்களுக்குத் தான் தெரியும்! அதனால் மாமா கேட்டது மிகவும் சரி என்று தான் நான் நினைக்கின்றேன் அண்ணே!' என்று கள்ளங் கபடமின்றிச் சொல்லிவிட்டாள் மஞ்சுளா.

''அப்படிச் சொல்லு மஞ்சுளா! டேய்! இளஞ்சேரா! நல்லா கவனிச்சியா மஞ்சுளா சொன்னதை! மஞ்சுளாவுக்குப் பணத்தின் அருமை தெரிந்திருக்கிற அளவுக்குக் கூட உனக்கும் எழிலரசுக்கும் தெரியவில்லை. டாக்டராகி என்ன பயன்? எப்படித்தான் பிழைக்கப் போகிறீர்களோ! '' என்றார் சிங்காரவேலர்.

''சக்சஸ்'' என்று வாய் தவறிச் சொல்லிவிட்டு இளஞ்சேரன் மாலாவையும், எழிலரசையும் பார்த்தான்.

''என்னடா சக்சஸ்'' என்று கேட்டார் சிங்காரவேலர்.

''ஒன்றுமில்லை மாமா!'' மஞ்சுளா உங்களை 'சப்போர்ட்' செய்து பேசிவிட்டதனாலே, உங்களுக்கு 'சக்சஸ்' என்று சொன்னேன். வேறு ஒன்றுமில்லை!'' என்று கூறி சமாளித்து விட்டு, மஞ்சுளாவை நோக்கி ''தங்கச்சி! மாமா யாரையும் புகழ்ந்து பேசி இதுவரை நான் கேட்டதே இல்லை. ஒரு அரை மணி நேரப் பழக்கத்திலேயே, மாமா உன்னைப்புகழ்ந்துவிட்டார். உனக்கு நல்ல நேரம் பிறந்து விட்டதென்று நினைக்கின்றேன். அதனால் அவருக்கு, தக்காளி பயிரிட்டால் என்ன இலாபம் கிடைக்கும் என்பதைத் தெளிவாகக் கூறிவிடு!'' என்று கிண்டலாகச் சிரித்துக்கொண்டே கூறினான் இளஞ்சேரன்.

''அவன் எப்பவும் அப்படித் தான் ஏதாவது கிண்டல் செய்து கொண்டே இருப்பான். கூச்சப் படாமே நீ விவரமாகச் சொல்லு மஞ்சுளா'' என்றார் சிங்காரவேலர்.

''ஒரு ஏக்கரில் கோ-1 தக்காளி சாகுபடி செய்ய ரூபாய் 1,500 ஆகும். ஒரு ஏக்கரிலிருந்து சராசரியாக 16,000கிலோகிராம் தக்காளிப் பழம் கிடைக்கும். அதை கிலோ கிராம் 25 பைசா வீதம் விற்றால் ஏக்கருக்கு ரூபாய் 4,000 கிடைக்கும். எனவே செலவு போக ஏக்கருக்கு ரூபாய் 2,500 நிகர லாபம் கிடைக்கும்'' என்றாள் மஞ்சுளா.

''எந்த ஊரிலம்மா தக்காளிப் பழம் கிலோ 25 பைசாவுக்குக் கிடைக்குது? கிலோ 60 பைசாவுக்குக் குறைந்து நான் இதுவரை வாங்கியதில்லையே!'' என்று கேட்டார் சிங்காரவேலர்.

''அதில்லை மாமா! தக்காளிப் பழ விலை ஏறலாம், இறங்கலாம்! நான் சராசரியாகக் கிலோ 25 பைசா என்று கூறினேன். விலை அதிகமாக விற்கும் பொழுது இலாபமும் அதிகமாகும்'' என்றாள் மஞ்சுளா.

'' அப்போ, கிலோ 50 பைசா என்று விற்றால், ஒரு ஏக்கரில் 4 மாதத்தில் தக்காளி மூலம் 6,500 ரூபாய் நிகர இலாபம் எடுக்கலாம் ! இந்த ஆடிப்பட்டத்திலே ஒரு ஏக்கரில் கோ. 1 தக்காளி பயிரிட்டுப் பார்த்து விடுகின்றேன் !'' என்று மெதுவாகத் தன் மனைவி மங்கம்மாவிடம் சிங்காரவேலர் கூறினார்.

அதைக் கூர்ந்து கவனித்துக் கேட்டுவிட்டு இளஞ்சேரன் திடீரென ''அக்ரமம்! அநியாயம்! பணக்காரர் மேலும் பணம் சேர்ப்பதற்கு வழி சொல்லித் தருகிறாயா மஞ்சுளா! இது நியாயமா ? ''என்று இறைந்தான்.

அவ்வாறு இளஞ்சேரன் கூறியதைக் கேட்டவுடன் மங்கம்மாள், மாலா, எழிலரசன், மஞ்சுளா ஆகிய அனைவரும் சிரித்து விட்டனர். அதைக் கண்ட சிங்காரவேலரும் சிரித்து விட்டார். ஆனால் இளஞ்சேரன் மட்டும் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டிருந்தான்.

சிரிப்பு ஒலி அடங்கச் சற்று நேரம் பிடித்தது. அதன் பின் இளஞ்சேரன் ''மஞ்சுளா ! இப்ப மாமா இலட்சாதிபதியாகத் தான் இருக்கிறார். நீயே அவருக்கு மருமகளாக வாய்த்து விட்டால், ஓரிரண்டு வருடத்திலேயே கோடீசுவரராகி விடுவார்! இன்னும் என்னென்ன பயிரிட்டு இலாபம் சேர்க்கலாம் என்பதையும் ஒரேயடியாகச் சொல்லிவிடு!'' என்றான்.

உடனே சிங்காரவேலர் குறுக்கிட்டு, ''செக்கச் சிவந்த தக்காளிப்பழம் மாதிரி இருக்கு, மஞ்சுளா! எனக்கு மருமகளாக வர மஞ்சுளாவுக்குத் தகுதியில்லையா என்ன?'' என்று கேட்டார்.

மஞ்சுளா வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள். எழிலரசின் முகத்தில் மகிழ்ச்சி பிறந்தது.

''ஏதேது? மஞ்சுளாவை மருமகளாகவே ஆக்கிக் கொள்வீர்கள் போலிருக்கிறதே! அதற்கு எழிலரசு ஒப்புக் கொள்ள வேண்டாமா?'' என்று கூறி இளஞ்சேரன் சிங்காரவேலரைத் தூண்டி விட்டான்.

எழிலரசு முகத்தில் மகிழ்ச்சிக் களை தோன்றியதைக் கண்ட சிங்காரவேலர், ''இளஞ்சேரா! உனக்கு அந்தச் சந்தேகம் வேண்டாம்! மஞ்சுளாவையே மருமகளாக ஆக்கி விடுவதென்று முடிவு செய்துவிட்டேன்! எழிலரசு என்னடா ஒப்புக்கொள்வது? கட்டுடா கழுத்தில் தாலியை என்றால்,

கட்ட வேண்டியதுதான் அவன் வேலே!'' என்ருர் சிங்கார வேலர்.

''மாமா! உங்களுக்கு மயக்கம் ஒன்றுமில்லேயே'' என்ருன் இளஞ்சேரன்.

''இல்லே! ஏண்டா அப்படிக் கேட்கிருய்?'' என்று கேட்டார் சிங்காரவேலர்.

''மஞ்சுளா ஏழைப் பெண்ணு! அது சம்பாதித்துத்தான் இந்தக் குடும்பமே நடக்குது. அதனுலே சீதனம் ஏதும் கிடைக்காது. நல்லா யோசித்துச் சொல்லுங்க'' என்ருன் இளஞ்சேரன்.

''ஏண்டா! என்னேப் பணப் பேய் என்ரு நினேத்துக் கொண்டாய்? சீதனமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்! மஞ்சுளா முகத்தில் லட்சுமி கடாட்சம் ஒளி விடுதடா. மஞ்சுளா நம்ம வீட்டு மருமகளாக வந்தால், லட்சுமியே நம் வீட்டிற்கு வந்த மாதிரி தான்! மஞ்சுளாவை மருமகளாகப் பெற நாமெல்லாம் கொடுத்து வைத்திருக்க வேண்டுமடா!'' என்று கூறிவிட்டு, மஞ்சுளாவைப் பார்த்து, ''மஞ்சுளா! உனக்குச் சம்மதம் தானே!'' என்று கேட்டார் சிங்காரவேலர்.

இந்தக் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்ல வெட்கப்பட்ட மஞ்சுளா ஏதும் கூருமல் வீட்டின் உள்ளே ஓடிவிட்டாள். நடந்தவைகளே எல்லாம் கேட்டுக் கொண்டு வீட்டின் உள்ளே படுத்திருந்த மஞ்சுளாவின் அப்பா அமிர்தலிங்கம் படுக்கையைவிட்டு எழுந்து வந்து ''நான் ஒருத்தன் இருக்கின்றேன் என்பதை மறந்து விட்டீர்களா?'' என்று கேட்டுக் கொண்டே தள்ளாடித் தள்ளாடி வந்தார்.

''உங்களே மறந்து விடவில்லே! நான் பார்த்துக் கொண்டு முறைப்படி வந்து உங்களேக் கேட்கிரேம்'' என்ருர் சிங்காரவேலர்.

''ஐயா! நீங்க பெரிய இடம்! நாங்கள் மிகவும் ஏழை! அந்தப் பெண்ணு சம்பாதனேயில் தான் நானும் என் மகனும் சாப்பிட்டு வருகிரேம். என் மகனுக்கு ஒரு வேலே கிடைத்தபின்பு திருமணத்தை வைத்துக் கொண்டால் நல்லது'' என்ருர் அமிர்தலிங்கம்.



''இனிமேல் எதைப்பற்றியும் நீங்கள் கவலேப்பட வேண்டாம்! நிம்மதியாக இருங்கள்! நான் பார்த்துக் கொள்கிறேன்! அப்போ நாங்க புறப்படுகிரேம்'' என்று கூறி, சிங்காரவேலர் எழுந்தார்.

''இதைச் சாப்பிட்டுவிட்டுச் செல்லுங்கள்!'' என்று கூறிக் கொண்டே 6 குவளேயில் தக்காளிப் பழரசத்தை ஊற்றி ஒரு தட்டில் எடுத்துக் கொண்டு வந்து மேசைமேல் வைத்துவிட்டு வீட்டினுள் ஓடி விட்டாள் மஞ்சுளா.

பழரசம் பருகிய பின்பு, ''நாங்கள் வரட்டுங்களா ?'' என்று கூறிக்கொண்டே புறப்பட்டார் சிங்காரவேலர்.

''சரிங்க'' என்று கூறி இரு கை குவித்து வணங்கினுர் அமிர்தலிங்கம்.

''மாலா! உங்க அப்பா ஒரு ஏக்கரில் கோ-1 தக்காளி சாகுபடி செய்யப் போகிருர். அந்தப் பழத்தையெல்லாம் பழரசமாக ஆக்கி அடிக்கடி குடித்துக் கொண்டிருக்கணும்! அப்பத் தான் நீயும் சீக்கிரமாகச் செக்கச் சிவந்த தக்காளி மாதிரி தளதள வென்று! ஆகமுடியும். அப்படி நீ ஆகாவிட்டால் உன்னேத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் தெரியுமா?'' என்று கிண்டல் செய்தான் இளஞ்சேரன்.

இளஞ்சேரன் கிண்டலே எல்லாரும் ரசித்துச் சிரித்தனர். மாலா வீட்டினுள் சென்று மஞ்சுளாவின் அருகில் நின்று ''செக்கச் சிவந்த தக்காளி மஞ்சுளாவே! வருங்கால அண்ணியே! வரட்டுமா ?'' என்ருள். மஞ்சுளா வெட்கத்துடன் ''சரி'' என்று மெதுவாகக் கூறினுள்.

எல்லாரும் புறப்பட்டு வெளியே வந்து காரின் அருகில் சென்றனர். எழிலரசு, சிங்காரவேலருக்குத் தெரியாமல் இளஞ்சேரனின் கையைப் பிடித்துக் குலுக்கி ''நன்றி'' என்று மெதுவாகக் கூறினுன். ''நன்றியை மாலாவுக்கு சொல்லு மாப்பிள்ளே!'' என்ருன் இளஞ்சேரன். ''நன்றியை எனக்குச் சொல்லுங்கடா!'' என்று கிண்டல் செய்தார் சிங்காரவேலர். ''மிக்க நன்றி மாமா'' என்று உடனே இளஞ்சேரன் கூறிவிட்டு, ''காரில் சீக்கிரம் ஏறுங்க! எனக்குப் பசிக்குது! மாமா மகிழ்ச்சியாக இருக்கிருர்! ஹோட்டலுக்குப் போய் மாமா செலவில் இனிப்புச் சாப்பிடணும்!'' என்று அவசரப்படுத்தினுன். ''உன் விருப்பப்படி செய்'' என்ருர் சிங்காரவேலர். எல்லாரும் காரில் ஏறிய உடன், இளஞ்சேரன் காரை ஓட்டிக் கொண்டு அவனுக்கு விருப்பமான ஹோட்டலே நோக்கிச் சென்ருன். எழிலரசு இன்பக் கனவில் மூழ்கி இருந்தான்.

அவர்கள் சென்ற பிறகு ''அப்பாடா!'' என்று பெருமூச்சுவிட்டு விட்டு மஞ்சுளாவைத் தேடித் தோட்டத்திற்கு வந்தார் அமிர்தலிங்கம். மஞ்சுளா எதுவுமே நடைபெருதது போல் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தாள்.

ஆமாம்! செக்கச் சிவந்த தக்காளிக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள். அதைக்கண்ட அமிர்தலிங்கத்தின் கண்களிலே மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது!



# மாணவர் அரங்கம்

"கூட்டு—உறவு என்ற இரண்டு சொற்களடங்கியதே கூட்டுறவு. கூட்டு மட்டும் என்றால் இலாபம் மட்டும் என்றுதான் பொருள். உறவு அதோடு சேர்ந்தால்தான் தோழமையின் உண்மையான இலாபமற்ற நோக்கம் என்றார் பேரறிஞர் அண்ணா" என்று தொடங்கி,

"தனி மனிதன் துயர் துடைக்க, தனி மனிதன் தவிப் படக்க, தனி மனிதன் தளர்வு நீக்க எழுந்த ஒப்பற்ற இயக்கம் கூட்டுறவு. அதேபோல் தனி மனிதன், தான் மட்டும் எல்லா வசதிகளும் பெற்று வாழ்வதைத் தடுத்து, மற்றவர்களும் வாழ வழி வகுப்பதே கூட்டுறவு" என்று கூறித் தொடர்ந்து, "நான் கண்ட கூட்டுறவு—வாடுகின்ற முகத்தோடு, பாடுகின்ற பாட்டாளி, கூடுகின்ற உணர்வோடு, நாடுகின்ற இன்பத்தைச் சாடுகின்ற இயல்பின்றித் தேடுகின்ற கூட்டுறவு; நான் கண்ட கூட்டுறவு சோர்வு நீங்கிட, சோபிதம் நிறைந்திட, உழைப்போர் பெருகிட, உண்டு களிப்போர் அருகிட, தீயவர் ஒழிந்திட, தீமைகள் அழிந்திட, வாழ்வு வளர்ந்திட, தாழ்வு தளர்ந்திட வகை செய்யும் கூட்டுறவு

பாட்டுக்குப் பாரதியார்!
காட்டுக்குக் கவின் சிங்கம்!
ஏட்டுக்கு இளங்கோ!
நாட்டுக்குக் கூட்டுறவு!"

என்று கூறி முடித்தார் திரு சுரேஷ் என்ற மாணவர்.

'விளையும் பயிர் முளையிலே' என்பது பழமொழி. முளையிலேயே நன்கு வலுவாக வளர்ந்தால்தான் விளைவு நன்றாக இருக்கும் என்பார்கள்.

இன்றைய மாணவர்களே இந்நாட்டின் நாளைய நாயகர்களாகவும், நாடுகாக்கும் வல்லவர்களாகவும், நல்ல குடிமக்களாகவும் (Good citizen) மலரப் போகிறார்கள். எதிர்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டிய இன்றைய மாணவர்கள், கூட்டுறவின் இன்றியமையாமை, நோக்கம், நன்மைகள் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நன்னோக்குடன் தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம், உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கெனக் 'கூட்டுறவு பற்றிய பேச்சுப் போட்டி' ஒன்றை நடத்தியது. தமிழ் நாட்டிலுள்ள 45 கல்வி மாவட்டங்களிலும் இப்பேச்சுப் போட்டியை நடத்தி, முதல் இரண்டு நிலையில் வெற்றி பெற்றவர்களைத் தேர்ந்தெடுத்தனர்;

கூட்டுறவு அமைச்சரிடமிருந்து முதற்பரிசு பெறும் திரு சுரேஷ்



அவர்கள் இறுதிப் போட்டிக்கு அனுப்பப்பட்டனர். 1971-ஆம் வருடம் ஜூன் மாதம் 1-ஆம் தேதியன்று இறுதிப் பேச்சுப் போட்டி சென்னையில் நடை பெற்றது.

அந்தப் பேச்சுப் போட்டியில் தான் மேற்கண்டவாறு பேசினர் திரு சுரேஷ். அப்போட்டியில் அவருக்கே முதற் பரிசும் கிடைத்தது.

மூன்றும் பரிசு :

திரு அப்துல்ரசாக்,
நகராட்சி உயர்நிலைப் பள்ளி,
விழுப்புரம்.

பரிசு அளிப்பு விழா தொழி லாளர் நல அமைச்சர் திரு என்.வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்குக்



கூட்டுறவு அமைச்சரிடமிருந்து இரண்டாம் பரிசு பெறும் செல்வி சுமதி

**பரிசு பெற்றவர்களின் விவரம்**

முதற் பரிசு :

திரு சுரேஷ்,
பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி,
காஞ்சீபுரம்.

இரண்டாம் பரிசு :

செல்வி சுமதி,
சாரதா வித்யாலயப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி,
சேலம்.

கூட்டுறவு அமைச்சர் திரு சி.பா. ஆதித்தனர் அவர்கள் பரிசுகளை வழங்கினர்.

முதற்பரிசு பெற்றவருக்கு மின்சார விசிறியும், 2-ஆம் பரிசு பெற்றவருக்கு எவர்சில்வர் குடமும், 3-ஆம் பரிசு பெற்ற வருக்கு மேசைக் கெடிகாரமும் பரிசாக அளிக்கப்பட்டன.

கூட்டுறவில் மாணவர்கள் காட்டும் ஆர்வம் கண்டு அமைச்சர்கள் மகிழ்ச்சி தெரிவித் தனர்.

## ஒரே ஆண்டில் 8 இலட்சம் டன் அரிசி அதிகமாக விளைவிக்கப்பட்டுள்ளது!

தமிழ்நாடு அரசின் தளராத முயற்சியும், தமிழ் நாட்டு உழவர் பெரு மக்களின் ஓயாத உழைப் பும் காரணமாக ஒரே ஆண்டில் 8 இலட்சம் டன் உணவு தானியங்களை அதிக மாக விளைவிக்க முடிந் துள்ளது. இது தமிழ் நாட்டின் வரலாற்றிலேயே, ஏன் இந்திய வரலாற்றி லேயே இதுவரை ஏற் படாத மாபெரும் சாதனை யாகும்.

1969-70-ஆம் ஆண்டில் 45 இலட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. அது 1970-71-ஆம் ஆண்டில் 53 இலட்சம் டன்னுக உயர்ந்து இருக்கிறது. அதாவது ஒரே ஆண்டில் 8 இலட்சம் டன் அரிசியைக் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம், தமிழ் நாட்டில் சென்ற ஆண்டு நெல் சாகுபடி செய்யப் பட்ட 66 இலட்சம் ஏக்கரில் 45 இலட்சம் ஏக்கரில் ஐ. ஆர். 8 முதலிய உயர் விளைச் சல் ரகங்களைப் பயிரிட்டதே யாகும். இந்த ஆண்டில் மேலும் 5 இலட்சம் ஏக்கரில் அதாவது மொத்தம் 50 இலட்சம் ஏக்கரில் உயர் விளைச்சல் ரகங்களைப் பயி ரிடத் தமிழ்நாடுஅரசு முடிவு செய்துள்ளது. எனவே தமிழ் நாடு அரசின் நல் முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண் டியது நம் கடமையல்லவா?

# தமிழ் தந்த பரிசு

"தமிழ் நாட்டின் ஆட்சி மொழியாக அரியணையேறியுள்ள தமிழ் மொழியில் குறிப்புகளும் வரைவுகளும் எழுதமுடியுமா?" என்று ஐயப்படுகிறவர்கள் பலர். ஆனுல் தமிழ் மொழியில் நல்ல குறிப்புகளும், வரைவுகளும் எழுத முடியும் என்பதற்கோர் எடுத்துக் காட்டாய் விளங்குகிருர் திரு நா. இராமலிங்கம் என்ற இளைஞர்.

தமிழ்நாடு வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணியாற்றும் திரு நா. இராமலிங்கம் அவர்கள் தமிழில் நல்ல குறிப்புகளும், வரைவுகளும் எழுதி, 1970-ஆம் ஆண்டிற்குரிய பரிசுத் தொகை ரூபாய் 500 பெற்றுள்ளார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் திறமையாகத் தமிழில் குறிப்புகளும், வரைவுகளும் எழுதுகிறவர்களில் முதன்மையான நிலையில் உள்ளவருக்கு ரூ. 500 பரிசு கொடுக்கப்படுகிறது. சென்னை மாநகரத்தில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தோடு, பல்வேறு துறை அலுவலகங்களும் இருப்பதால் சென்னை மாவட்டத்திற்கு மட்டும் இரண்டு பரிசுகள் அளிக்கப்படுகின்றன.

தமிழில் நல்ல குறிப்புகளும், வரைவுகளும் எழுத வேண்டும் என்ற ஆர்வத்தை, எல்லா அரசு பணியாளர்களிடமும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே, இப்பரிசுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சென்ற ஆண்டு பரிசுத் திட்டத்தின்கீழ் சென்னை மாவட்டத்தில் பரிசு பெற்றவர்கள் இருவரில் ஒருவரான திரு நா. இராமலிங்கம் அவர்கள் தமிழ் வேண்டும் என்ற தணியாத ஆர்வமும் உள்ளவர், அவர். 'தமிழரசு' இதழுக்கு அளித்த பேட்டி இதோ:

"உங்களுடைய சொந்த ஊர் எது?"

"வட ஆர்க்காடு மாவட்டம், ஆரணி வட்டத்தில் உள்ள தேவிகாபுரம்".

"எதுவரை படித்துள்ளீர்கள்? எங்கே படித்தீர்கள்?"



"பள்ளி இறுதிவகுப்பு வரை படித்துள்ளேன். போளூர் கழக உயர்நிலைப் பள்ளியில் படித்தேன்".

"எத்தனை ஆண்டுகளாக அரசாங்க வேலையில் உள்ளீர்கள்? எந்தெந்தத் துறையில் பணியாற்றி உள்ளீர்கள்?"

"1962-ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க வேலையில் உள்ளேன். வேளாண்மைத் துறையிலேயே தொடர்ந்து பணியாற்றி வருகிறேன்".

"தமிழிலேயே குறிப்புகளும் வரைவுகளும் எழுத வேண்டும் என்ற ஆர்வம் எப்படி ஏற்பட்டது?"

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் பொழுதே தமிழில் ஆர்வம் உண்டு. ஆங்கில வார்த்தைகளை கலக்காமல் தமிழில் சரளமாகப் பேசும் தலைவர்களின் பேச்சுக்களைக் கேட்கும் பொழுதெல்லாம், அதுபோல் தமிழிலேயே நன்கு பேச வேண்டும், எழுத வேண்டும் என்று விரும்பினேன். தமிழ் ஆட்சி மொழியாக அரியணையேறிய பிறகே, தமிழில் பேசவும், எழுதவும் எனக்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்தன. எல்லாவற்றையும் ஏன் தமிழிலேயே எழுதி வைக்கக் கூடாது என்று என்னையே நான் கேட்டுக் கொண்டேன். அந்தக் கேள்வியில் பிறந்த முயற்சிதான், மிகவும் கடினமானவைகளையும் எளிய தமிழில் எழுத ஆர்வம் ஊட்டியது. ஆங்கிலத்தில் கடிதம் வந்தாலும், தமிழில் பதில் எழுதி வந்தேன். இதனுல் எதிர்தரப்புக் கடிதங்களும் நாளடைவில் தமிழிலேயே வந்தன. இந்நிகழ்ச்சி என் ஆர்வம் என்னும் செடி வளர உதவும் நல்லுரமாகியது.

"தமிழிலேயே குறிப்புகளும் வரைவுகளும் எழுதி வைப்பது நடைமுறைக்கு எளிது என்று நினைக்கின்றீர்களா?"

"முதலில் சற்றுக் கடினமாகத்தான் இருந்தது. இப்பொழுதெல்லாம் வெகு எளிதிலும் விரைவாகவும் தமிழிலேயே எழுத முடிகிறது. மிகவும் கடினமான நுண்கலைச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச்

சொற்களைப் போட்டு எழுத முடிகிறது. முயற்சி இருக்குமானுல், தமிழிலேயே குறிப்புகளும், வரைவுகளும் எழுதுவது என்பது வெகு சுலபமான செயலாகும் ''.

'' நீங்கள் தமிழில் எழுதுவதற்கு உங்கள் துறை அலுவலர்கள் ஊக்கமளித்தார்களா ? ''

'' வேளாண்மைத்துறை அலுவலர்கள் அளித்த ஊக்கத்தின் காரணமாகவே, எனக்கு மேலும், மேலும் தமிழில் எழுதும் ஆர்வம் ஏற்பட்டது. என் ஆர்வத்தை மேலும் தூண்டிவிட எண்ணிய எங்கள் துறை அலுவலர்கள், பரிசு அளிக்கும் திட்டத்தில் பங்கு பெறுவதற்காக நான் எழுதிய கட்டுக்கோப்புகளையும் அனுப்பி வைத்தனர். நான் பரிசு பெற்ற பின்பு, வேளாண்மைத்துறை இயக்குநர் திரு நா. ஹரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ். அவர்கள் '' உன்ஞல் பெருமை பெற்ருேம் '' என்ற பொருள்பட '' We are proud of you'' என்று கூறிப் பாராட்டினுர்.

'' பரிசு கிடைக்கும் என்று எதிர்பார்த்தீர்களா ? ''

'' பரிசு கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை ''

'' ஏன் ? ''

'' என்னைவிடத் திறமைசாலிகள் இருப்பார்கள். அதஞல் எனக்குப் பரிசு கிடைப்பது எளிதல்ல என்று எண்ணிக்கொண்டிருந்தேன் ''

'' பரிசு பெற்றதும் என்ன நினைத்தீர்கள் ? ''

'' மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். மேலும் நல்ல முறையில் திறமையாகவும், எளிமையாகவும் தமிழிலேயே குறிப்புகளும், வரைவுகளும் எழுத வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன். தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுக்காக எனக்குக் கிடைத்த பரிசாகவே அதைக் கருதினேன். நான் பெற்ற பரிசைக் தமிழ் தந்த பரிசாகவே எண்ணி உள மகிழ்ந்தேன் ''.




தமிழகம் அன்று தொட்டு இன்றுவரை வேளாண்மையில் சிறந்து விளங்கும் நாடு ; உழவர்க்கும் உழவுத் தொழிலுக்கும் உயர்ந்த இடத்தைத் தந்து விளங்கும் நாடு. பலவகைப் பொருளையும் பற்றி ஆய்ந்து கூறும்வள்ளுவஞர் உழவுத் தொழிலைத் தவிர வேறு எத் தொழிலையும் பற்றித் தமது நூலிலே கூறவில்லை. முற்றுந்துறந்த முனிவர் தவமும், முடிசூடிய மன்னவன் ஆட்சியும் உழவர் இல்லையேல் இல்லையென அவர் சொல்லும் அழகு மிகவும் இனியது.

வள்ளுவர் பயிர்த் தொழிலுக்கு இன்றியமையா வித்தைப் பற்றிப் பேசுகிருர்

'' வந்த விருந்தினர்க்கு அகமும் முகமும் மலர்ந்து வழங்கிப் பின்னர் உண்ணும் இல்லறத்தான் தன் நிலத்தில் பயிர் செய்ய வித்திடலும் வேண்டியதில்லை ; விருந்தினரைப் பேணிய அறப்பயன் அங்கு விளைவைத் தரும் '' என்பது அவர் கருத்து ; விருந்தின் பயனே வித்தாய் விளைவிக்கும்.

> '' வித்தும் இடல் வேண்டும் கொல்லோ ; விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்.''

என்பது அவர் வாக்கு.

நல்லொழுக்கம் நலங்களெல்லாம் நாம் அடைய விதையாக இருக்குமென்பதை '' நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் '' என வரும் குறட்பாவால் கூறி வாழ்க்கைப் பயிர் நன்கு பலன்தர நல்லொழுக்க வித்தை ஊன்றக் கூறுகிருர் ;

இங்ஙனம் உழவுக்கு ஒப்பற்றதோர் இடமளித்து அத் தொழிலுக்கு வித்தாகக் கூறும் வித்தின் பல வகைகளை நமது தமிழிலக்கியமொன்றில் காணும்போது நமக்கு மகிழ்ச்சியும் வியப்பும் ஏற்படுமல்லவா ? அந்த வித்துக்கள் தாம் எத்தனை எத்தனை விதம் !

### வித்து வகைகள்

பிணல்வாரி, பூம்பாளை, திருமங்கை ஆழ்வான், மச்சுமுறித்தான், சொரிகுரும்பை, முத்துச்சம்பா, ஆனைக் கொம்பன், பெருவெள்ளைச்சம்பா, குலைவாழை, மறுவில்லிச் சம்பா, வில்லூன்றிச்சம்பா, கடுக்கன்சம்பா, இராசுவானான்.

சித்திரக்காலி, வாலான் நெல், சிறை மீட்டான், மணல் வாரி, செஞ்சம்பா, கருஞ்சூரை, சீரகச் சம்பா, முத்துச் சம்பா, விளங்கி நெல், மலைமுண்டன், பொற்பாளை, நெடுமூக்கன், அரிக்கிராவி, மூங்கிற்சம்பா, கத்தூரிச்சம்பா, வாணன் நெல், காடைக்கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை, புத்தநெல், கருங்குறுவை, புனுகுச் சம்பா.

போதுமா ? இவற்றைஎல்லாம் பூமியில் விதைப்போம் ; பசுமைப் புரட்சி காண்போம் ; பஞ்சம் ஒழிப்போம் ; பசியும், பிணியும் பகையும் நீக்கி, வசியும், வளனும் சுரக்கும் நிலமாகத் தமிழகத்தைக் காண்போம்.


குறளகம்
சென்னை.1
உங்களுக்கு வேண்டிய
எல்லாமே
இங்கே கிடைக்கும்
20461
20462
20463
20464. 20465
கதர்-
கைத்தொழில்
அங்காடி
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்



# ஏழையின் வீட்டுத் திருமணத்தைப் போல்

பொன்னி—ஏழைக் குடும்பத்தில் பிறந்த எழிலரசி! கண்டவர் நெஞ்சமெல்லாம் இனிக்கும் கட்டழகி! அழகுப் பெட்டகம்!

அவளுக்கென்று ஒரு மனம் இருக்கத்தானே செய்யும்! அது போலவே அவளது மனத்தைப் பறித்தவன் ஒருவன் இருப்பதில் வியப்பில்லை. இந்த நிலையைப் புரிந்து கொண்டார் பொன்னம்பலம்—பொன்னியின் தந்தை! காலத்தைக் கடத்தாமல் கடிமணத்தை முடிக்க எண்ணினார்! முயற்சியினை மேற்கொண்டார்.

தனது திருமணத்திற்குப் பிறகு தனது இல்லத்தில் நடைபெறும் பெருவிழா........ பொன்னியின் திருமணம். உற்றார், உறவினர், ஊரில் உள்ள அத்தனை நண்பர்களையும் அழைக்க வேண்டும். பொன்னியின் திருமணம் எண்ணி எண்ணி மகிழும் வகையில் இருக்கவேண்டும். ஏழை பொன்னம்பலத்தின் மனத்தில் எத்தனை எத்தனையோ எண்ணக் கோட்டைகள் தோன்றின!

அந்த நாளும் வந்தது. மணமகள் பொன்னிக்கு மங்கல நாண் அணிவித்தான் அவள் காதலன். விழா முடிந்தது—விருந்து படைக்கப்பட்டது. ஏழை வீட்டு விருந்து, எளிமையாக இருந்தது. விருந்து முடிந்தது. விழாவுக்கு வந்திருந்தோர் கலைந்தனர். இன்ப நினைவுகளோடு இளைப்பாறிக் கொண்டிருந்தார் பொன்னம்பலம்.

'என்ன கல்யாணச் சாப்பாடோ! —எது கேட்டாலும் இல்லைங்கறாங்க. பிறகு எதுக்கு சாப்பாட்டுக்கு அழைக்கணும்?'

'முதல் பந்தியோட நெய் தீர்ந்து போச்சாம்.'

'அது மட்டுமா? அடுத்த பந்தியிலே உட்கார்ந்தவர்களுக்கெல்லாம் அப்பளம் போடலே!'

'நல்ல வேளை சாப்பாடு தீர்ந்து போச்சுன்னு சொல்லலே!'

'சர்க்கரை சரியா போடலேன்னா —பாயசம்னு எதுக்கு சொல்லணும்?'

''பொன்னம்பலம் ரொம்பக் கெட்டிக்காரர். சம்பந்தி வீட்டாரை சரியா கவனிச்சுட்டார். மத்தவங்களெல்லாம் இருந்ததை சாப்பிட்டாங்க''

இப்படிப் பல விமர்சனங்கள் பொன்னம்பலம் வீட்டுத் திருமணச் சாப்பாட்டைப்பற்றிக் கூறப்பட்டன. மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த பொன்னம்பலத்திற்கு இந்த விமர்சனங்கள் தெரிய வந்தவுடன் அவரது மகிழ்ச்சி மறைந்தது; மனம் கலங்கினார், பொன்னம்பலம்,

ஆனால் அவர் என்ன செய்வார் பாவம்! அவர் ஓர் ஏழை—எப்படியோ பொன்னியின் திருமணத்தை முடித்துவிட்டார்.

மணவிழாவிற்கு வந்தவருக்கெல்லாம் மனநிறைவு ஏற்படும்படி விருந்து படைக்க—பொன்னம்பலம் செல்வச் சீமானா என்ன!......

பொன்னம்பலத்தின் கண்கள் கலங்கின. அவரது உதடுகள் லேசாக அசைந்தன. ''ஏழை வீட்டுத் திருமணத்தில் எல்லாரையும் மனநிறைவு படுத்த முடியாது'' — பொன்னம்பலம் அமைதியாகக் கூறினார்!

ஏழை பொன்னம்பலத்தின் நிலையில்தான் இந்த ஏழை அரசு—தமிழகஅரசு இருக்கிறது. எல்லாருக்கும் நல்வாழ்வு அளிக்க வேண்டும். பிணியிலிருந்துமக்களைக் காக்கவேண்டும், என்ற உயர்ந்த லட்சியத்தோடு உழைத்து வருகின்றது தமிழக அரசு. இருக்கின்ற நிதி வசதியோ குறைவு. ஆனால் பெருகிவரும் மக்களின் தேவையோ வளர்ந்துகொண்டே செல்கின்றது. எனவே எத்தனை மருத்துவமனைகள் துவக்கினாலும் —மருத்துவ வசதியை முழுமையாகப் பெறாத மக்களின் தொகை கணிசமாக இருக்கின்றது. மக்கள் தொகைக்கேற்ற அளவு மருத்துவர்கள் இல்லை; மருத்துவ மனைகள் இல்லை; மருத்துவ மனைகளில் தேவைக்கேற்ற படுக்கைகள் இல்லை; இந்த நிலைமைகளை மாற்றி அமைக்க அரசு பலகோடி ரூபாய்களைச் செலவழித்து வருகிறது.

மருத்துவர்கள் பெருகவேண்டுமென்றால் முதலில் மருத்துவக் கல்லூரிகளில் எல்லாவித மான வசதிகளும் பெருக வேண்டும். எனவே சென்னையில் உள்ள மூன்று மருத்துவக் கல்லூரிகளிலும், மதுரை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிகளிலும் பல்வேறு வகையான கட்டட வேலைகளை மேற்கொள்ள 1971–72-ல் ரூ. 31·77 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மருத்துவ மனைகள், மருந்தகங்கள் ஆகியவை அடங்கிய திட்டங்களுக்காக நான்காவது

ஐந்தாண்டுத் திட்டத்தில் 823 இலட்சம் ரூபாய் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப் பணிகளுக்காக 1971-72-ஆம் ஆண்டில் 186·80 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

1970-71-ஆம் ஆண்டில் 347 மருத்துவமனைகளும் மருந்தகங் களும் செயல்பட்டு வந்தன. 21,324 படுக்கைகள் இருந்தன. இவை 1971-72-ஆம் ஆண்டில் 355 மருத்துவ மனைகளும், மருந்தகங்களுமாக, 21,964 படுக்கைகளுமாக உயர, ஆக்கப் பணிகள் மேற்கொள்ளப்படு கின்றன.

'சென்னை அரசினர் மன நோய் மருத்துவ மனையில் முற்றிய நோயாளிகளைக்கவனிக்க புறநோயாளித் தொகுதி'

'சென்னை கீழ்ப்பாக்கம் மருத்து வக் கல்லூரியில் அவசரக் கால அறுவை மருத்துவக்கூடம்'

'அரசினர் பொது மருத்துவ மனையில் எக்ஸ்-கதிர் தொகுதி,' 'முட நீக்கியல் தொகுதிக்கான மூன்றடுக்குக் கட்டடங்கள்' 'அறுவைச் சிகிச்சை மருத்துவக் கூடத்திற்கும், அறுவை மருத் துவப் பின் பராமரிப்புப் பிரிவுக் கும், நரம்பியல் பிரிவிற்கும், குளிர்சாதன வசதி செய்து கொடுத்தது' — இவை யாவும் 1969-70-ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட பணிகள்.

அரசினர் பொது மருத்துவ மனையில் மார்புக் கூடு சிகிச்சைப் பிரிவிற்குச் செயற்கைச் சுவாசக் கருவிகள் நடப்பு ஆண்டிலே வாங்கப்படும்.

1970-71-ல் ஆத்தூர், சிவ கங்கை, திருமங்கலம், விழுப் புரம், உத்தமபாளையம் ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவ மனைகளில் ரூ. 37,000 செலவில் எக்ஸ்-கதிர் பிரிவுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1969-70-ஆம் ஆண்டில் 32 வட்டாரங்களில் ஆரம்பச் சுகா தார நிலையங்கள் கட்டி முடிக்கப் பட்டன. 1970-71-ஆம் ஆண் டில் 26 வட்டாரங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டன. எனினும் 1971-72-ஆம் ஆண்டு இறுதியில் 210 ஆரம்பச் சுகாதார நிலையங் கள் கட்டட வசதி இன்றி இயங்கும். இதற்கெனச்செலவிட உத்தேசித்துள்ள தொகை 64·13 இலட்சம் ரூபாய். தொற்று நோய்களைத் தடுக்க 1971-72-ஆம்ஆண்டில் ரூ. 6·88 லட்சம் செலவு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூலம் 1969-70-ஆம் ஆண்டு 87,239 சிறுவர்களுக்குமருத்துவம் பார்க்கப்பட்டது. 1970-71-ஆம் ஆண்டில் 97,358 சிறுவர்களுக்கு மருத்துவம் பார்க்கப்பட்டது.

அம்மை ஒழிப்புத் திட்டத்திற் காக 1971-72-ஆம் ஆண்டிற்கு ஒதுக்கிய நிதி 21·75 இலட்சம் ரூபாய். 1970-71-ல் 27·10 இலட்சம் பேருக்கு அம்மை குத்தப்பட்டது. 1971-72-ல் மேலும் 15 இலட்சம் பேருக்கு அம்மை குத்த முடிவு செய்யப் பட்டுள்ளது.

முறைக்காய்ச்சல் ஒழிப்புத் திட் டத்திற்கு 1971-72-ஆம் ஆண் டிற்கு 185.40 லட்சம் நிதி ஒதுக் கம் செய்யப்பட்டுள்ளது. தொழு நோயைக் கட்டுப்படுத்துவதற் காக 1971-72-ஆம்ஆண்டு 15·41 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. எலும்பு உருக்கி நோயைக் கட்டுப்படுத்த 1971-72-ஆம் ஆண்டிற்கு ரூ. 15 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வுத் துறை யினரால் ஆற்றப்படும் பல பணிகளில் சில மட்டுமே மேலே கூறப்பட்டுள்ளன. இன்னும் எத்தனையோ திட்டங்கள் மக்கள் நல்வாழ்விற்காக நிறைவேற்றப் படுகின்றன.

இருப்பினும், ஏழை வீட்டுத் திருமணத்தில் எப்படி எல்லா ரையும் மனநிறைவு கொள்ளும் படிச் செய்ய முடியவில்லையோ அதுபோல இந்த அரசு ஆற்றி வரும் பணிகளுக்கு மேலாக மக்கள் பெருக்கம் உள்ள கார ணத்தால், தேவையான அளவு மருத்துவம் பெற்றோம் என்ற மனநிறைவு எல்லாருக்கும் ஏற்படுத்த முடியவில்லை.

ஏழை பொன்னம்பலத்தின் தனிப்பட்ட வீட்டுப் பிரச்சினை— அவரது மகள் பொன்னியின் மணவாழ்விற்காக அளிக்கப்பட்ட விருந்து. ஆகவே எல்லாரையும் மன நிறைவு கொள்ளும்படிச் செய்ய முடியாதென அவர் விட்டுவிட்டார்.

ஆனால் நாட்டுப் பிரச்சினை அப்படி அல்லவே! அனைவருக்கும் மருத்துவ வசதி அளிக்க வேண் டும். ஆனால் நிதி வசதியோ வெகு குறைவு. அதற்காக நல்வாழ்வுக்கான நடவடிக்கை களைத் தொடராமல் விட்டுவிட முடியுமா?

ஆகவே இப்படிச் செய்தால் என்ன என்ற வினாவை எழுப்பு கிறார் நல்வாழ்வுத்துறை அமைச் சர் பேராசிரியர் அன்பழகன்.

"உள்ளபடியே நாட்டில் மக்க ளுக்கு மருத்துவ வசதிகளைச் செய்ய நாங்கள் கடமைப் பட்டிருக்கிறோம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் மக்கள் எல்லாவற்றையும் அர சாங்கத்திடம் எதிர்பார்ப்பது நியாயமான உரிமை அல்ல என்பதை நான் உணர்த்திக் காட்ட விரும்புகிறேன்.

"நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாவது ஒரு நாட்டுக்குப் பெருமையல்ல. ஆனால் அந்த நோயாளிகளுக்கு வைத்தியம் செய்யாமலிருப்பதும் நாட்டிற் குப் பெருமையல்ல. எனவே நாங்கள் முயற்சிப்போம், நீங்க ளும் ஒத்துழையுங்கள். அது போலத் திட்டமிட்டு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்குப் புதுக் கட்டடம் கட்டுகின்றோம். சேலம், தர்மபுரி மாவட்டத்தின் மருத் துவத் துறைக் கட்டடங்களையெல் லாம் கட்டுவதற்கான பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிற நிர் வாகப் பொறியாளரைப் பார்த்த போது அவர் தெரிவித்தார். ஏறத்தாழ முப்பத்தைந்து இடங் களில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் பத்து இடங்களில் கட்டுவதற்கு இடம் தேடிக் கொண்டு இருக்கிறோம். சில இடங்களில் பாதி ஆகிவிட்டது. சில இடங்களில் முக்கால் ஆகி விட்டது. இரண்டு மாதத்தில் அவையெல்லாம் திறந்துவைக்க முடியும் என்று தெரிவித்தார். நான் சொல்வது பல்வேறு வகையான மருத்துவ மனைகள். குடும்பக் கட்டுப்பாடு நிலையம், ஆரம்பச் சுகாதார நிலையம்,

குடும்பக் கட்டுப்பாடு துணை நிலையம், இன்னும் அரசாங்க மருத்துவ மனையிலே சில பகுதிகள் இப்படிப் பலவற்றைக் கட்ட முயற்சிப்பது, நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆனால் எவ்வளவுதான் நடைபெற்றாலும் போதவில்லை என்ற குறையைப் போக்க நான் உங்களிடத்தில் வேண்டிக் கொள்வேன். எங்கேனும் பொது மக்களுக்ளுக்குத் தொண்டாற்றுகிற பெரியவர்களிடமிருந்து அவர்கள் வழி நடத்திச் செல்வதாக இருந்தால், ஒரு பத்துக் கிராமத்தை இணைத்து ஆயிரம் குடும்பத்தைச் சந்தாதாரர்களாகச் சேர்த்து ஒரு குடும்பத்துக்கு ஒரு ரூபாய் சந்தா வைத்து, வசதியுள்ளவர்கள் மாதம் ஐந்து ரூபாய், பத்து ரூபாய்களாகச் தந்து, மாதம் இரண்டாயிரம் ரூபாய் வசூலித்து ஒரு ஐநூறு-அறுநூறு பெறுகிற நல்ல தகுதியுள்ள டாக்டருக்குக்கூட டாக்டர் என்ற முறையில் ஒரு நாளைக்கு நாலுமணி நேரம் இந்த மருத்துவ மனைக்கு வரவேண்டிய முறையில் அவரை வரச்சொல்லி, முந்நூறு ரூபாய், முந்நூற்றைம்பது ரூபாய் வழங்கி அந்த நேரத்தில் அந்த மருத்துவ மனையில் அந்த ஆயிரம் குடும்பத்திற்குத் தேவையான எல்லா மருத்துவத்தையும் முறைப்படி அந்தக் குடும்பத்தை நன்றாகத் தெரிந்து கொண்டு நோய் நீக்கலாம்.

‘‘தொழிலாளர்களுக்கென்று அவர்களுக்குத் தரப்படுகிற சம்பளத்தில் சிறு தொகையைப் பிடித்து வைத்து, திட்டத்தை ஏற்படுத்தி மேட்டூரில் இதற்கென மருத்துவமனை அண்மையிலே துவக்கி வைக்கப்பட்டது. குறிப்பிட்ட ஆலைகளில் வேலை செய்பவர்களாக இருப்பவர்களுக்கும், அதைப்போலத் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கும் அவர்களின் வருமானத்திலிருந்து நூற்றுக்கு ஒரு பங்கு எடுத்து, அவர்களுக்கு நூற்றுக்கு ஐந்து பங்கு பலன் கிடைக்கக்கூடிய அளவிற்கு அந்தத் திட்டம் நிறைவேறுகிறது. ஆனால் கிராமத்தில் வாழுகின்ற மக்கள், ஏராளமான தொழிலிலே ஈடுபட்டுள்ள மக்கள், அவர்களெல்லாம் சேர்ந்து நடத்தக் கூடிய இந்தத் திட்டத்தைச் சென்னை நகரத்தில் அதற்குப் பக்கத்திலுள்ள பரங்கிமலையில் அங்கேயெல்லாம் ‘‘வாலெண்டரி ஹெல்த் சர்வீஸ்’’ என்ற பெயராலே நிறைவேறிக் கொண்டு இருக்கிறது. எனவே பொதுமக்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து தரவேண்டும் என ஆர்வமுள்ளவர்கள் ஒருமுறை, ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர், கூட ஒரு வட்டாரத்தைத் தேர்ந்தெடுத்து சிறு கிராமத்திலுள்ள ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்தாற் போல சில பகுதிகளைச் சேர்த்து, ஒரு மாதம் ஆயிரம், இரண்டாயிரம் சந்தா பிரிக்க ஏற்பாடு செய்து அந்த ஒவ்வொரு குடும்பத்தில் உள்ளவர்களுக்கும், குழந்தைகளுக்கும், குழந்தைகளிலிருந்து பெரியோர்கள் வரை எந்த நோய் வந்தாலும் பக்குவமான மருத்துவத்தை வழங்குவதற்கு முயற்சிக்கலாம். அப்படி ஏதேனும் ஒரு திட்டம் உருவானால், அதை ஏற்றுக்கொண்டு எந்தத் தொகுதியில் செய்ய முற்பட்டாலும் அதை அரசாங்கம் எந்த வகையில் ஆதரிக்கலாம் என்பதை எண்ணிப் பார்த்து ஆதரவு தரும் என நான் தெரிவித்துக் கொள்கிறேன். இவையெல்லாம் நல்ல முற்போக்கான ஒரு சமுதாயத்தில் சாதாரணமாகும்.

‘‘மருத்துவம் என்று சொன்னால் இலவசமாகத்தான் இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் மேல்நாட்டில்—ஓர் அளவுக்குக் கீர்த்தி பெற்ற நாட்டில் எளிய மருத்துவத்திற்கு அரசாங்கம் செலவழிக்கத் தேவையில்லை. ‘நானே செலவழித்துக்கொண்டு நடத்திக் கொள்வேன்’—என்று சொல்வதைப் பெருமை என்று கருதுகிறார்கள். ‘தன் உதவி’ என்ற முறையில் தன் முயற்சி, தன் தொழில், தனக்குத்தானே காப்பாற்றிக் கொள்கிற திறமை உண்டு என்ற நம்பிக்கையின் அடிப்படையில் செயலாற்றுகிறார்கள்.

நம்முடைய நாடு பின்தங்கிக் கிடந்த நாடு. அறியாமையில் அகப்பட்டுக்கொண்ட நாடு. தெளிவான முன்னேற்றத்தைக் காணாத நாடு என்ற நிலையிலே இருந்த காரணத்தினால் அன்றைய சூழ்நிலைப்படி அரசாங்க மருத்துவ மனைகள் மட்டுந்தான் திறக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டன. எனவே தோன்றி இருக்கின்றன!

என் உயிரைக் காக்க நான் செலவழிக்கக்கூடாதா? என் உயிர் காக்க நான் என் வருமானத்தில் ஒரு பங்கு செலவழிக்கக் கூடாதா? என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் செலவைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? நான் நூற்றுக் கணக்காகச் சம்பாதித்தால்கூட ஓர் ஐந்து ரூபாய் நோயாளிக்கு மருத்துவச் செலவுக்குப் பயன்படுத்தக் கூடாதா? என்று எண்ணிப் பார்க்கிற சமுதாயத்தில் இந்தச் செலவெல்லாம் வெகு சாதாரணம். சென்னையிலுள்ள ‘‘வாலெண்டரி ஹெல்த் சர்வீசைப்’’ பார்த்தோமேயானால் இந்த எண்ணத்தில் புது நம்பிக்கை பெறக்கூடும்.’’

அமைச்சர் வழிகாட்டியுள்ளார். ஆக்கப் பணிகளைத் துவக்க வேண்டியது மக்களன்றோ!

அரசு கட்டிடும் மருத்துவ மனைகள் ஒருபுறம்! மறுபுறம் மக்களால் நிறுவப்படும் மருத்துவ மனைகள்!! இப்படி இரட்டைக் குழல் துப்பாக்கி வெடிக்க ஆரம்பித்தால் பிணிக்கு இங்கே இடமேது!




மிதக்கும் கலங்கரை விளக்கம் ஒன்று அண்மையில் பிரிட்டனில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது! இதனை, கடலுக்குள் எவ்வளவு தொலைவில் வேண்டுமானாலும் நிறுத்திவைத்து, நடுக்கடலில் செல்லும் கப்பல்களுக்குத் திசை காட்டப் பயன்படுத்தலாம். இது, தானே இயங்கக்கூடியது. இப்போது கடற் சோதனையில் உள்ளது.

இந்தக் கலங்கரை விளக்கத்தின் இயக்கத்தைத் தரையிலிருந்தே கட்டுப்படுத்த முடியும். தரையில் எழுப்பப்படுகிற கலங்கரை விளக்கத்திற்கு ஆகும் செலவில் பாதிதான் இந்த மிதக்கும் கலங்கரை விளக்கத்திற்கும் ஆகும். பராமரிப்புச் செலவிலும் மிகப் பெருமடங்கு குறையும்.

# டைதேன் எம் 45

உலகெங்கிலுமுள்ள விவசாயி
களிடையே மிகவும் பிரபலமான
காளான் கொல்லி, டைதேன்
எம் 45 தான். அது, பெரும்
பான்மையான பயிர்களின்
அதிகபட்ச நோய்களைக் கட்டுப்
படுத்துகிறது. மழை, நீர்ப்
பாசனம் இவற்றினால்
கரைந்து விடுவதில்லை.
டைதேன் எம் 45, விதைகளின்
விதை கலவையாக உபயோ
கிக்க 100 கிராம் பாக்கெட்டு
களில் கிடைக்கிறது.

மட்டுமே
பெரும்பான்மையான
பயிர்களைப் பாது
காக்கக்கூடியது...
மென்மையான
பயிர்களுக்கு சாலச்
சிறந்தது!




இண்டோஃபில் கெமிக்கல்ஸ்
லிமிடெட்
பம்பாய்-25, இந்தியா

DITHANE என்ற பெயரும் :.ப்ளாஸ்க்
சின்னமும் ரோம் அண்ட் ஹாஸ் கோ/
பிலாடெல்பியா, பா., வின் டிரேட் மார்க்குகள்.
இவை யு. எஸ். ஏ. யிலும் இதர நாடுகளிலும்
ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை.

# திருவாளர் பொன்மொழியார்

## 'இளவல்'




"பஞ்ஜெ பல்லளெ ஹொரிகெய நோவன்னு"—இது கன்னடப் பழமொழி.

இதையே தெலுங்கில் சொல்லுவாங்க "கொட்டு ராலிகி தெலியுநா பிட்ட பாத" என்று.

—இப்படி இடம் தெரியாமல், நேரம் அறியாமல் தன்னுடைய பழமொழியில் பலமொழி அறிவைக் காட்டிக்கொள்ளும் வழக்கம் பூகம்பசாமிக்கு உண்டு. ஆனல், இந்தச் சந்தர்ப்பத்தில் காரணத்தோடுதான் பூகம்பசாமி பேசினர். தான் பேசுவது அருந்ததிக்குப் புரிந்துவிடக்கூடாது என்பதால்தான்.

'கல்லேக் கிள்ளினல் கைதான் நோகும்' என்னும் மொழி திடீரென்று நினைவுக்கு வந்தவராய் அருந்ததியுடன் மேலும் பேச்சைத் தொடராமல் பூகம்பசாமி சொன்னதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் வேகமாக வெளியே வந்தார், பொன்மொழியார்.

அருமை நண்பருக்கு ஆறுதல் சொல்லும் முறையில் அவரிடம் சொன்னர் "அந்தப்பழமொழியை மலேயாளத்தில் 'மச்சி அறியுமோ ஈற்று நோவு' என்பார்கள்."

பொன்மொழியார் பதிலேதும் பேசாது விறுவிறு என்று வீதியில் இறங்கி நடந்தார். அப்பொழுதுதான் அருகில் அருந்ததி இல்லே என்பதை உணர்ந்து தன் பழமொழியைத் தமிழில் சொன்னர்: "மலடிக்குத் தெரியுமோ மகப்பேறு வருத்தம்' என்பதுதான் அந்தப் பழமொழியின் அர்த்தம். "அந்த அறிவுக் களஞ்சியங்களேப்




பறி கொடுத்த துயரம் அருந்ததிக்குப் புரியுமா? இன்று அருந்ததியை எதிர்த்துப் பேசியது மாதிரி ஆரம்பத்திலேயே பேசியிருந்தால் இப்படி நடக்குமா?'' என்று தொடர்ந்து பேசிக்கொண்டே பொன்மொழியாருடன் நடந்தார் பூகம்பசாமி.

பொன்மொழியார் எதுவும் பேசாமல் நடந்தார். எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம் என்பது அறியாமல் போனார். ஆனால், அவருடைய இலக்கிய உள்ளம் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று எடுத்துரைத்தது. 'ஆலை வாயிலே போன கரும்பாய்' தன்னுடைய புத்தகங்களாகிவிட்டனவே என்ற எண்ணத்துடன் நடந்தார். தள்ளாடினார். தள்ளாடிக் கொண்டே நடந்தார். மெதுவான குரலில் பேசத் தொடங்கினார்.

''பேய் செய்ய முடியாததைப் பெண்ணால் செய்யமுடியும்' என்பதை நிரூபித்துவிட்டாள் அருந்ததி.''

நண்பரின் மன வேதனையை உணர்ந்த பூகம்பசாமி, ''பொன்மொழி, அங்கேரி நாட்டுப் பழமொழி என்று நீ அடிக்கடி ஒன்று கூறுவாயே,'நன்மை செய்தாலும் சரி, தீமை செய்தாலும் சரி, ஒருவன் அதைத் தனக்கே செய்கிறான்' என்று. அதுபோல இப்பொழுது அருந்ததி செய்திருக்கிறாள். வினை விதைத்தவள் வினை தான் அறுப்பாள்'' என்று ஆறுதல் கூறினார்.

ஆறுதல் மொழியால் தேறிவிடுமோ பொன்மொழியாரின் வேதனை? அந்த வேதனை வார்த்தைகளாக வெடித்தது.

''பூகம்பம், மரம் கோடாரியைப் பார்த்துச் சொல்லிற்றாம்; 'நான் உனக்குக் கைப்பிடியைத் தராதிருந்தால், நீ என்னை வெட்ட முடியாது!' என்று. அதுபோல அருந்ததிக்கு நான் இடம் தராமலிருந்தால் இப்படி வேதனையை அனுபவிக்க வேண்டியிருந்திருக்காது. இப்ப நாம் என்ன செய்றது?'' —வழக்கத்துக்கு மாறாக, செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றிப் பேசினார்.

''ஆமாம், வேறெ எங்கே அந்தப் புத்தகங்கள் இருக்கும். . .? தட்டுத் தூக்கி தாமோதரன் கடையில் யாராவது வாங்கிக் கொண்டு போட்டிருக்க வேண்டும், அல்லது பஞ்சாமிர்தத்தின் பழைய பேப்பர் கடையில் இருக்கும்; அங்கேபோய்ப் பார்க்கலாம்.''

**3**

திடீரென புத்திசாலித்தனத்துடன் பேசிய பூகம்பசாமியைத் திரும்பிப் பார்த்தார் பொன்மொழியார். அந்தப் பார்வை சொல்லிற்று ''நீ பூகம்பசாமிதானா'' என்று.

'' சரி, சரி, வேகமாகப் போவோம்'' என்றுமுதலில் தட்டுத் தூக்கி தாமோதரன் கடையை நோக்கிப்புளியந்தோப்புக்கு நடந்தார்கள்.

புளியந்தோப்பு தாமோதரன் கடை, அந்தப் பக்கத்தில் 'புகழ் வாய்ந்த' பழைய பேப்பர் கடையாகும். 'கடைசிப் பல் இருக்கும் வரை நரிக்குப் பக்தி ஏற்படாது' என்பார்களே, அது போன்று கடைசித் துண்டுத்தாள் இருக்கும் வரை அவர் தொழிலில் தொய்வு இருக்காது. சுவரிலிருந்து கிழிக்கப்பட்ட துண்டுத் தாள்களைக் கூட வாங்கக்கூடிய தாராள மனமுடையவர் தாமோதரன். அந்தக் காலத்தில் தட்டுத் தூக்கிப் பேப்பர் வாங்கியதால் 'தட்டுத் தூக்கி' தாமோதரன் கடை என்றால் புளியந்தோப்பு, சூளைப் பகுதியில் அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள்.

அவர் கடைநோக்கி, 'போகாத இடந்தனில் போவதைப்போல்' பூகம்பசாமி பின் வர முன் நடந்தார் பொன்மொழியார்.

அந்தக் கடையில் நுழையும் பொழுதே கண்ணீர் பொன்மொழியார் கண்ணில் திரண்டது. வழக்கம் போல 'சிரிக்கிற பெண்ணையும் அழுகிற ஆணையும் நம்பாதே!' என்ற ரஷ்யப் பழமொழியும் நினைவுக்கு வந்தது. ஆகவே, அழுகையை அடக்கிக்கொண்டார்.

பொன்மொழியாருக்கு முன்னால் பூகம்பசாமிதான் கடையில் நுழைந்தார். தட்டுத் தூக்கி தாமோதரனுக்கும் பூகம்பத்துக்கும் பழைய நட்பு உண்டு! மசால் வடை நட்பு அது. அந்தக் காலத்தில் தெருக்கோடி மசால்வடைக் கடையில் இருவரும் மசால்வடை வாங்கிச் சாப்பிடுவார்கள். அந்த உரிமையுடன் தாமோதரனைப் பார்த்துப் பேசினார்.

''தாமோதரா! இன்று புதிய புத்தகங்கள் ஏதாவது உன் கடைக்கு வந்ததா? அவைகளை அப்படியே திருப்பி எடைக்கு எடுத்துக்கிறோம்''.

''இப்ப எங்கே பூகம்பம், நமக்கு வியாபாரம் நடக்குது? பஞ்சாமிர்தம் தான் 10 பைசா கிலோவுக்கு அதிகமாகத் தருகிறானும். சிவகாசியிலே பட்டாசு செய்யப் பழைய பேப்பர் சப்ளை பண்ண அவன் காண்டிராக்ட் எடுத்திருக்கிறான். ஆகவே, அவன் கடையிலேதான் பழைய புத்தகங்கள் நிறைய வருது! எல்லாரும் அங்கே எடுத்துக் கொண்டுபோய்ப் போடுறாங்க..''

''பஞ்சாமிர்தம் எதையும் அதிக விலை சொல்லுவானே.... சரி, இருந்தாலும் நாங்க அங்கே பார்க்கிறோம்....'' —பூகம்பம் புறப்பட்டார்.

தட்டுத் தூக்கி தாமோதரன், பொன்மொழியாரைப் பொருட்டாகவே மதிக்கவில்லை. பூகம்பத்தோடு பேசினானே தவிர இவரைப் பார்க்கவில்லை. பூகம்பத்தைத் தெரிந்த அளவுக்குத் தன்னைத் தெரியவில்லையே என்று அந்த சோகமான நேரத்தில்கூடப் பொன்மொழியாருக்குத் தன்னைப் பற்றிய நினைவு வந்தது.

'கற்பூர மணத்தைப் பற்றி இந்தத் தாமோதரனுக்கு என்ன தெரியும்?' என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டார்.

'பள்ளிக்கூடத்தில் போய் முட்டுவதால் படிப்பு வருவதில்லை'— என்ற அமெரிக்கப் பழமொழியை வாய்விட்டுச் சொன்னார்.

''என்ன பொன்மொழி?''

''பழைய பேப்பர் கடைக்குப் போய்த் தேடினால் மட்டும் பழைய புத்தகங்கள் கிடைத்துவிடுமா?''

''வேறே எங்கே கிடைக்கும்? பாத்திரக் கடையில் தேடினால் பழைய புத்தகமா கிடைக்கும்! வா....பஞ்சாமிர்தத்துக் கடைக்குப் போவோம்.''

இருவரும் பஞ்சாமிர்தத்தின் பழைய பேப்பர் கடையை நோக்கி நடந்தார்கள்.

பொன்மொழியாருக்கு நடந்து செல்லும்பொழுது அன்றைய நிகழ்ச்சிகள் முழுவதும் நினைவில் ஓடின.

பிற்பகலில் அவருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது.

வீட்டுக்கு வந்தபொழுது விவரம் தெரியாது மகிழ்ந்தார். உடனே வேதனையில் வீழ்ந்தார். பழைய புத்தகக் கடைகளைத் தேடி ஓடும் நிலை.

அப்பப்பா....இந்த உலக வாழ்க்கைதான் எவ்வளவு மோசமானது? 'ஒரு முட்டாள் கடலுக்குள் ஒரு கல்லை வீசினால், நாற்பது அறிஞர்களாலும் அதை வெளியில் கொண்டுவர முடிவதில்லை'. அருந்ததி புத்தகங்களைத் தூக்கி எடைக்குப் போட்டு விட்டாள். எத்தனைபேர் தேடினாலும் உடனே கிடைத்துவிடுமா?

பூகம்பத்திற்கு, பொன்மொழி மௌனமாக நடந்து வருவது வேதனையாக இருந்தது. எனவே அவரைப் பேசவைக்க ஒரு கேள்வி கேட்டார்.

''சீனநாட்டுப் பழமொழி ஒன்று சொல்வாயே பொன்மொழி..?''

தன் துன்பத்தை மறக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பொன்மொழியும் பேசினார்.

''அறியாமையைப் போன்றதொரு குருடுஇல்லை; ''நோயைப் போன்றதொரு பகைவன் இல்லை''—என்ற பழமொழியா?''

''ஆமாம், ஆமாம், அதுதான்'' என்ற பூகம்பத்துக்குத் தன்னைப் பற்றிச் சொல்வதாக இருந்தது. அடிக்கடி அவருக்குக் காக்கா வலிப்பு வரும் அதனால்தான். 'தேன் இனிப்பாக இருந்தாலும் முள்ளோடு நக்க முடியுமா?' அந்தப் பழமொழி உண்மையாக இருந்தாலும் தன்னைப் பற்றிச் சொல்வது போன்று இருந்ததால் பூகம்பத்தால் அனுபவிக்க முடியவில்லை. ஆகவே பேச்சைத் தொடரவில்லை.

பஞ்சாமிர்தத்தின் கடைக்குக் கூட வந்து விட்டார்கள். கடையில் நுழைந்தவுடன் பொன்மொழியாரே கேட்டார்.

கிடைத்த பதிலோ! இன்றைக்கு ஏராளமாகப் புத்தகங்கள் வந்தன. எல்லாவற்றையும் லாரியில் போட்டுச் சிவகாசிக்கு அனுப்பிவிட்டோம்.

''இதோ கடைசி லாரி கூடப் புறப்பட்டு விட்டது''—இந்தச் சொற்களைச் சாதாரணமாகப் பஞ்சாமிர்தம் சொன்னார்.

பஞ்சாமிர்தத்தின் வாயிலிருந்து வந்த ஒவ்வொரு சொல்லும் பாஷாணம் தோய்த்த அம்பாகப் பொன்மொழியார் நெஞ்சில் பாய்ந்தது.

''இன்பமும் துன்பமும் விதியல்ல, தானாகத் தேடிக் கொண்டவை'—என்பதும் சீனத்துப் பழமொழிதான்'' என்றார் பொன்மொழியார்.

பூகம்பம் பதிலேதும் பேசவில்லை. பொன்மொழியாரின் புத்தகங்கள் கிடைக்கும். அதில் ஐந்தாறு புத்தகங்களை இரவல் என்ற பெயரில் வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்று திட்டமிட்டிருந்தார். அவர் எண்ணம் பாழாகிவிட்டது. 'திறமையான நீச்சல்காரனைத் தானே ஆறு அடித்துக்கொண்டு போகிறது!'

அன்றுதிருவனந்தபுரம்போகும் ரயிலில் சிவகாசிக்குப் போகப் புறப்பட்டார்பொன்மொழியார். வசதியாகப் படுக்க அவருக்கு இடம் கிடைத்தது. ஆனால் அவர் மனம் அமைதி கொள்ளவில்லை. கண் உறக்கத்தைத் தேடவில்லை.

தங்கக் கட்டிலில் படுத்திருந்தால் நோயாளியின் நோய் தீர்ந்து விடுமா என்ன?

(தொடரும்)




# 12. காவிரியைக் காத்திடுவோம் காண்.

அரசியல் காழ்ப்பகற்றி அன்னைத்தமிழ் நாட்டின்
உரிமையாம் சங்கொலிக்க ஒன்றிப்—பெருமைதரும்
மேவிநல் வேளாண்மை மேன்மேலும் மேன்மையுறக்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—முப்பாலிகை, நத்தம்.

காடு வயலாகக் கல்லணையைக் கட்டியவன்
பாடு பழுதாகப் பார்ப்போமோ—ஏடுகமழ்
பாவிரிக்கும் பாவலரின் நாவறட்சி யாகாமல்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—புலவர் துரை தில்லான், கோயிலூர்.

புக்ககம் போவாளைப் போகாதே என்பார்போல்
தக்கவளாம் பொன்னி தனைத்தடுக்கும்—சிக்கலுக்குச்
சாவி 'பரணி'யெனில் சங்கொலிக்கக் கைப்பிடித்த
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—அ. வே. காசிநாதன், அமிர்தராயன்கோட்டை.

மங்காப் புகழுடைய மன்னன் கரிகாலன்
பொங்கு கரையமைத்துப் போற்றினன்—இங்கேநாம்
நாவினிக்கப் பேசும் நமது முதல்வருடன்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—காங்கேயன், வெங்கல்பாளையம்.

உரிமைக் குரல்கொடுப்போம் உற்றஇடர் தீர்க்க
அரிமா நடையெடுப்போம்; அஞ்சோம்;—பரிசாகச்
சாவுவந்து நேர்ந்தாலும் சற்றும் சளைக்காது
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—நிலவமுதன், நரிக்கல்பட்டி.

போருக்கோ அஞ்சோம்; புகழுக்கோ மாண்டிடுவோம்
நீருக்குத் தீமையினை நேரவிடோம்—சீர்மிகுந்த
பாரதத்தின் ஒற்றுமைக்குப் பங்கமின்றி இம்மண்ணில்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—கோ. அரங்கபாசியம், திருச்சி.

வான்பொய்த்த போதும் வளம்பொய்க்காப் பொன்னியைத்
தான்துய்த்தால் போதுமென்னும் தன்னலம்—ஏன்வைத்தார்?
நாவிரிப்போம் நட்புக்கே! நாடாவிட் டாற்போரால்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—அ. வை. முத்துச்சாமி, அந்தியூர்.

இந்திரா காந்தியிடம் எப்படியும் நாம்சொல்லிப்
பந்தமுடன் வேண்டுவன பார்த்திட்டுச்—சொந்தமுடன்
பாவிரியச் செய்திட்ட பன்னலமார் நம்மருமைக்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—வித்துவான் உ. குமாரசாமி, பைம்பொழில்.

நீரைத் தடுத்து நெடுமணைகள் கட்டுவதை
நேரத்தே நாம்தடுப்போம்; நீரோடும்—ஓரத்தே
பூவிரிக்கும் காவிரித்துப் பொன்கொழிக்கும் பொன்னியெனும்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—சிவ. அம்பிகாபதி, சென்னை-16.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

திரு முப்பாலிகை,
நத்தம் (அஞ்சல்),
திருப்பத்தூர் (வட்டம்),
வடஆர்க்காடு மாவட்டம்.

நாமவதி கொள்ளவொரு கல்லணைதான் கட்டியதை
ஏமவதித் திட்டமென்பார் மைசூரார்—தாமவதி
பாவியெனக் கொள்வார்காண்! கங்கை தனைக்கொணர்ந்து
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—மருதன், எம்.ஏ.பி.எட்., பழனி.

காவிரித் தோடுகின்ற காவிரியை மைசூரார்
தாவியே கட்டுகின்றார்! தண்டமிழீர்—ஆவிநிகர்
காவிரிநீர் இல்லையெனின் காடாகும் நம்நாடே
காவிரியைக் காத்திடுவோம் காண்!

—புலவர் அ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

பசுமை நலந்தேக்கிப் பைந்தமிழர் பாட்டின்
இசையாய் இனிப்பவளை இன்று—நசையினால்
ஆவலுற்றுத் தாம்தடுத்தல் ஆகிடுமோ? வாதாடிக்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—எழில் மாறன், நரிக்கல்பட்டி.

தேனைத் தமிழில் தெளிக்கும் கலைஞனவன்
தானைப் படைகாக்கும் தங்கமகன்—ஆணையிட்டால்
ஆவி கொடுத்தேனும் ஆவி குடித்தேனும்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—இரா. வைரமுத்து, சென்னை-3.

துஞ்சினால் இந்நிலையில் துன்பம் நமைத்தொடரும்
எஞ்சா(தி) யாவரும்சூள் ஏற்றிடுக—அஞ்சாதீர்
ஆவி துறந்தும் அணையைத் தடுத்தேநாம்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—புலவர் குமரதன்ஒளியான், கண்ணமங்கலம்.

நஞ்சை வளங்கொழித்து நாட்டின் பசிபோக்கத்
தஞ்சைத் தரணியிலே தான்பாய்ந்து—மிஞ்சுபுகழ்ப்
பாவினிலே சேர்ந்து பழம்பெருமை பேசிவரும்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

தாய்க்குத் தடைவிலங்கு தான்போட்டார் மைசூரார் !
சேய்கள்தாம் என்செய்யும்? செம்பயிரின்—பாய்விரிக்கும்
காவிரித்தாய் கண்ணோட்டம் காண்பரோ? எம்நாட்டீர்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

கன்னித் தமிழகத்தின் காவெங்கும் பாய்ந்தோடி
செந்நெல் விளைத்தே செழிப்பாக்கி—என்றென்றும்
பாவிரிக்கும் பைந்தமிழ்ப் பாவலர்தம் நெஞ்சினிக்கும்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—பு. அ. துரைராஜா, இராஜபாளையம்.

ஏரார்ந்த மக்களெல்லாம் இன்பமுடன் வாழ்வதற்குச்
சீரார்ந்த தொண்டரெலாம் சேர்ந்திடுவீர்—ஆராய்ந்து
'பா'விரியச் செய்தே பயிர்களுக்குப் பாலூட்டும்
காவிரியைக் காத்திடுவோம் காண்!

—வே. சு. செல்லத்துரை, புள்ளான்விடுதி.

தஞ்சை திருச்சித் தரணிக்கு நீர்பாய்ச்சும்
நஞ்சைப் பசுமையின் நாயகியை—வஞ்சனையோ?
தாவாவை மீறித் தடுப்போரை நேர்ப்படுத்திக்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—துரைபாண்டுரங்கன், திண்டிவனம்.

குன்றா விளைச்சல் கொடுக்கும் வளத்தஞ்சை
இன்றுபோ லென்றும் எழில்கொழிக்க—ஒன்றிஇவண்
ஆவி கொடுத்தும், அழியா வளம்விளைக்கும்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—ப. நாச்சிமுத்து, ஒட்டன்சத்திரம்.

எண்ணு திருக்கும் இளைஞர்காள் ! உங்களையான்
அண்ணா வழியில் அழைக்கின்றேன்—கண்ணுகப்
பாவிக்கும் பைந்தமிழர் பாழ்ங்குடரை வற்றடியாக்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—புலவர் கரு. சுப்பையா, ம. கல்லூரணி.

சிற்பிக்குக் கைவிலங்கா, தென்றல் வரத்தடையா,
விற்பிடிக்கும் கைக்கு விரற்பூட்டா,—சுற்றிவரும்
காவிரியைக் கட்ட அணைக்கட்டா? அதைநீக்கிக்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—இரா. செயபாலன், (முல்லைதாசன்), சின்னாளபட்டி.

கன்னித் தமிழர் கனக விசயரெனும்
மன்னர் கலங்கவைத்த மாவீரம்—சின்னமெனக்
கூவி நமக்குரிய கொள்கைக் குரல்கொடுத்தால்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—புலவர் சோ. பா. வேதாரண்யம்.

பூவிரிக்கும் சோலைகளும் பொன்விரிக்கும் நெல்வயலும்
பாவிரிக்கும் எங்கள் பரம்பரைதான்!—யார்பறிப்பார்?
நாவிரித்த நல்லறிஞர் நம்அண்ணன் மேலாணை
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—வெ. நடராசன், சுந்தராபுரம்.

ஆட்டனத்தி நீருடே செல்லுகையில் ஆதிமந்தி
பாட்டாலே பாடலுற்று வாட்டமுறக்—காட்டாறு
காவிரிதான் காரணமாய் வீற்றிருந்து பாவேற்க;
காவிரியைக் காத்திடுவோம் காண்!

—புலவர் விக்டர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

பெண்ணுக்குக் குங்குமமாய்ப் பேசு தமிழ்நாட்டு
மண்ணுக்குப் பல்வளமாய், மாமழையாய்—எண்ணற்றோர்
ஆவியென நின்றாள்; அழுங்குழவித் தாயானாள்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—க. சரவணன், திருச்சி-1.

மஞ்சொருநாள் பொய்த்திடினும் மாவட்டத் தஞ்சையினில்
கொஞ்சுகின்ற நெல்மணிகள் குன்றிடுமோ!—செஞ்
[சொல்லாம்
காவியத்துள் ஓராறும் கன்னடத்தார் தேக்குகின்ற
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—இரா. முத்தம்மாள், உமையாள்புரம்.

பூவிரித்துப் புன்னகைப்பாள்! பூந்தமிழைத் தான்வளர்ப்பாள்
பாவிரிக்கும் பாவாணர் பண்பறிவாள்!—காவிரிப்பாள்!
தாவிநிதம் தான்மகிழ்வாள்! தாங்கரிய இன்னலினும்,
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

தக்கமுறை ஆற்றினிலே தண்ணீர் இலையானால்
மிக்கநல வேளாண்மை மேவிடுமோ?—இக்கொடிய
மாவறுமை சேர்க்க வருமிடரை நீக்குதற்கே
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—எம். சிவகுரு, கவரப்பட்டு.

பட்டாக நெல்விளையப் பாய்கின்ற பொன்னியைநாம்
கட்டாந் தரையாகக் காண்போமோ?—மொட்டாக
வாய்விரித்(து) ஏதுபயன்? வாள்விரிக்க நேர்ந்திடினும்
காவிரியைக் காத்திடுவோம் காண் .

—வ. பெ. ராமசாமி, சென்னை-18.

வீட்டிற் கொருவர் வேண்டின் வெளிவருவோம்
நாட்டின் நதிக்குழப்பம் நாம்தீர்ப்போம்—கேட்டிலரேல்
ஆவி உடலீந்தும் அன்னை எனப்போற்றும்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—சோ. பாலசுப்பிரமணியன், மணக்குடி.

சங்கத் தமிழிசைத்துச் சங்கீதம் பாடியே
பொங்கி வருமிந்தப் பூவாறு—எங்களின்
தேவியன்றோ! தையலவள் தெய்வீக நற்பெயராம்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—மு. ஆ. நேயன், வெள்ளியூர்.

பொன்னியில் மைசூர் புதியவணை கட்டுவதால்
கன்னித் தமிழர் கலங்குகிறார்—மென்கொடியே
பாவிரிக்கும் சொற்கலைஞர் பாடிவிட்டார் போர்ப்பரணி
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—அ. மல்லிகா, கோவை-1.

தமிழர்க்குத் தாயாய்; தமிழ்க்கலையின் சாறாய்;
அமிழ்தம் பொழிகின்ற ஆறாய்த்—தமிழகத்தில்
பூவிரித்த மேலாடை போர்த்து நடைபயிலும்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—அ. குழந்தைவேலன், திருவப்பூர்.

தஞ்சைத் தரணி தமிழகத்தின் நெற்கோட்டை
பஞ்சப் பதியாகப் பார்ப்போமோ?—வஞ்சமுடன்
காவிரி யில்மைசூர் கட்டுமணை யைத்தடுத்துக்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—குழ. அண்ணாமலை, கோவை.

பொங்குமுலைப் பாலைப் புகட்ட வருந்தாய்க்குத்
தங்கிப்போ என்றோர் தடையாமோ?—எங்களுக்குத்
தாவிப்பா லூட்டவரும் தாயைத், தமிழ்மகளாம்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—ம. அரிமதி-தென்னகன், புதுச்சேரி-1.

தத்திவரும் வெள்ளலையில் தாவிவரும் பொன்நதியில்
புத்தணைகள் கட்டுவதைத் தானடக்கி—முத்தமிழாம்
பூவிதழால் ஆடையினைப் போர்த்திங் கெழில்கொஞ்சும்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

வரத சண்முகசுந்தரவடிவேலு, ஆத்தூர்.

தங்கம் எனவளர்க்கும் தாய்க்கு மகன் எதிரே
பங்கம்வரின் அங்கம் பதருதா ?—எங்களது
ஆவி கொடுத்தேனும் அன்னையாம் பொன்னியெனும்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—அ. பழனிசாமி, சேலம்-1.

நெல்மலையும் செங்கரும்பும் நித்திலமும் முக்கனியும்
நல்குமெழிற் காவிரியில் நாட்டுகின்ற—வல்லணையால்
தீவிரியும் பாலையெனத் தென்னாடு காயுமம்மா
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—சுப்பு சிவலிங்கம், பொன்னமராவதி.

பூவிரித்த பஞ்சணையில் பூவையரின் மெல்லுடலில்
பாவிரித்து வாழ்ந்ததெல்லாம் போதுமென்போம்—நாவியக்
[கம்
காவிரியைக் காத்திடா தென்றால் களமேறிக்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—கயலரசன், மதுரை-9.

அஞ்சாமல் கூடி அணைகட்டி நம்மையெல்லாம்
வஞ்சிக்கப் பார்க்கின்றார் மைசூரார்—விஞ்சுபுகழ்
பூவிரித்துப் பொன்குவிக்கும் பொன்னியென்னும் அன்னைநிகர்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

பூவிரித்த பூம்பொழிலைப், போதவிழ்த்த தேமலரைக்,
காவிரித்த காவிரியைக் கன்னியென—ஆவலுடன்
பாவிரித்திங் கென்னபயன் பாவலரே! சாவிரித்தும்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—செ. பாலசுந்தரம், சென்னை-

எங்கள் சிலம்பில் இளங்கோ உரைத்ததுபோல்
பொங்கும் புதுப்புனலாய்ப் ''பொன்னி''யெனும்—மங்கை
[யவள்
பூவிரித்து நஞ்சையெலாம் பொன்கொழிக்க வைப்பதெண்ணிக்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—நெல்லை ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

செந்தமிழ ரைப்பழித்த சேய வடவர்தம்
செந்தலையில் கல்லேற்றிச் சீர்பெற்ற—முந்தையர்மேல்
நாவிரிக்கும் சூளோடு நம்கலைஞர் பின்னேகிக்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—வாசுகி, மாங்குடி.

வீரமிகு வேந்தர் மடிவளர்ந்த இன்றமிழ்த்தாய்
ஆரமென மின்னும் அணிகலத்தை,—ஓரமெலாம்
பூவிரியுஞ் சோலைகளிற் பொன்வண்(டு) இசைபாடுங்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—கு. பிரான்சிஸ், சென்னை-11

ஆவி பிரிந்தாலும் அன்னை நதிகாக்கத்
தாவிக் குதித்தே தழலாவோம்—ஓவியமாம்
பாவை விடைகொடுக்கப் பைந்தமிழா நீவந்தால்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—அ. வைத்தியலிங்கம், மண்டபம் முகாம்

பூவிரித்துப் பொங்கும் புனலார்த்துப் பூமிதனில்
பாவிரித்துப் பாடவரும் பாவையே!—காவிரித்து
நாவிரித்துப் பாடவரும் நற்றமிழர் சீர்காக்கும்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—ஆ. சுப்பிரமணியன், அணியாப்பூர்.

வந்தாரை வாழ்விக்கும் வற்றா வளங்கொண்ட
செந்தமிழர் நாட்டுக்குச் சிக்கலா?—அந்நாளில்
பாவிரித்த பேரெல்லாம் பாழோ? உயிர்கொடுத்தும்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—ந. விசுவநாதன், திருச்சி-1

எல்லைக்கோ டிங்கில்லை எல்லாரும் இந்தியரே
சொல்லாதே பேதமென்று ''சொன்னவர்கள்''—இல்லையடா
பூரித்துப் பொன்னிதரும் நீரென்றால் போரிட்டுக்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—புலவர் ஆடுவாசனைமரியான், தூத்துக்குடி.

ஏர்சிறக்கப் பாடுபடும் ஏர்மிக்க அன்னைதனைப்
பார்மேல் அணையிடும் பாங்குதனைக்—கார்முகிலும்
நாவிரித்தே ஓலமிட்டுக் கண்டு நடுங்கிடுமே
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—நா. பாலு, தேவகோட்டை.

பாவிரிக்கும் பாவலரும் பண்பொடுசேர் தோள்வலரும்
நாவிரித்துப் போராட நன்றுளரே!—பூவிரித்துக்
காவிரிக்கும் நற்புனலாம் கன்னித் தமிழாறும்,
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—சோ. முத்துமாணிக்கம், அமரபூண்டி.

தமிழரசு அளிக்கும்
செய்தி விளம்பரத்துறை

# வெள்ளி விழா மலர்

வரலாற்றுப் பெட்டகம்!
இலக்கியப் பேழை!
வண்ணக் களஞ்சியம்
என்று
எல்லாரும் போற்றும்
வண்ணம், பல்வகைச்
சிறப்புடன் தயாராகிறது!

பல்துறை அறிஞர்கள்
வல்லுநர்கள்,
எழுத்தாளர்கள்,
அனைவரும்
எழுதுகிறார்கள்!
இதில்.....
இல்லாதது
எதுவுமே
இல்லை!

.. இப்பொழுதே
உங்கள் பிரதிக்கு
விற்பனையாளரிடம்
பதிவு செய்க

முன்னிலாப் புதுமுறையில்
தன்னந்தனிச் சிறப்போடு வெளிவரும்

முத்து




அன்புக் குழந்தைகளே !

அருமை ஆசிரியர்களே !

எல்லாருக்கும் என் அன்பு வணக்கம். நான் சென்னை வானொலிக் கூடத்திலிருந்து பேசுகிறேன். நீங்கள் நம் மாநிலத்திலுள்ள பல பள்ளிகளிலிருந்து நான் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

கல்வி ஒலிபரப்பு கடந்த சில ஆண்டுகளாகப் பயனுள்ள திட்டமாக நம் தமிழ் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு உங்களுக்கு அப்படிக் கல்வி கற்பிக்கும் திட்டத்தை இந்த வானொலியின் மூலம் துவக்கி வைப்பதில் நான் கல்வி அமைச்சர் என்ற முறையில் பூரிப்படைகிறேன் ! பெருமைப்படுகிறேன் ! !

குழந்தைகளே ........ ! நீங்கள் வானொலியின் மூலம் நாடகம் கேட்கலாம் ; நாட்டுச் செய்தி அறியலாம் ; பேச்சுக் கேட்கலாம் ; கதை அறியலாம் ; கவிதை கேட்கலாம் ; காவியம் நுகரலாம் ; இவற்றோடு கூட நீங்கள் கல்வியும் பயிலலாம்.

நீங்கள் பள்ளியில் பயிலும் பருவம் மிகவும் சிறப்புடையது. உங்கள் உடல் உறுப்புகள் நல்ல வளர்ச்சிபெற்று, பல இயல் பூக்கங்கள் உங்களைப் பல திக்குகளில் செலுத்த முற்படுகின்றன. மாணவப் பருவம் மீண்டும் கிடைக்காத பருவம். பொன் போல் போற்றிப் பயன்படுத்த வேண்டிய பருவம். கிடைத்தற்கரிய வாய்ப்புகளையுடைய பருவம். கற்க வேண்டியதெல்லாம் கற்றுப், பெற வேண்டிய திறமையை எல்லாம் பெற்று, தேடிக் கொள்ள வேண்டியன எல்லாம் தேடிக் கொள்ளத் தக்க பருவம். ஆகவே, இப்பருவத்தில் கல்வி என்ற செல்வத்தை நீங்கள் தவறாமல் பெற வேண்டும்.

'' மாண்பினைப் பெறுபவர்கள் '' என்ற பொருள் தருவது மாணவர்கள் என்ற பெயராகும். உங்களுடைய நன்மைக்காக நீங்கள் செயல்பட வேண்டுகிறேன். ''வெட்டி வா '' ! என்றால் கட்டி வரும் காளையர் நீங்கள். உங்களால் முடியாதது எதுவும் இல்லை. பள்ளி செல்லாமல் ஊர் சுற்றித் திரியும் மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்து வாருங்கள். நண்பனுக்கு உதவுகிறோம் என்ற நல்லுணர்வில் இதனைச் செய்யுங்கள்.

பள்ளிப் பருவத்தில் நன்றாகப் படியுங்கள். நாள்தோறும் பள்ளிக்குச் செல்லுங்கள். ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதைக் கேளுங்கள் ; அதோடு அன்றாடம் வானொலி உங்களுக்குச் சொல்லிக் கொடுப்பதையும் உன்னிப்புடன் கேளுங்கள்.

பள்ளியில் ஆசிரியர் உங்களுக்குப் பல முறைகளைப் பின்பற்றிக் கற்பிக்க முயற்சிக்கின்றார். பாடத்திற்கு ஏற்ற துணைக் கருவிகளையும் பயன்படுத்துகின்றார். வாய்மொழி மூலம் கற்பிப்பதை விடக் காட்சி, கேள்வி மூலம் கற்றல் மிகச் சிறப்புடையது. அதுவே கற்றலுக்குச் சிறந்த துணைக் கருவியாகும். வானொலி மூலம் நீங்கள் அறிவைப் பெறுவது மிக எளிய முறையாகும். பெற்ற அறிவை வைத்துக் கொண்டு அதனைச் சொல்லிக் காட்டவும், செய்து காட்டவும் நீங்கள் பழக வேண்டியிருக்கிறது.

அறிந்த அறிவை வெளிப்படுத்துவதே ஆற்றலாகும். அறிவையும், ஆற்றலையும் ஒழுங்குபடுத்திச் சீராக்கிச் செம்மைப் படுத்திப் பண்படுத்துவதே பண்பாடு ஆகும்.

# "வையகமே வகுப்பு அறைக்குள்..."

## கல்வியமைச்சர் நாவலர் இரா.நெடுஞ்செழியன்.

வானொலியின் சிறப்புக் கூறுகளை நீங்கள் நன்கு அறிவீர்கள். சிறந்த பேச்சாளர்களின் சொற்பொழிவுகள் — வெளிநாடுகள் சென்றுதிரும்பியவர்களின் அனுபவங்கள்; நிலவுப் பயணத்தின் செய்திகள்; அறிவியல், மருத்துவம், தொழில் போன்ற பலவிதத் துறைகளில் ஏற்பட்டு வரும் கண்டுபிடிப்புகள்; நமது நாட்டின் பண்பாட்டினை வெளிப்படுத்தும் இசை இலக்கியம், நாடகம் போன்றவை; நாட்டின் வரலாற்று நிகழ்ச்சி ஆகிய அனைத்தும் வானொலியின் மூலம் உங்கள் வகுப்பறையில் கொண்டு வரப்பட்டு நீங்கள் அவைகளைப் பற்றிய பரந்த அறிவைப் பெற வாய்ப்புக்கள் அளிக்கப்படுகின்றன.

நீங்கள் பெறும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு வானொலி சிறந்த ஓர் சாதனமாக அமைகின்றது. பெங்களூரில் உள்ள வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் ஆறும் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிலும் உள்ள ஆங்கிலப் பாடங்களை மாணவர்களுக்குக் கற்பிக்க முன் வந்துள்ளனர்.

சென்ற ஆண்டு ஜூலைத் திங்கள் முதல், வாரந்தோறும் திங்கள், புதன் கிழமைகளில் பகல் 2-10-லிருந்து 2-30 வரை தொடக்கப் பள்ளிகளில் 3, 4 5 ஆம் வகுப்புகளில் பயிலும் சிறுவர்களுக்கு உடல் நலம் பேணும் முறைகள், தேசிய ஒருமைப்பாடு, சேர்ந்து பாடுதல் போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

எல்லாப் பகுதியிலும் உள்ள பள்ளி மாணவர்கள் பயன்பெற வேண்டி இந்த ஆண்டு இன்றுமுதல்

> வானொலியில் கல்வி ஒலிபரப்பைத் துவக்கியபோது கல்வி அமைச்சர் ஆற்றிய உரை.

(ஜூலை 12 ஆம் தேதி) தினமும் 11-40 முதல் 12 மணி வரையிலும் வானொலியில் கற்பிக்கப்படும் பாடச் செய்திகள் மறுமுறையும் மாலையில் 2-04 முதல் 3-20 வரையிலும் நீங்கள் எல்லாரும் கேட்டுப் பயன் பெறுவதற்கு ஒலி பரப்பப்படும். இவ்வாறு ஒரே பாடத்தைக் காலையும், மாலையும் ஒலி பரப்பும் திட்டம் இவ்வாண்டுதான் செயல்முறைக்கு வருகிறது. இதனால் பள்ளிகளில் பாட அட்டவணையில் வானொலிப் பாடம் கேட்கும் நிகழ்ச்சியைச் சேர்த்துக் கொள்ளவும், அதன்படி தவறாது வானொலிப் பாடங்களையும் கேட்கவும் உங்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வாய்ப்பினை அமைத்துக் கொடுத்துள்ள வானொலி நிலையத்தினருக்கு எனது பாராட்டு; நன்றி.



தொடக்கப் பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் இவ்வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வானொலிப் பெட்டிகள் உள்ள தொடக்கப் பள்ளிகள் இந்த நிகழ்ச்சிகளைத் தவறாது கேட்க வேண்டும். பள்ளிப் பாடத் திட்டத்தில் வானொலிக் கல்விப் பயிற்சித் திட்டமும் இடம் பெறும் படி ஒவ்வொரு துவக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியரும் பார்த்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளின் கல்வி சிறப்படைய இந்த ஆண்டின் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சியை மிக்க மிகிழ்ச்சியோடு துவக்கி வைக்கிறேன்.

நன்றி! வணக்கம்!! வாழ்க!!!




ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ் நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக